REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 மார்ச் 28 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 74 | Monday 28,March, 2022 | 20பக்கங்கள் | 30/-

## மின் உற்பத்திக்காக 5,800 மெற்றிக் தொன் எரிபொருள் விநியோகம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



எரிபொருள் மூலம் செயற்படும் மின்சார உற்பத்தி நிலையங்களுக்கு தேவைப்படும் 5,800 மெற்றிக் தொன் எரிபொருளை விநியோகித்துள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது. அது தொடர்பில் 06

### போதைப்பொருள் வர்த்தகம், குற்றச் செயல்கள்:

# வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ள 132 பேருக்கு Interpol சிவப்பு எச்சரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்றுள்ள 132க்கும் அதிகமான நபர்களுக்கு எதிராக 'சர்வதேச பொலிஸ்' சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இலங்கைக்கு போதைப்பொருளை விநியோகிப்போர் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் தொடர்புடைய அதிகளவிலானோர் நாட்டிலிருந்து தப்பிச் சென்று வெளிநாடுகளில் மறைந்து வாழ்கின்றனர். அவர்கள் பெரும்பாலும் ஐக்கிய அரபு இராஜ்ஜியம், துபாய் போன்ற நாடுகளிலேயே மறைந்து வாழ்வதாக அவர் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் விசேட விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**ஐக்கிய அரபு இராஜ்ஜியம் போன்ற நாடுகளிலேயே மறைந்து வாழ்வதாக தகவல்**

சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்படும் போதைப்



பொருள் கடத்தல் மற்றும் வர்த்தகம் தொடர்பில் பொலிஸ் போதைப் பொருள் விசேட செயலணி, சுங்கம் மற்றும் 06



தினகரனின் 90 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு பேருவளையில் நேற்று தினகரன் முப்பெரும் விழா கோலாகலமாக நடைபெற்றது.விழாவுக்கு பிரதம அதிதியாக வருகை தந்த இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த மற்றும் சிறப்பு அதிதியாக பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். தினகரன்/வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தெ.செந்தில் வேலவர், இணை ஆசிரியர் மர்லின் மரிக்கார் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம் – ரஞ்சித் அசங்க)

## இலங்கையிலிருந்து செல்லும் ஈழ அகதிகளுக்கு உதவுங்கள்

தமிழக முதலமைச்சரிடம் செல்வம் எம்.பி கோரிக்கை



06



SLT mobitel அனுசரணையில் 15 ஆவது தடவையாகவும் ஆரம்பமாகவுள்ள பாடசாலைகளுக்கிடையிலான சண்டே ஒப்சேர்வர் கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான அனுசரணையை மொபிடெல் நிறுவனத்தின் பிரதான விற்பனை அதிகாரி ஷஷிக்க சௌரத், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சட்டம் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சட்டத்தரணி ரக்கித்த அபேகுணவர்த்தனவிடம் உத்தியோக பூர்வமாக (24) கையளித்தபோது பிடிக்கப்பட்ட படம். மொபிடெல் நிறுவனத்தின் பொது முகாமையாளர் (விற்பனை//விநியோகம்) சுகத் அபேசிங்க,லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முகாமையாளர் (பிரசாரம்/ அலைவரிசை) சானக்க லியனகே ஆகியோரையும் படத்தில் காணலாம். இந்தப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான கூப்பன்கள் எமது தினகரன், தினமின, டெய்லி நியூஸ், சண்டே ஒப்சேர்வர் பத்திரிகைகளில் வெளிவரும் என்பதுடன் வாரந்தோறும் நடைபெறும் சீட்டிழுப்பில் பணப்பரிசில்களும் வழங்கப்படும்.

## IMF பரிந்துரைகளில் சில நாட்டில் ஏற்கனவே அமுலில் உள்ளன

**இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையை ஆராய்ந்துள்ள இலங்கை மத்திய வங்கி அதில் குறிப்பிடப்பட்டுள்ள சில பரிந்துரைகள் இப்போது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

மேற்படி அறிக்கையானது சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் இலங்கை பொருளாதாரம் தொடர்பில் நீண்ட மற்றும் உள்ளார்த்தமான ஆய்வுகளின் பின் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 21ம் திகதி முதல் இலங்கை நிதிக்கொள்கையை கடினப்படுத்தியுள்ளமை, சட்ட ரீதியான சதவீதத்தை நிர்வகிக்காமை, வெளிநாட்டு கையிருப்பு சந்தையில் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக நிலவும் எல்லைகளை விலக்குவது, 06

### IMFஅறிக்கை

# ஏப்ரல் முதல் வாரத்தில் பாராளுமன்றில் விவாதம்

லோரன்ஸ் செல்வநாயகம்



இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கை சம்பந்தமாக பாராளுமன்ற விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் நடைபெறும் பாராளுமன்ற அமர்வின் போது அந்த விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை சம்பந்தமாக பாராளுமன்ற விவாதம் ஒன்றை நடத்துவது அவசியம் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியும் அதுதொடர்பான வேண்டுகோளை அரசாங்கத்திடம் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

# முழுமையான தடுப்பூசி அட்டைகள் கட்டாயமாக்கப்படும்

**சுகாதார அமைச்சு தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



கொரோனா வைரஸ் தடுப்பூசியை முழுமையாக பெற்றுக் கொண்டதற்கான உறுதிப்படுத்தல் அட்டை அத்தியாவசியமாகும் பிரதேசங்களின் பெயர்ப் பட்டியலை ஓரிரு தினங்களில் வெளியிடவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும்பாலான பொது இடங்களில் பிரவேசிப்பதற்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி அட்டையை கண்டிப்பாக்கும் சட்டம் ஏப்ரல் 30ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை நாட்டில் ஒரு கோடி 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இரண்டு கொரோனா வைரஸ் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களென தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது. அதேவேளை மூன்றாவது தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 70 இலட்சத்திற்கும் அதிகமாகும் என்றும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்பதாக மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. (ஸ)

### இந்திய வெளிவிவகார அமைச்சர்

# ஜெய்சங்கர் இன்று இலங்கை வருகை

லோரன்ஸ் செல்வநாயகம்



இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இன்று இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் விடுத்துள்ள அழைப்பை ஏற்று அவர் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இன்று இலங்கைக்கு வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் நாளை 29ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் பங்கேற்க உள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கையில் தங்கியுள்ள நாட்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 06

# அரசாங்கத்தின் செலவில் 5300 கோடி ரூபா குறைப்பு

**அரசாங்க வட்டாரங்கள் தெரிவிப்பு**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் நிலவும் நிதிநெருக்கடி நிலையைக் கவனத்தில் கொண்டு அரசாங்கத்தின் செலவுகளில் 5,300 கோடிரூபா குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அந்த செலவுகள் குறைப்புக்குள் ஜனாதிபதியின் செலவும் குறைக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புது வருடத்துக்கு மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் அரசாங்கம் புதிய வரவு செலவுத் திட்டமொன்றை சமர்ப்பிப்பதற்கு தீர்மானித்துள்ளது. அது தொடர்பில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின் போது தெளிவுபடுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் அரசாங்கத்தின் செலவுகளை முடிந்தளவு குறைத்து மக்களுக்கான நிவாரண வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்கிணங்க தற்போது அரசாங்கத்தின் செலவில் 5300 கோடி ரூபா குறைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ)

## 54 வருடங்களுக்குப் பின் மீண்டும்: சர்வதேச விமான நிலையமாக இரத்மலானை விமான நிலையம்



லோரன்ஸ் செல்வநாயகம்

இரத்மலானை விமான நிலையம் மீண்டும் சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 54 வருடங்களுக்குப் பின்பு இரத்மலானை விமான நிலையம் மீண்டும் சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தப்பட்ட பின்னர் இரத்மலானைக்கான முதலாவது விமானம் நேற்று மாலை தீவிலிருந்து வந்தடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஸ)

## சர்வதேச நாணய நிதிய அறிக்கை தொடர்பில் பாராளுமன்ற விவாதமொன்று அவசியம்

**ரணில் அரசாங்கத்திடம் வேண்டுகோள்**

லோரன்ஸ் செல்வநாயகம்



இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கை சம்பந்தமாக பாராளுமன்றத்தில் உடனடியாக விவாதம் ஒன்றை நடத்துமாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேவேளை இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பில் அரசாங்கம் தமது திட்டங்களை முன்வைப்பது மிக முக்கியம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை தெரிவு செய்துள்ள நிலையில் பாராளுமன்றத்தில் மேற்படி அறிக்கை தொடர்பில் கருத்துக்களை தெரிவிப்பதற்காக விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். 06

**நிதியமைச்சுடனான உடன்படிக்கையை**

## ஐஓசி நிறுவனம் மீறி செயற்படுமானால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

**அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



ஐ.ஓ.சி. நிறுவனம் அதற்கு தேவையான வகையில் எரிபொருள் விலைகளை அதிகரித்து வருகின்ற போதும் அந்த நிறுவனத்திற்கு எதிராக எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாதுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. அமைச்சின் உயரதிகாரி ஒருவர் அது தொடர்பில் தெரிவிக்கையில்:

கடந்த 2006 ஆம் ஆண்டு ஐஓசி நிறுவனத்திற்கும் நிதி அமைச்சுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு உடன்படிக்கைக் கிணங்க அந்நிறுவனம் அதற்குத் தேவையான விதத்தில் விலைகளை அதிகரிக்கக்கூடிய அதிகாரத்தை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 06

# பிம்ஸ்டெக் உச்சி மாநாடு ஜனாதிபதி தலைமையில்

**இன்று கொழும்பில் ஆரம்பம்**

லோரன்ஸ் செல்வநாயகம்

ஐந்தாவது பிம்ஸ்டெக் மாநாடு இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பில் உத்தியோக பூர்வமாக ஆரம்பமாக உள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று 28ஆம் திகதி முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

மாநாட்டில் இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், தாய்லாந்து ஆகிய நாடுகளில் வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொள்ள உள்ளனர். இன்றும் நாளையும் நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் பங்குபற்றும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன் மியன்மார் வெளிநாட்டமைச்சர் இந்த மாநாட்டில் இணைய வழியாக பங்கேற்கவுள்ளார். எதிர்வரும் 30ஆம் திகதி இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் மற்றும் தாய்லாந்து நாடுகளில் அரச தலைவர்களின் மெய்நிகர் பங்கேற்புடன் ஐந்தாம் பிம்ஸ்டெக் உச்சி மாநாடு ஜனாதிபதி 06

## சிலாபம் கடலில் மூழ்கி நானுஓயா நபர்கள் இருவர் பலி

லோரன்ஸ் செல்வநாயகம்



சிலாபம் பகுதியில் கடலுக்கு நீராடச் சென்ற இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். சிலாபம் மெதவத்த பிரதேச கடற்கரை பகுதியில் நடைபெற்ற விருந்துபசாரம் ஒன்றில் கலந்து கொண்ட 09 பேர் கடலில் நீராடச் சென்றுள்ளனர். அவர்களில் இருவரே இவ்வாறு கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் மூழ்கிய மற்றுமொருவரை அந்த பகுதியிலுள்ள மீனவர்கள் மீட்டு சிலாபம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். 06

# தினகரனின் 90ஆவது ஆண்டு நிறைவு, பேருவளையில் முப்பெரும் விழா நிகழ்வுகள்






















படங்கள்: ரஞ்சித் அசங்க



# மின்சார நெருக்கடிக்கு தீர்வாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு

## தடைகளை நீக்குமாறு பிரதமர் மஹிந்த பணிப்புரை

மின்சார நெருக்கடிக்கு தீர்வாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்துவதில் உள்ள தடைகளை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவிடம் பணிப்புரை விடுத்துள்ளார்.

அலரி மாளிகையில் (25) நடைபெற்ற பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது பிரதமர் மஹிந்த இப்பணிப்புரையை விடுத்தார்.

இந்த அமைச்சகத்திற்குரிய தேசிய திட்டமிடல் துறை, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், கொள்கை கற்கைகள் நிறுவனம், நிலையான அபிவிருத்தி சபை, கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகம், மதிப்பீட்டுத் திணைக்களம், இலங்கை கணக்குகள் மற்றும் தணிக்கை தரநிலைகள் கணக்கெடுப்பு, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் பயனாளிகள் சபை ஆகிய நிறுவனங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. எரிபொருளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரத்திற்கு 60 ரூபாய்க்கு மேல் செலவாகும் என்றும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரம் குறைந்தபட்சம் 20 ரூபாய்க்குக் கிடைக்கும் என்றும் தெரிய வந்தது.

அதற்கமைய மின் நெருக்கடியைத் தீர்க்க புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைத் தவிர வேறு வழியில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித் குமாரசிங்க அவர்கள் தெரிவித்துள்ளார்.

2030 ஆண்டளவில் தேவை ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ள 28,200 ஜிகாவொட் மணிநேரத்தில், 19,800 கிகாவொட் மணிநேரம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் தற்போதைய அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ள 70 சதவீத புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்துவதற்கு தற்போது அமுலிலுள்ள மின்சார சபையின் 1969 சட்டத்தை திருத்தி தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு சீரமைக்க வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை பிரதான விநியோகத்துடன் இணைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் இலங்கை மின்சார சபையின் செயற்பாடுகள் தாமதிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

06

# வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தென்னாபிரிக்க தூதுவருடன் சந்திப்பு



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தென்னாபிரிக்காவின் தூதுவர் சாண்டில் எட்வின் ஷால்க்கை (25) வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அனுபவம் குறித்து இந்த சந்திப்பின் போது முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

இந்த அனுபவங்கள் இலங்கையின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஆக்கபூர்வமாக மாற்றியமைக்கப்படுவதை உறுதி செய்வதில் அக்கறை செலுத்தும் அதே வேளையில் ஏனைய நாடுகளின் நேர்மறையான அனுபவங்களை உன்னிப்பாக ஆராய்வதே இலங்கை அரசாங்கத்தின் நோக்கமாகுமென வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் உயர்ஸ்தானிகரிடம் விளக்கினார்.

தென்னாபிரிக்காவின் அனைத்து செயற்பாடுகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரான அவரது பல்வேறு முன்முயற்சிகள் தொடர்பிலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு உயர்ஸ்தானிகர் விரிவாக விளக்கினார்.

# தவக்கால சிந்தனை

## இறைவேண்டுதலின் மகத்துவம்

வேண்டுதல் என்பது ஆழமான உறவு. அர்த்தமுள்ளது. மற்றும் உண்மை மாறாதது. முழு நம்பிக்கையுடன் ஆண்டவரிடம் கேட்கும் போது இறைவன் நமக்குத் தருவார் என்பதனை நாம் முழுமையாக நம்ப வேண்டும். “ஆண்டவரே உம்மை புகழ்வேன். ஏனெனில் என்னைக் கைதூக்கி விட்டீர்” என்ற வரிகள் அளவற்ற தன்னம்பிக்கையை இறைமக்கள் மத்தியில் விதைக்கின்றது.

அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் கண்டாலன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள் என்றார் இயேசு.

அரச அலுவலர் ஒருவர் தன் மகன் பிழைக்க வேண்டுமென உளமார நினைத்து முழு நம்பிக்கையுடன் வேண்டுதல் செய்து விட்டு சென்றார். அங்கே தன் மகன் உயிர் பெற்றிருந்தான் என அறியக் கிடைக்கின்றது.

தொடர்ந்து இயேசு பல அருளடையாளங்களை செய்து வந்தார் என்பது அனைவருக்கும் வெளிப்படையாயிற்று.

கானாவூரில் கண்ட அதிசயம் மற்ற இடங்கள் அனைத்திற்கும் பரவியத்தைக் கண்டு பெருந்தொகையான மக்கள் கூட்டம் இறைவன் இயேசுபால் நம்பிக்கை கொள்வதை காணக் கூடியதாகவுள்ளது.

“எங்கே என் பெயரால் ஒருவர் அல்லது இருவர் கூடுகின்றார்களோ அவர்கள் மத்தியில் நான் பிரசன்னமாகவே இருப்பேன்” என்ற வரிகள் தினமும் எம்மை இறைவனிடத்தில் நம்பிக்கை கொள்ள அழைக்கின்றது. எனவே எம் வாழ்வில் எதை செய்ய நினைத்தாலும் இறை பிரசன்னம் எம்மோடு இருப்பதை நாம் உணர வேண்டும்.

மேலும் ஆண்டவர் எம்மோடு உள்ளார் என்பதனை நினைத்து ஏற்ற காலத்தில் ஏற்ற செயலை இடம் பொருள் காலம் அறிந்து செயற்பட வேண்டும் என்பதனை இத்தவக்கால சிந்தனைத் துளிகள் எடுத்துக் காட்டுகின்றன.

இறைவன் நம்பிக்கையின் ஒளியை தருகின்றார்.

அவரை நம்பி விசுவசிப்போர் வாழ்வு பெறுவர்.; கடவுள் மீதும் இவ்வுலக பொருட்கள் மீதும் நாம் வைக்கும் நம்பிக்கையினை சீர் தூக்கிப் பார்க்க வேண்டும்.

துன்பம் வரும் வேளையில் அதுவும் கடைசி நேரத்தில் எம்மால் எதுவும் செய்ய இயலாதென்ற தருணத்தில் கடவுளை நாடிச் செல்கின்றோம். இறை வார்த்தைகள் எம்முடைய துன்பத்திற்கு ஆறுதல் அளிக்கின்றனவா? என்று விவிலியத்தை திறந்து பரிசோதனை செய்து பார்ப்பதை வழக்கமாக கொண்டிருக்கின்றோம்.

வழக்கத்தை மாற்றி எமக்கு ஏற்ற பொழுதுகளில் இறைவனை நினைப்பதை விடுத்து இன்ப துன்ப வேளைகளில் இறைவன் எம்மோடு இருக்கின்றார் என்ற நம்பிக்கையில் தொடரும் இந்த தவக்காலத்தை பயனுள்ள வகையில் மாற்ற முயற்சி செய்வோம்.

அருட்சகோ.
கி. றுபேஷன்...


## விலைமனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக் கேள்வி இலக்கம் : 067/T/2020**

**கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வைஃபை (WI-FI) பயன்படுத்துவோரை நிர்வகிப்பதற்காக பயர்வோல் முறைமையொன்றினை (FIREWALL SYSTEM) வழங்கீடு, இணைத்தல், தேராய்வு மற்றும் செயலுரிமையளிப்பு**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வைஃ. பை (WI-FI) பயன்படுத்துவோரை நிர்வகிப்பதற்காக பயர்வோல் முறைமையொன்றினை (FIREWALL SYSTEM) வழங்கீடு, இணைத்தல், தேராய்வு மற்றும் செயலுரிமையளிப்பதற்காக தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் மூலம் விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

விலைக்கேள்வியாளரால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ கோரிக்கை கடிதத்துடன், திருப்பித் தரப்படாத விலைக்கேள்வி கட்டணமான ரூபா நான்காயிரத்து ஐந்நூறு (4,500.00 ரூபா) காசாக செலுத்துவதன் மூலம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமான ஆவணங்களின் மூலம் விலைக்கேள்விகள் சமர்பித்தல் வேண்டும்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்திலிருந்து 2022.03.29ஆந் திகதி முதல் 2022.04.25ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி ஆவணங்கள் கொள்வனவு செய்ய முடியுமாக இருப்பதுடன் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்கள் ஏதுமின்றி விலைக்கேள்வி ஆவணங்கள் பார்வையிட முடியும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் விலைக்கேள்விகள் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2022.04.26ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் அதற்குப் பின்னர் உடன் விலைக்கேள்விகளைத் திறத்தல் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளரால் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும் வேளையில் அதற்கு சமுகமளிக்க முடியும்.

மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற, இலங்கையில் செயற்படுகின்ற, வங்கியொன்றினால் வெளியிடப்பட்ட, வங்கி பிணைமுறி வடிவத்திலான, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளருக்கு, செலுத்தப்பட வேண்டிய, இலங்கை ரூபா இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் (ரூபா. 280,000.00), கேட்டவுடன் செலுத்தும் பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம். 011-2254103 / 011-2264106 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**



நிதி அமைச்சு
## ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை

**2021 ஆம் ஆண்டில் 5ஆம் வருட புலமைப்பரிசிலில் சித்தியடைந்த ETF அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கான விண்ணப்பகோரல்**

வெட்டுப்புள்ளிக்கு மேலாக பெற்றுக்கொண்ட 2021 ஆம் ஆண்டில் 5ஆம் வருட புலமைப்பரிசிலில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் ஒவ்வொரு பிள்ளைக்கும் பதினைந்தாயிரம் ரூபா (15,000 ரூபா) பெறுமதியான 9,000 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையானது தீர்மானித்துள்ளது.

**விண்ணப்பங்களை எப்படி பெற்றுக்கொள்ளலாம்**
- **www.etfb.lk** எனும் இணையத்தளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்ய முடியும்
- **2022.03.28** ஆம் திகதி முதல் அலுவலக நேரங்களில் பின்வரும் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு முடியும்.

**பிராந்திய அலுவலகங்கள்:**
**தலைமையகம்: மெஹெவர பியச, 19 ம் மாடி, நாராஹேன்பிட்டி, கொழும்பு-05. (த.பெ. இல 807),**

01. கம்பஹா – இல. 54/B, ஜெரி பிசோ மாவத்தை, கம்பஹா. தொ.இல. 033-2234520/033-4922530/033-3687618
02. கண்டி – இல.79, வீடமைப்பு செயலகம், பட்டிருப்பு வீதி, கண்டி. தொ.இல. 081-2233793 / 081-2237525 / 081-2232446
03. இரத்தினபுரி – இல. 53/1/2, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. தொ.இல. 045-2222529/045-2222930
04. காலி – இல. 30/1, ஸ்ரீ தேவமித்த வீதி, காலி. தொ.இல. 091-2245814 / 091-2231129
05. அனுராதபுரம் – இல. 87/25, தர்மபால மாவத்தை, அனுராதபுரம். தொ.இல. 025-2222185 / 025-2222150
06. மாத்தறை – இல. 63/02, காளிதாச மாவத்தை, மாத்தறை. தொ.இல. 041-2231877 / 041-2237607 / 041-2224366
07. களுத்துறை – இல. 294, காலி வீதி, களுத்துறை வடக்கு. தொ.இல. 034-2237722 / 034-2223040
08. கேகாலை – இல. 247/1, கொழும்பு வீதி, கேகாலை. தொ.இல. 035-2222991
09. குருநாகல் – இல. 27, செஞ்சிலுவை கட்டிடம், கச்சேரி வீதி, குருநாகல். தொ.இல. 037-2228194 / 037-2056394
10. ஹம்பாந்தோட்டை – இல. 57, விஸ்மட் வீதி, ஹம்பாந்தோட்டை. தொ.இல. 047-2222460 / 047-2222462
11. அம்பாறை – இல. 693, மலவத்த வீதி, அம்பாறை. தொ.இல. 063-2222645
12. பதுளை – இல. 98, கங்கபட வீதி, பதுளை. தொ.இல. 055-2225357 / 055-2224482
13. வவுனியா – இல. 69/1, மில் வீதி, வவுனியா. தொ.இல. 024-2228225
14. யாழ்ப்பாணம் – இல. 861/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 021-2220010
15. நுவரெலியா – இல. 56, லோசன் வீதி, நுவரெலியா. தொ.இல. 052-2224457 / 052-2224475
16. திருகோணமலை – இல. 455, ஆண்டான்குளம், கண்டி வீதி, திருகோணமலை. தொ.இல. 026-2056606 / 026-2056607
17. மஹரகம – இல 133, 2ம் மாடி, பிறிஸ்டல் கட்டிடம், ஹைலெவல் வீதி, மஹரகம. தொ.இல. 011-2745511
18. கட்டுபெத்த – இல 464, 2ம் மாடி, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை. தொ.இல. 011-2655080

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி: 2022/05/13**

உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை புலமைப்பரிசில் பிரிவிற்கு சமுகமளித்து ஒப்படைக்கவோ அல்லது பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவோ முடியும்.

**பூரணமற்ற மற்றும் இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் எந்த காரணத்திற்காகவும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.**

**புலமைப்பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை,**
**மெஹெவர பியச, 19 ம் மாடி, நாராஹேன்பிட்டி, கொழும்பு-05. (த.பெ. இல 807)**

தவிசாளர்/பிரதான நிறைவேற்று அலுவலகர்

மேலதிக விபரங்களுக்கு: புலமைப்பரிசில் அலுவலர் - 011-7747281 / 011-7747282

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 14ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 24



**குறள் தரும் சிந்தனை**

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

## இணக்கப்பாடான நேரடி சந்திப்புகள் அரசியல் நாகரிகத்தின் வெளிப்பாடு

கொவிட் தொற்று நிலைமையினால் இரண்டு வருட காலமாக நிலவி வந்த பலவிதமான கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றின் மத்தியில் கடந்த ஒரு வார காலத்தில் முக்கிய இரு சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன. முதலாவது சந்திப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடந்துள்ள அனைத்துக் கட்சிகள் மாநாடு. மற்றைய நிகழ்வு இரா. சம்பந்தன் தலைமையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்றுள்ள சந்திப்பு.

இவ்விரண்டு சந்திப்புகளையும் எமது நாட்டின் இணக்கப்பாடான அரசியலுக்கான சந்தர்ப்பங்களாகவே நாம் நோக்க வேண்டியுள்ளது. ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகள் மாநாட்டை நாட்டின் பல்வேறு தரப்பினரும் சிறந்ததொரு ஆரம்பமென்று பாராட்டியுள்ளனர். அரசியல் கட்சிகள் தங்களுக்கிடையிலான அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்வதன் ஊடாக நெருக்கடிகளுக்கு தீர்வு காணக் கூடிய பாதை திறக்கின்றது என்பதே பலரதும் கருத்தாகும்.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் பங்கேற்றிருப்பின், அதனை சிறப்பான அரசியல் நாகரிகமாக எண்ணியிருக்கலாம். ஆனால் சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சி அனைத்துக் கட்சிகள் சந்திப்பில் பங்கேற்கவில்லை. எதிர்க்கட்சியின் நோக்கம் நாட்டின் இன்றைய நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதல்ல என்பது நன்றாகவே புரிகின்றது.

நாடு மேலும் பொருளாதார வீழ்ச்சி நிலைமைக்குச் செல்ல வேண்டுமென எதிர்க்கட்சி விரும்புகின்றது. அதன் மூலம் அரசு மீது மக்கள் வெறுப்பு கொள்வரென்றும், எதிர்வரும் தேர்தலில் மக்கள் ஆதரவு தமக்கே கிடைக்குமென்றும் எதிர்க்கட்சி எதிர்பார்க்கின்றது. எனவேதான் எதிர்க்கட்சியானது அனைத்துக் கட்சிகள் பங்கேற்ற சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

எதிர்க்கட்சி தற்போதைய நிலைமையில் அரசாங்கத்தை வசைபாடுகின்றதே தவிர, நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு காண்பதற்கான ஆலோசனைகள் எதனையுமே முன்வைக்கவில்லை. அரசுக்கு எதிராக மக்கள் ஆதரவைத் திரட்டுவதிலேயே எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் கண்ணுங்கருத்துமாக செயற்படுகின்றனர். நாட்டின் பொருளாதார நெருக்கடி வேளையில் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியொன்று இவ்வாறு செயல்படுவது முறையல்ல.

ஆனால் சர்வகட்சி சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பங்கேற்காத போதிலும், அச்சந்திப்பு சுமுகமாகவே நடந்து முடிந்தது. அரசியல் பேதங்களை முன்வைத்தோ அல்லது தனிப்பட்ட ரீதியிலான குரோதங்களின் பேரிலோ அச்சந்திப்பில் வாதங்கள் எழவில்லை. புரிந்துணர்வுடனான கருத்துப் பரிமாற்றங்களே அங்கு இடம்பெற்றன.

அதுமாத்திரமன்றி, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்காக எதிர்காலத்தில் இது போன்ற சந்திப்புகளை தொடர்ந்தும் நடத்துவதற்கும் அங்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. பயனுள்ள ஒரு சந்திப்பாகவே அதனை கொள்ள முடிகின்றது.

மற்றைய சந்திப்பான ஜனாதிபதிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பும் முக்கியமான ஒன்றாகும். நீண்ட நாட்களாகத் திட்டமிடப்பட்டிருந்த சந்திப்பொன்று நிகழ்ந்துள்ளது. ஜனாதிபதிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் ஐந்து முக்கிய விடயங்களின் கீழ் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அங்கு இணக்கப்பாடான முறையில் கருத்துகள் பரிமாறப்பட்டுள்ளன.

'நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோமென தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடம் ஜனாதிபதி அங்கு தெரிவித்துள்ளார். தமிழ்க் கைதிகள் விடுதலை, உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை ஆரம்பித்தல்,பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மறுசீரமைத்தல், காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அச்சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வின் மூலம் நாட்டை சுபிட்சத்தை நோக்கி நகர்த்துவது தமது எதிர்பார்ப்பாகுமென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது தெரிவித்தார். நாம் ஒரு நாடாக, ஒரே மக்களாக ஒன்றுபட வேண்டுமென்ற தமது எண்ணத்தையும் சம்பந்தன் அங்கே வெளியிட்டுள்ளார்.

இரு வருட கால கொவிட் நிலைமையினால் உருவான பொருளாதார நெருக்கடி வேளையில் இவ்வாறான சந்திப்பொன்றுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வந்தமை குறித்து தென்னிலங்கை பெரும்பான்மை மக்கள் மத்தியிலும், நாடெங்குமுள்ள தமிழ் மக்கள் மத்தியிலும் வரவேற்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மக்கள் எவ்வேளையிலும் பிரிவினையை ஆதரித்ததில்லையென்பதையும், இணக்கப்பாடான அரசியல் தீர்வொன்றின் ஊடாக பெரும்பான்மையின மக்களுடன் நல்லுறவோடு வாழ்வதற்கே விரும்புகின்றனரென்பதையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இச்சந்திப்பானது மீண்டும் உறுதி செய்துள்ளது.

அரசியல் கட்சிகளும், அரசாங்கத் தரப்பும் நேரில் சந்தித்து மனம் விட்டு கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதென்பது நல்லதொரு அரசியல் நாகரிகமாகும். இவ்வாறான சிறப்பான அரசியல் கலாசாரம் எமது நாட்டில் தொடர வேண்டுமென்பதே நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் விரும்புகின்ற மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

editor.tkn@lakehouse.lk

**இந்தியாவில் உச்சம் தொடும் விலையேற்றம்;**

# ஐந்து தினங்களில் ஆறாவது தடவையாக எரிபொருட்களின் விலைகள் அதிகரிப்பு

எரிபொருள் பற்றாக்குறையானது எமது நாட்டை மட்டும் பாதிக்கவில்லை. உலகின் பல நாடுகளிலும் தற்போது எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்தியாவில் எரிபொருட்களின் விலை முன்னொருபோதும் இல்லாதவாறு தற்போது அதிகரித்துள்ளது.

நீர், உணவு, உடை, இருப்பிடம் இதனையடுத்து இன்று அவசியமான தேவைகளில் ஒன்றாக எரிபொருட்கள் மாறியுள்ளன. ஏற்கனவே ரஷ்யா_ உக்ரைன் போருக்கு மத்தியில் பல தானியங்கள், எரிவாயு, சமையல் எண்ணெய், எரிபொருள் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.கொரோனா தணிவுக்கு வந்து கொண்டிருக்கையில் ரஷ்ய_ உக்ரைன் யுத்தம் மூண்டதால் விலையேற்றமும், பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளன.

இந்தியாவில் மக்கள் தினமும் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல், எரிவாயு விலைகள் உயர்ந்துள்ளன. இது மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. இந்த விலையேற்றம் இதோடு நின்றுவிடுமா என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது.

இதற்கிடையில் 6 நாட்களில் 5 வது முறையாக நேற்றும் இந்தியாவில் எரிபொருட்கள் விலையேற்றம் கண்டுள்ளன. இது பாவனையாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. நேற்று மட்டும் தமிழ்நாட்டில் பெட்ரோல் மற்றும் டீசலுக்கு முறையே 50 பைசா மற்றும் 55 பைசா அதிகரித்துள்ளது. இந்த ஒரு வாரத்தில் மட்டும் லீட்டருக்கு பெட்ரோல் விலை 3.70 ரூபாவும், டீசல் விலை 3.75 ரூபாவும் அதிகரித்துள்ளது.

டெல்லியில் பெட்ரோல் விலை லீட்டருக்கு ரூ.99.11, கொல்கத்தாவில் லீட்டருக்கு ரூ.108.53, மும்பையில் ரூ.113.88, சென்னையில் ரூ.105, பெங்களூர் ரூ.104.46, ஹைதராபாத் ரூ.112.37, ஜெய்ப்பூர் ரூ.111.30, திருவனந்தபுரம் ரூ.110.05.

டெல்லியில் டீசல் விலை லீட்டருக்கு ரூ.90.42, கொல்கத்தா ரூ.93.57, மும்பையில் ரூ.98.13, சென்னையில் ரூ.95.10, பெங்களூர் ரூ.88.67, ஹைதராபாத் ரூ.98.69, ஜெய்ப்பூர் ரூ.94.71, திருவனந்தபுரம் ரூ.97.11.

இந்தியாவில் எரிபொருள் விலையுயர்வானது சாதாரண மக்களை பதம் பார்க்கத் தொடங்கியுள்ளது. இந்தியாவில் எரிபொருள் விலையானது மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகின்றது. இது ஒவ்வொரு மாநிலமும் நிர்ணயித்துள்ள வரி வீதத்தினை அடிப்படையாக கொண்டுள்ளதால், அதனை பொறுத்து மாறுபடுகின்றது.

இந்தியாவின் முக்கிய 5 மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற நிலையில், தொடர்ச்சியாக கடந்த நவம்பர் 4 இல் இருந்தே விலை அதிகரிக்காமல் இருந்தது. இது சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலையானது அதிகரித்த போதிலும், இங்கு விலையில் மாற்றம் காணவில்லை. இதற்கிடையில் தேர்தல் முடிவு வெளியான சில தினங்களுக்குப் பின்பு ஏற்றம் காண ஆரம்பித்த விலையானது, தற்போது தொடர்ந்து ஏற்றம் காண ஆரம்பித்துள்ளது. இது மக்களின் வாழ்க்கைச் செலவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுஒருபுறமிருக்க, இந்தியாவின் மருந்து விலை நிர்ணய ஆணையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பின்படி மக்களுக்கு அடிப்படைத் தேவையாக விளங்கும் ப ரோசிடட மோல் உட்படப் பல அத்தியாவசிய மருந் துகளின் வி லை ஏப்ரல் மாதத்தில் இருந்து 10.7 சதவீதம் வரையில் உயர்த்தப்பட உள்ளதாக தெரிவித்துள்ளது.இந்த 10.7 சதவீதம் என்பது மருந்து விலை நிர்ணய ஆணையத்தால் அனுமதிக்கப்படும் அதிகப்படியான விலை உயர்வு அளவீடு என்பது குறிப்பிடத்தக்கது.



## 800 இற்கும் அதிகமான மருந்துப் பொருட்களின் விலைகளும் உயர்வு



வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி வலி நிவாரணிகள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், தொற்று எதிர்ப்பு உட்பட 800க்கும் அதிகமான மருந்துகளின் விலை ஏப்ரல் மாதத்தில் இருந்து 10.7 சதவீதம் வரையில் உயர்த்தப்படும். அசித்ரோமைசின் போன்ற நுண்ணுயிர் எதிர்ப்புகள், பக்டீரியா தொற்று, இரத்த சோகை எதிர்ப்பு, விட்டமின்கள் மற்றும் மினரல்ஸ் போன்ற மருந்துகளின் விலை உயர உள்ளது.

ஏற்கனவே இந்தியாவில் மருத்துவச் சேவைகள் மற்றும் மருந்துகளின் விலை அதிகமாக இருக்கும் நிலையில், தற்போது அறிவிக்கப்பட்ட விலை உயர்வின் மூலம் மக்களுக்குக் கூடுதல் சுமை உருவாகியுள்ளது. மேலும் நாட்டின் முன்னணி மருந்தக நிறுவனங்கள் மருந்து விலையை 20 சதவீதம் வரையில் உயர்த்த கோரிக்கை வைத்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது விலை உயர்த்தப்படும் மருந்துகளில் கொரோனா தொற்றைக் குணப்படுத்தும் மருந்துகளும் அடங்குகின்றன.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டு; காரைக்கால் அம்மையார் குருபூஜை நிகழ்வு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும், மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' கனடா ரொறன்ரோவை வதிவிடமாகக் கொண்ட சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்கள் அவர்களின் அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றன.

சமயஜோதிகதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் காரைக்கால் அம்மையார் குருபூஜை நிகழ்வும் , மாணவர்களுக்கு கலாசார உடை வழங்கலும் உரும்பிராய் சிவபுரீஸ்வரர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் 26.03.2022 சனிக்கிழமை காலை நடைபெற்றன. மேற்படி நிகழ்வில் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் வே. சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலட்சுமி உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். குருபூஜையை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்துசமய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கலாசார உடை வழங்கப்பட்டது.

இதேவேளை காரைக்கால் அம்மையார் குருபூஜை நிகழ்வு இணுவில் காரைக்கால் சிவன் மணிமண்டபத்தில் 25.03.2022 வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலாநிதி திருமதி.விக்னேஸ்வரி பவநேசன் (தலைவர், சைவ சித்தாந்தத்துறை, இணைப்பாளர் சைவ சித்தாந்த முதுகலை மாணி, உயர்பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) பிரதம விருந்தினராகப் பங்கேற்றார். சிறப்பு விருந்தினராக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலட்சுமி கலந்து கொண்டார். குருபூஜையை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்துசமய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.









அ. கனகசூரியர்

**நூலகப் பணியில் வெள்ளிவிழா;**

# வாழைச்சேனை பகுதியில் 04 பெண்கள் கௌரவிப்பு

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையின் கீழ் இயங்கி வருகின்ற வாழைச்சேனை பொதுசன நூலகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இவ்வருடம் பல்வேறு நிகழ்வுகள் நூலகத்தில் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில், சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு கோறளைப்பற்று பிரதேச சபை நூலகங்களில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வரும் திருமதி சிவனேஸ்வரி செல்வேந்திரன், திருமதி சுதாமதி அருள்பிரகாசம், திருமதி தாரணி தங்கத்துரை மற்றும் வாழைச்சேனை பொதுசன நூலகத்தின் நூலகர் திருமதி ஜெஸ்மின் ஹப்சா மஜீத் ஆகிய நான்கு பெண் உத்தியோகத்தர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பொதுசன நூலகத்தில் நடைபெற்றது.

கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஸோபா ஜெயரஞ்சித் தலைமை தாங்கி நடத்திய இந்நிகழ்வில், சபையின் செயலாளர் ச.நவநீதன், நிதி உதவியாளர் எஸ். ஜெயரூபன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். ஏனைய பொதுநூலகங்களில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

"கடந்த 1996 முதல் நூலகப்பணியில் ஈடுபட்டு வருகின்ற குறித்த பெண் உத்தியோகத்தர்கள் இப்பிரதேச சபைக்குட்பட்ட 07 பொது நூலகங்களுள் அநேகமாக இதுவரை 04 இற்கு மேற்பட்ட பொதுநூலகங்களில் இதுவரை பணியாற்றி உள்ளனர். நாட்டின் யுத்த அசாதாரண சூழ்நிலை நிலவிய காலங்கள் முதல் தற்கால கொரோனா சூழ்நிலையில் கூட தளராது, ஏனைய பொதுநூலக உத்தியோகத்தர்களுக்கு முன்னோடிகளாகவும் பணிபுரிந்துள்ளனர். நேரம் தவறாமை, நூலகத்தின் அனைத்து நிலைக் கடமைகளையும் சரிவரச் செய்கின்றமை, நூலகத்தின் வளர்ச்சி நோக்கிய விரிவாக்கற் பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றமை, ஆவணங்களைச் சரியாகப் பேணுகின்றமை உட்பட நூலகத்தின் அனைத்துப் பணிகளிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக பொறுமையுடன் பணிபுரிகின்றனர்.

அவர்களை பாராட்டுவதன் மூலம்தான் இளைய தலைமுறையினரையும் ஊக்கப்படுத்த முடியும். ஆண்கள் நிறைந்த தொழில்வெளியில் இன்று எல்லாத் துறையிலும் பெண்கள் வியாபித்துள்ளனர். தனியார் துறையாயினும் சரி, அரச துறையாயினும் சரி பெண்கள் வீடுகளைத் தாண்டி தொழில்வெளியில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பலவாகும். ஆனால் அவை அனைத்தையும் கடந்து, தமது தொழிலுக்கு நேர்மையாகவும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றுபவர்களை ஆண், பெண் பேதமின்றி கனப்படுத்த வேண்டியது காலத்தின் தேவை. அதன் அடிப்படையிலேயே இந்த நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆண்களுக்கு இணையாக பல்வேறு துறைகளில் பணிபுரியும் பெண்களை போற்ற வேண்டியது நம் எல்லோரதும் கடமையாகும். பிரதேச சபைகளில் இதற்கான ஒதுக்கீடுகளை மேற்கொண்டு, சபையின் கீழ் பணிபுரிகின்ற பெண்களை கௌரவப்படுத்த வேண்டும். 25 ஆண்டுகளாக நூலகத்துறையில் பணி செய்யும் பெண் உத்தியோகத்தர்களை கௌரவிக்கின்ற இந்த நிகழ்வினை பிரதேச சபை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் நூலக உத்தியோகத்தர்களே இதனை முன்னின்று ஆரம்பித்து வைத்துள்ளமை பாராட்டுக்குரியது. இதனை ஏற்பாடு செய்த வாழைச்சேனை பொதுசன நூலக உத்தியோகத்தர் அ.ஸ்ரீதருக்கு பாராட்டுக்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று தவிசாளர் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.



அதிதிகளின் உரைகளைத் தொடர்ந்து வெள்ளிவிழா கண்ட பெண் உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற்றது. திருமதி ஜெஸ்மின் ஹப்சா மற்றும் திருமதி. சிவனேஸ்வரி செல்வேந்திரன் ஆகிய இருவருக்கும் தவிசாளர் நினைவுச் சின்னங்களையும், பரிசுப் பொருட்களையும் வழங்கி வைத்தார். தொடர்ந்து செயலாளரினால் திருமதி சுதாமதி அருள்பிரகாசத்துக்கும், நிதி உதவியாளரினால் திருமதி தாரணி தங்கத்துரைக்கும் நினைவுச் சின்னங்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன. கௌரவிக்கப் பெற்ற 04 பெண்மணிகளும் தமது பணிக்கால மனப்பதிவுகளை பகிர்ந்து கொண்டதுடன், தம் பணிக்காலத்தில் தாம் பெற்றுக் கொண்ட முதல் கௌரவம் இதுவெனக் கூறி, நிகழ்வினை ஏற்பாடு செய்த ஸ்ரீதருக்கும், விழாக்குழுவுக்கும் தமது நன்றியினை நெகிழ்ச்சியுடன் பதிவு செய்தனர்.

எஸ்.ஏ.ஸ்ரீதர்
(நூலக சேவகர்)
பொதுசன நூலகம், வாழைச்சேனை

# எக்காலத்திலும் இலங்கையின் நெருங்கிய தோழன் இந்தியா

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 1970 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சியை வேரறுத்து மிகப் பெரிய தேர்தல் வெற்றியை அடைந்திருந்தது. கணவரின் படுகொலை, 1962 இல் ஒரு இராணுவ சதிப் புரட்சி என இக்கட்டுகளை சந்தித்திருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, ஒரு சோஷலிச அரசை நிறுவுவதில் தீவிரமாக இருந்தார்.

ஆனால் 1962 சதிப்புரட்சியின் பின்னர் ஐ.தே.க காலத்தில் 1966 இல் மற்றொரு சதிமுயற்சி என்பவற்றினால் பாதுகாப்பு விடயத்தில் இலங்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது. காட்ரிஜ் குண்டுகளை துப்பாக்கியில் போட்டு சுடும் துப்பாக்கிகளே பொலிஸார் கைகளில் இருந்தன. இராணுவம், கடற்படை, கப்பற் படைகளின் இலட்சணமும் இவ்வாறே இருந்தது.

## எமது நாட்டுக்கு நெருக்கடி தோன்றும் வேளைகளிலெல்லாம் விரைந்து வந்து முதலில் கைகொடுக்கும் நாடு பாரதம்

இந்தப் பின்னணியில் தான் ஸ்ரீமாவின் அரசை தூக்கி எறியும் ஒரு ஆயுதப் போராட்டத்தை மறுவருடமே, 1971 ஏப்ரலில் கட்டவிழ்த்து விட்டனர் ஹோஹண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பியினர். தெனியாய, கேகாலை, தென்பகுதியில் சில இடங்கள் என ஜே.வி.பியினர் கைப்பற்றியுமிருந்தனர். சற்றும் எதிர்பாரத தாக்குதல் இது.

முதலில் கொழும்பைக் காப்பாற்றியாக வேண்டும். உடனடியாக தன் குடும்ப நண்பியும் பாரதப் பிரதமருமான இந்திராகாந்தியைத் தொடர்புகொண்ட ஸ்ரீமாவோ, தன் பிரச்சினையை சொன்னார். அவர் உடனடியாக இந்திய இராணுவத்தின் ஒரு பகுதியினரை கொழும்புக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் இலங்கை இராணுவத்துடன் இணைந்து தேடுதல் வேட்டைகளில் இறங்கவில்லை. ஆனால் கட்டுநாயக்க, இரத்மலானை, ரேடியோ சிலோன், கோட்டை தொலைத்தொடர்பு மத்திய பரிவர்த்தனை நிலையம் போன்ற முக்கிய இடங்களில் காவலுக்கு நிறுத்தப்பட்டனர்.

இந்தியா, இலங்கையின் ஜனநாயக அரசைக் காப்பாற்ற நேரடியாக உதவிய சந்தர்ப்பம் இது.



இலங்கை வாழ் தமிழர்களுக்கும் தமிழகத் தமிழ்க் குடிமக்களுக்கும் இடையே ஒரு தொப்புள் கொடி உறவு இருப்பதால், இலங்கை அரசியல்வாதிகளுக்கு எப்போதுமே இந்தியா மீதான சந்தேகப் பார்வை இருந்து வந்திருக்கிறது. இதை தேர்தலுடன் சம்பந்தப்பட்ட அரசியல் பிழைப்பு என்றுதான் நாம் அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இறுதி யுத்தத்தின் போது இந்தியா இலங்கையின் பக்கம் நின்றது வெற்றிக்கான பெரிய வாய்ப்பாக அமைந்தது என்பதை இவர்கள் எப்படி மறந்து போகக் கூடும்?



இலங்கை படுமோசமான பொருளாதார வீழ்ச்சியை அடைந்துள்ள நிலையில், ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியா பொருள் கொள்வனவு கடனாக வழங்கியிருக்கிறது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்தான உடனேயே அடுத்தடுத்து எண்ணெய்க் கப்பல்கள் இலங்கைக்கு வரத் தொடங்கியுள்ளன. காகிதம் இல்லாமல் பரீட்சைகளை நடத்துவது எப்படி என்று கல்வித் திணைக்களம் குழம்பிப் போயிருந்த தருணத்தில், அரசு அச்சகத்துக்குத் தேவையான காகிதாதிகளை இந்தியா இக்கடன் திட்டத்தின் ஊடாக அனுப்பி வைத்துள்ளது. இதற்காகத்தான் எமது பிரதமர் இந்தியப் பிரதமருக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளார். கடந்த புதனன்று கொழும்பில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்ட ரணில் விக்கிரமசிங்க, மிகச் சரியான தருணத்தில் இந்தியா கைகொடுத்திருப்பதாகவும் இலங்கையின் நண்பன் இந்தியா என்றும் பாராட்டியிருப்பது கவனிக்கத்தக்கது. போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக்கு இந்தியா தொடர்ச்சியாக மனிதாபிமான உதவிகளைச் செய்து வந்துள்ளது. 50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தை அறிமுகம் செய்தது. மலையகத்தில் 15 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டமும் அமுலில் உள்ளது. மேலும் வேறெந்த நாட்டையும் விட இலங்கையில் அதிக முதலீடுகள் செய்திருக்கும் நாடாக இந்தியா விளங்குகிறது. வசதியற்ற ஆனால் திறமைசார் மாணவர்களுக்கு இந்தியா தொடர்ந்து புலமைப் பரிசில்களை வழங்கி வருகிறது. அவ்வப்போது இந்தியா ரிசர்வ் வங்கியிடமிருந்து இலங்கை கடன் பெற்று வந்துள்ளது. இந்தியா எமது நண்பன். இந்தியாவை விமர்சிக்கக் கூடாது. இலங்கை'கு உதவுவதன் மூலம் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படும் கருத்து தவறானவை. இந்தியா இப்பிராந்தியத்தின் பலமிக்க இராச்சியம். இலங்கை நெருக்கடிக்குள்ளான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இந்தியா முன்வந்து உதவியிருக்கிறது. எனவே இந்தியாவை அவமதிக்கக் கூடாது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே



## பண்டைய காலம் தொடக்கம் இன்று வரை இரு நாடுகளுக்குமிடையே தொடருகின்ற சகோதர உறவு

தெரிவித்திருப்பது இங்கே குறிப்பிட்டத்தந்து.

அரசர் காலத்தை எடுத்துக் கொண்டாலும் இலங்கை அரசர்களுக்கு இந்திய அரசர்கள் கைகொடுத்திருக்கிறார்கள். இலங்கையில் அரசர்கள் மத்தியில் பிணக்குகள் ஏற்படும் போது அவர்கள் இந்தியாவுக்கு செல்வதும் அங்கே படை திரட்டுவதும் சரித்திரத்தில் இடம்பெற்றிருக்கும் சம்பவங்கள். காசியப்பனுக்கு எதிராக முகலன் இந்தியாவிலேயே படை திரட்டி இலங்கை வந்து காசியப்பனை வீழ்த்தியது வரலாறு. கடல்சூழ் இலங்கையின் கயவாகு மன்னன் தமிழ் அரசனின் அழைப்பை ஏற்று தமிழகம் சென்றதும், அங்கே கண்ணகி வழிபாட்டைக் கண்டு அதை இலங்கையில் அறிமுகப்படுத்தி இலங்கையில் கண்ணகி அல்லது பத்தினியம்மன் வழிபாட்டை ஆரம்பித்து வைத்ததும் வரலாறு சொல்லும் செய்தி.



பௌத்த மதத்தை இலங்கைக்கு அறிமுகம் செய்து வெள்ளரசு மரக்கன்றையும் கொண்டு வந்தவர் சங்கமித்தை. இலங்கையில் ஆடப்படும் நடனங்கள், இசை, இசைக்கருவிகள் உடையணியும் முறைகள் என அனைத்துமே இந்திய அடிப்படையிலானவை.

எனவே இந்தியக் கொடை என்பது வெறுமனே சமீபத்தில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஒரு பில்லியன் டொலர் கடன் திட்டம் அல்ல. இது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே இலங்கைக்கு இந்தியா வழங்கி வந்திருக்கும் கொடைகளில் மிகச் சிறிய ஒன்று மட்டுமே. மதம், மொழி, இலக்கியம், கலாசாரம் என இந்தியா வழங்கியிருக்கும் பெருங்கொடைகளுக்கு முன்பாக இது ஒரு சிறு துரும்பு என்றால் மிகையாகாது. இலங்கை அரசியல்வாதிகள் எவ்வளவுதான் இந்தியாவை தமது அரசியல் நலன்களுக்காக தவறாக சித்தரித்தாலும், இந்தியா என்றென்றும் இலங்கைக்கு சார்பாகவும் உறுதுணையாகவுமே இருந்து வந்திருக்கிறது. சமீபத்தில் அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட கம்மன்பில ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இலங்கை மீது 21 தடவைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பதாகவும் அதில் 17 ஆக்கிரமிப்பு இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

இது முற்றிலும் அபத்தமானது. எதிர்த்தரப்பில் இருப்பதால் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றநிலையில் அவர் அப்படிக் கூறியிருப்பதாகவே கருத வேண்டியிருக்கிறது. சோழர் படையெடுப்பை அன்றைய போர் முறை, பொருளாதார முறைகள் என்பனவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஒரு நாட்டின் மீது படையெடுப்பது அந்நாட்டை சூறையாடி அந்நாட்டு செல்வங்களை தமதாக்கிக் கொள்ளத்தான். இது, வங்கிகள், சர்வதேச நிதிநிறுவனங்கள் இல்லாத ஒரு காலம். இதை போர்ப் பொருளாதாரம் எனலாம். எனவே அன்றைய சூழல்களை இன்றைய நிலைமைகளுடன் பொருத்திப் பார்ப்பது சிறுபிள்ளைத்தனமான பார்வை.

இந்தியா என்றைக்குமே இலங்கையின் நண்பனாகவே இருந்தது, இருக்கும்!

# சமாதான நல்லிணக்கச் செயற்பாடுகளில் பெண் தலைவர்களை வலுப்படுத்தும் திட்டம்

## அம்பாறையில் பல்தரப்பு செயற்பாட்டு குழுவினரின் அமர்வு

சமாதான நல்லிணக்கச் செயற்பாடுகளில் பெண் தலைவர்களை வலுப்படுத்தல் (WAGE) திட்டத்தின் செயற்பாடுகளில் ஒன்றான, பல்தரப்பு செயற்பாட்டுக் குழுவினரின் கூட்டம் நேற்று 27.03.2022 அன்று அம்பாறை மொண்டி ஹொட்டலில் நடைபெற்றது.

சேர்ச் ஃபோர் கொமன் கிரவுண்ட் (Search for Common Ground) நிறுவனத்தின் அனுசரணையுடன் அக்கரைப்பற்றில் அமைந்துள்ள பாதிக்கப்பட்ட பெண்கள் நிறுவனத்தினால் (AWF), மேற்படி சமாதான நல்லிணக்கச் செயற்பாடுகளில் பெண் தலைவர்களை வலுப்படுத்தல் திட்டம் (WAGE ) நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



இலங்கையில் பல்வேறு ஆயுத முரண்பாடுகள், போர்கள் நடந்திருந்தாலும் சமாதான முன்னெடுப்புக்களிலும் நல்லிணக்கங்களிலும் பெண்களின் வகிபாகம், பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இலங்கையில் காலாகாலமாக இனங்களுக்கிடையே இனமுறுகலும், முரண்பாடுகளும், கலவரங்களும்ஏற்பட்டுள்ளன. எனவே, இன்றைய காலகட்டத்தில் நல்லிணக்கத்திலும் சமாதானத்திலும் பெண்கள் பங்களிப்பை வழங்குவது மிகவும் முக்கியமாகும் என உணரப்பட்டுள்ளது. ஆகவே பெண்களை வலுப்படுத்தி, சமாதான முன்னெடுப்புக்களில் அவர்களை பங்குபெற வைப்பதற்கும், அவர்களுடைய திறனை விருத்தி செய்வதற்குமாக 'சமாதான நல்லிணக்கச் செயற்பாடுகளில் பெண் தலைவர்களை வலுப்படுத்தல்' (WAGE ) எனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.





சமாதான நல்லிணக்கச் செயற்பாடுகளில் பெண் தலைவர்களை வலுப்படுத்தும் (WAGE ) திட்டத்தில் பல்தரப்பு செயற்பாட்டுக் குழுவும் அங்கம் வகிக்கின்றது. மூன்று அமர்வுகளாக இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபைகளில் உறுப்பினர்களாகவுள்ள பெண் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், துறைசார் தலைவர்கள் என பலரும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த பல்தரப்பு செயற்பாட்டுக் குழுவினரின் கூட்டமே அம்பாறை மொண்டி ஹோட்டலில்நடைபெற்றது.







கூட்டுச் செயற்திட்டங்களின் மூலம் அடையாளம் காணப்பட்ட உள்ளூர் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதும், முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை ஆராய்ந்து, பெண் தலைவர்களுடன் இணைந்து தங்களது ஒத்துழைப்பை வழங்குவதுமே இப்பணிக் குழுவின் நோக்கமாகும். பெண்கள் அரசியலில் ஈடுபடுதலில் உள்ள சாதக, பாதகங்கள் என்பனவும் கலந்தாலோசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சேர்ச் ஃபோர் கொமன் கிரவுண்ட் (Search for Common Ground) நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஆலோசகர் நளினி ரட்ணராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாதிப்புற்ற பெண்கள் நிறுவனத்தின் (AWF) இணைப்பாளர் வாணி சைமன், சமாதான நல்லிணக்கச் செயற்பாடுகளில் பெண் தலைவர்களை வலுப்படுத்தல் (WAGE) திட்ட இணைப்பாளர் கமலவாணி சுதாகரன் ஆகியோருடன் மனித உரிமைஆணைக்குழுவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சட்டத்தரணி ஏ.சி.ஏ.அஸீஸ் மற்றும் அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தவிசாளர்கள் ஆகியோருடன் பாதிப்புற்ற பெண்கள் நிறுவனத்தின்(AWF) உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

றிசாத் ஏ. காதர்...
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# 90 வருட நிறைவைக் கொண்டாடும் தினகரனின் பணி மேலும் வளரட்டும்!







தேசமான்ய எம். இக்பால் சம்சுதீன் வாழ்த்து

தினகரன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு 90 ஆண்டுகள் நிறைவடைந்தமை தொடர்பான முப்பெரும் விழா பேருவளை தேர்தல் தொகுதியில் நடைபெற்றமை குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைவதாக பேருவளை பிரதேச பிரமுகரான தேசமான்ய எம். இக்பால் சம்சுதீன் ஜே.பி தெரிவித்துள்ளார்.

ஆரம்ப காலம் முதல் தினகரன் பத்திரிகையானது கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளுக்கும் பெரும் பங்களிப்பு வழங்கி வருவதாகவும், நாடெங்கும் ஏராளமான வாசகர்களை தினகரன் பத்திரிகையானது தன்வசம் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'ஊடகத்துறையில் சுமார் 45 வருட காலம் பங்களிப்புச் செய்த நான், தினகரன் பத்திரிகையின் நீண்ட கால வாசகர்களில் ஒருவராக இருந்து வருவதையிட்டு பெருமை கொள்கின்றேன். முப்பெரும் விழா பேருவளை தொகுதியில் நடைபெற்றுள்ளமை மிகவும் மகிழ்ச்சி தருகின்றது. தினகரனின் பணி மென்மேலும் சிறப்புறவும், 90 ஆவது ஆண்டு விழா சிறப்புறவும் வாழ்த்துகிறேன்' என்று தேசமான்ய எம். இக்பால் சம்சுதீன் மேலும் தெரிவித்துள்ளார்.

பேருவளை முக்தார்

# ரஜரட்ட பிரதேசத்தில் மட்பாண்டத் தொழிலுக்கு புத்துயிரளிக்க நடவடிக்கை

ரஜரட்ட பிரதேசத்தில் வீழ்ச்சியடைந்து வரும் மட்பாண்டத் தொழிலுக்கு புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டும் என்று இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

பெடிஸ் ரம்பாவ கிராமத்தில் உள்ள மட்பாண்டத் தொழிலாளர்களை சந்தித்த அமைச்சர், அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டார். இத்தொழிலில் ஈடுபட்டு வரும் கிராமவாசிகள் எதிர்கொள்ளும் நீண்டகால பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தேவையான சலுகைகளை வழங்குவது தொடர்பில் இதுவரை சரியான கவனம் செலுத்தப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இம்மக்களின் முக்கிய வாழ்வாதாரம் மட்பாண்டத் தொழிலாகும். மட்பாண்டத் தொழிலை மேற்கொள்வதற்காக தற்போது அவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றனர். இதற்கான இயந்திரத்தை இராஜாங்க அமைச்சரே வழங்கியதாகவும் தொழிலாளர் ஒருவர் தெரிவித்தார்.

அம்மக்கள் தங்களது வாழ்வாதாரத்துக்காக மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வருதாக தெரிவிக்கின்றார்கள். அரசாங்கம் அத்தொழிலை முன்னேற்ற முறையான நடவடிக்கை மேற்கொள்வது அவசியம்.

"களிமண் தொட்டிகளை அமைப்பதற்கான கொட்டகை இல்லை. மின்சாரம் இல்லாமல் தொழிலை மேற்கொண்டுவந்தோம். அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்தால் இந்தத் தொழிலை எளிதில் முன்னெடுத்துச் செல்லக் கூடிய பல குடும்பங்கள் உள்ளன. மேலும் சந்தையில் அதற்கான. நல்ல விலை கிடைக்குமாயின் எங்களுக்கு நல்ல எதிர் காலம் கிடைக்கும்.



கட்டுப்பாட்டு விலை போன்ற ஏதாவது சலுகை கிடைத்தால் இந்தத் தொழிலில் முன்னோக்கி செல்லக் கூடிய வாய்ப்பு கிடைக்கும்.நாங்கள் மட்பாண்டத் தொழிலில் இருந்து விடுபடுவோமாயின் எங்கள் கிராமத்தில் உள்ள இளைய தலைமுறையினர்கள் யாரும் இந்தத் தொழிலுக்கு வர மாட்டார்கள். அவ்வாறானால் ரஜரட்டவில் மட்பாண்டத் தொழிலை மேம்படுத்த முடியாமல் போய் விடும்" எனவும் அத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

"மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள கிராம மக்களுக்கு புதிய தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கும் பிரம்பு, பித்தளை மட்பாண்டங்கள் மற்றும் ப ழைமையான பொருட்களை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தொ ழில்துறை மேம்பாட்டு அமைச்சுடன் இணைந்து ரஜரட்டவில் வீழ்ச்சியடைந்து வரும் மட்பாண்டத் தொழிலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தொழிலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.



மதார் தம்பி ஆரிப்...
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# இலங்கையிலிருந்து செல்லும் ஈழ அகதிகளுக்கு உதவுங்கள்

## தமிழக முதலமைச்சரிடம் செல்வம் எம்.பி கோரிக்கை

ஓமந்தை விஷேட நிருபர்



இலங்கையில் வாழ முடியாதென்று இந்தியா செல்லும் உறவுகள் தொடர்பில் ஈழ அகதிகளுக்கு உதவுமாறு தமிழ் நாடு முதலமைச்சரிடம் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளதா க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாகவே மக்களுடைய தொழில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பிள்ளைகளுக்கு சரியான முறையில் உணவு கொடுக்க முடியவில்லை. அவ்வாறான ஒரு பிரச்சினை இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு நாளும் உணவு பொருட்களின் விலை மிக உயர்வடைவதனால் அன்றாடம் உழைக்கின்றவர்கள் பட்டினியை எதிர்கொள்கின்றநிலைஉருவாகிஅவர்கள் இந்தியா செல்கின்ற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அது தவிர்க்க முடியாதது . ஏனென்றால் குழந்தைகளுக்கு உணவு கொடுக்கவில்லை என்றால் தாய், தந்தை அடுத்த கட்டம் என்ன செய்வது என்று தான் யோசிப்பார்கள்.

ஆகவே இலங்கையில் பட்டினியால் இறப்பதை விட இந்தியா செல்வது சட்டவிரோத செயற்பாடாக இருந்தாலும் கூட, அவ்வாறான ஒரு செயற்பாட்டை மக்கள் செய்வது அந்த காரணங்களை வைத்து கொண்டு தான். எனவே இந்திய அரசாங்கம் அங்கே வருபவர்களை முகாம்களில் விட்டிருப்பதாக அறிகின்றேன். அந்தவகையில் முதலமைச்சருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

இலங்கையில் வாழமுடியாதென்று இந்தியா வரும் உறவுகளை நீதிமன்றத்தை அணுக வைத்து சிறப்பு முகாம்களில் அடைக்காது, மக்கள் தங்கியிருக்கின்ற முகாம்களில் தங்க வைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் முதலமைச்சரிடம் முன் வைக்கின்றேன் என்றார்.



60 ஆவது உலக நாடக தினத்தை முன்னிட்டு நேற்று (27) காலை டவர் ஹோல் நிதியத்தின் ஏற்பாட்டில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் நடைபெற்ற சோமலதா சுபசிங்ஹவின் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்ட "சிறுவர்கள் என்றாலும் இப்ப விளங்குது" "தொப்பி வியாபாரி"எனும் இரு நூல்களின் சிறப்பு பிரதிகளை டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் அமைச்சரிடமிருந்து பெறுவதைகாணலாம். அமைச்சின் செயலாளர் திருமதி நிசாந்தி ஜயசிங்க, டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி எம்.எஸ்.திசாநாயக்க ஆகியோரும் அருகில் காணப்படுகின்றனர்.

## லிற்றோ நிறுவனம் நேற்று 1,10,000 Gas சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகம்

லிற்றோ காஸ் நிறுவனம் நேற்றைய தினம் 1,10,00 எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகித்ததாக தெரிவித்துள்ளது. அதேவேளை இன்றைய தினம் 3500 மெட்ரிக் தொன் எரிவாயுவுடன் கப்பலொன்று நாட்டை வந்தடையும் என அந்த நிறுவனம் தெரித்துள்ளது.

தற்போது கையிருப்பில் உள்ள காஸ் மேலும் இரண்டு வாரங்களுக்கு போதுமானது என்றும் மக்கள் வீண் குழப்பமடையத் தேவையில்லை என்றும் அந்த நிறுவனம் மக்களுக்கு அறிவுத்தியுள்ளது.

வழமையாக ஞாயிறு தினங்களில் காஸ் சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட மாட்டாது. இனினும் சந்தையில் நிலவும் காஸ் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு நேற்றைய தினம் 1,10,000 காஸ் சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நிறுவனத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். சந்தையில் காஸ் சிலிண்டர்களுக்கு நிலவும் தட்டுப்பாடு இரண்டொரு தினங்களில் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என மேற்படி நிறுவனம் தெரிவித்துள்ள நிலையில் கடந்த சில தினங்களாக தினமும் 1,20,000 காஸ் சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகித்து வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நேற்றைய தினமும் காஸ் சிலிண்டர் விற்பனை நிலையங்களுக்கு முன்பாக பெருமளவு மக்கள் வரிசையில் நின்றதைக் காண முடிந்தது. அதேவேளை காஸ் விற்பனையில் இடம்பெற்றுள்ள முறைகேடு காரணமாக ஹற்றன் மற்றும் ஹெம்மாதகம பகுதிகளில் இரண்டு காஸ் சிலிண்டர் விற்பனையாளர்களின் விற்பனை முகவர் பிரதிநிதித்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 12.5 கிலோ கிராம் காஸ் சிலிண்டரின் உச்ச சில்லறை விலையை மீறி அதிகரித்த விலைக்கு அவர்கள் காஸ் சிலிண்டர்களை விற்பனை செய்த குற்றத்துக்காக அது தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகளுக்கு இணங்கவே அவர்களது விற்பனை பிரதிநிதித்துவம் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## பிரெஞ்சுக் குடியரசின் செனட்டர்கள் குழுவுடன் அமைச்சர் பீரிஸ் சந்திப்பு



வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பிரெஞ்சுக் குடியரசின் செனட்டர்கள் குழுவை (24) கொழும்பில் சந்தித்தார்.

இதன்போது, சுகாதாரச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, கல்வி மற்றும் கலாச்சாரத் துறைகளிலான ஒத்துழைப்புக்கு முக்கியத்துவமளித்து, அரசியலமைப்பு சீர்திருத்தம், இலங்கையில் பிரெஞ்சு நிறுவனங்களின் முதலீடு, இலங்கையில் இருந்தான பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிக்கான சந்தைகளை பிரான்சில் விரிவுபடுத்துதல் (குறிப்பாக தேயிலை, மீன் பிடிப் பொருட்கள், ஆடைகள், இரத்திணங்கள் மற்றும் ஆபரணங்கள்), மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இலங்கைக்கும் பிரான்ஸ் குடியரசுக்குமிடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வருவதாக பிரான்ஸ் செனட்டர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர், அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பிரான்ஸ் தூதுவர் எரிக் லாவெர்டு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் கொலம்பகே ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## மின்துண்டிப்பு காலத்தை மேலும் ஒரு மணித்தியாலம் அதிகரிக்க முடிவு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் அதிகரித்த மின்சார கேள்வி காரணமக நேற்று முதல் மேலும் ஒரு மணித்தியாலம் மின் துண்டிப்பை அதிகரித்து நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக பொது பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதுதொடர்பில் அந்த ஆணைக்குழு தெரிவிக்கையில்:

நாட்டில் மின்சாரத்துக்கான கேள்வி அதிகரித்து வருகிறது. அதனைக் கருத்திற்கொண்டு பி வலயம் முதல் டபிள்யூ வலம் வரையான மின்சார துண்டிப்பு நடவடிக்கைகள் மேலும் ஒரு மணித்தியாலத்துக்கு அதிகரிக்க நேர்ந்துள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை பி முதல் டபிள்யூ வரையான எட்டு வலயங்களில் மூன்று மணித்தியாலமாக மின் துண்டிப்பு நீடிக்கப்பட்டுள்ளதாக அவ்வாணைக்குழு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க பி முதல் டபிள்யூ வரையான எட்டு வலயங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 பணி வரை பகல் நேரத்தில் ஒரு மனித்தியாலயமும் பிற்பகல் 3 மணி முதல் இரவு 11 வரையான காலப்பகுதியில் இரண்டு மணித்தியாலய மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்ததாக அந்த ஆணைக்குழு மேலும் தெரிவித்துளளது.

### மின் உற்பத்திக்காக...

அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவிக்கையில்:

கெரவலப்பிட்டி, களனி திஸ்ஸ மற்றும் சுஜிஸ்ட் போன்ற மின் உற்பத்தி நிலையங்களுக்காவே இந்த எரிபொருள் தொகை வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மசகு எண்ணெய் இல்லாத காரணத்தினால் கடந்த 24ம் திகதி முற்பகல் முதல் கெரவலபப்பிட்டி மின் உற்பத்தி நிலையம் செயலிழந்தது.

அந்த மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் தேசிய மின் இணைப்புக்கு 270 மெகாவோட் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை நீர்மின் உற்பத்தி செய்யப்படும் மலையக நீர்த்தேக்கங்களில் தொடர்ச்சியாக நீரின் மட்டம் குறைந்துவருகிறது. மவுசாகலை நீர்த்தேக்கத்தில் 120 அடி உயரத்தில் இருக்க வேண்டிய நீர்மட்டம் தற்போது 54 அடியாக குறைந்துள்ளது. காசல்ரீ நீர்த்தேகத்தில் 155 அடியாக நீர் இருக்கவேண்டிய நீர் மட்டம் 46 அடியாகவே காணப்படுவதாக அந்த நீர்த்தேக்கஙகளோடு சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ)

### சர்வதேச நாணய நிதிய அறிக்கை...

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்தனவும் அது தொடர்பில் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.(ஸ)

### பிம்ஸ்டெக் உச்சி...

கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த உச்சி மாநாட்டில் மியன்மாரின் வெளிநாட்டமைச்சர் மியன்மாரை பிரதிநிதித்துவப்படுத்துவார்.

மாநாட்டிலும் அதுதொடர்பான கலந்துரையாடல்களிலும் பிராந்திய குழுவாக பிம்ஸ்டெக் அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

உச்சி மாநாட்டின் போது பிம்ஸ்டெக் சாசனம் ஏற்கப்பட்டு பல சட்ட ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ஸ)

### ஜெய்சங்கர் இன்று ...

உள்ளிட்ட முக்கிய தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த பேச்சுவார்த்தைகளின் போது இலங்கை இந்தியாவிடம் எதிர்பார்த்துள்ள முக்கிய விடயங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை இலங்கை விஜயத்திற்கு முன்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்றைய தினம் மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ஸ)

### IMF பரிந்துரைகளில் சில...

முக்கிய வர்த்தகப் பொருட்களின் விலைகள் சந்தையில் அதிகரித்துள்ளமை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே சில நடவடிக்கைகளை தற்போது இலங்கை நடைமுறைப்படுத்திவருவதாகவும் மத்திய வங்கி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை இலங்கையானது சர்வதேச நாணய நிதியத்துடன் நெருக்கமாகச் செயற்படுவதற்கு தயாராகவுள்ளதுடன் மேற்படி நாணய நிதியத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கும் தயாராக உள்ளதாக மத்திய வங்கி தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (ஸ)

### சிலாபம் கடலில்...

நானு ஓயாவைச் சேர்ந்த மருதை ராமசாமி என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையும் விஸ்வநாதன் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையுமே இவ்வாறு கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் தும்மலசூரிய கைத்தொழில் பேட்டை பகுதியிலிருந்து வந்தவர்கள் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.(ஸ)

### வெளிநாடுகளுக்குத்...

கடற்படையினரின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொண்டு தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் அவ்வர்த்தகம் ஊடாக அவர்கள் ஈட்டிக்கொண்டுள்ள வருமானத்தின் மூலம் உரிமையாக்கிக் கொண்டுள்ள சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுவதுடன் நிதியை பணச்சலவை செய்வதைத் தடுக்கும் வகையில் சம்பந்தப்பட்ட சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவர்கள் சட்ட விரோதமாக பெற்றுக்கொண்டுள்ள சொத்துக்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

கடதாசி தட்டுப்பாடு:

## ரயில் பயண சீட்டுக்களை டிஜிட்டல் முறைப்படுத்த முடிவு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் நிலவும் கடதாசித் தட்டுப்பாட்டை கவனத்தில் கொண்டு ரயில் பயண சீட்டுக்களை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். டிஜிட்டல் முறைமைக்கு மாற்றுவது தொடர்பில் முறைமையொன்று திட்டமிடப்பட்டுவருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரயில் பயண சீட்டுக்களை அச்சிடுவதற்குத் தேவையான கடதாசி பற்றாக்குறை காரணமாக கடதாசியைப் பயன்படுத்தும் முறைமையை இல்லாதொழித்து டிஜிட்டல் முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பல்வேறு காரணங்களினால் ரயில் சேவைகளில் தாமதம் ஏற்படுவதாக மக்கள் மத்தியிலிருந்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் ரயில் சேவைகள் தாமதத்தை நிவர்த்தி செய்வதற்கும் நிலவும் குறைபாடுகளை சரி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில்

## பிரதமரின் தலைமையில் பங்களாதேஷ் 51ஆவது சுதந்திரதின கொண்டாட்டம்

இலங்கையிலுள்ள பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பங்களாதேஷின் 51ஆவது சுதந்திர மற்றும் தேசிய தின நிகழ்வுகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று (26) கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் மொஹமட் ஆரிபுல் இஸ்லாம் அவர்களின் அழைப்பின் பேரில், கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமரின் பாரியார் திருமதி. ஷிரந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கைக்கும் பங்களாதேஷுக்குமிடையில் இராஜதந்திர உறவுகளை நிறுவி 50 ஆண்டுகள் பூர்த்தியாவதோடு. அது இந்நிகழ்வுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் முகமாக அமையப்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எஸ்.பி.திஸாநாயக்க, இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் மொஹமட் ஆரிபுல் இஸ்லாம், இராஜாங்க அமைச்சரான தாரக பாலசூரிய, வெளிநாட்டு தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு...

எவ்வாறாயினும், தற்போதைய மின் நெருக்கடிக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும் எனவும், மின்சார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தடையில்லா மின்சாரம் விரைவில் வழங்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் 22 மில்லியன் சனத்தொகையில் சுமார் 6 மில்லியன் மக்கள் சமுர்த்தி சலுகைகளைப் பெறுகின்றனர். இதற்காக மாதாந்தம் சுமார் 62 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாக தெரியவந்துள்ளது. சமுர்த்தி பெற வேண்டியவர்களுக்கு உண்மையில் சலுகைகள் கிடைக்கவில்லை எனவும் தேவையில்லாதவர்கள் சமுர்த்தி பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நிலைபேறான அபிவிருத்தி முன்னேற்றத்தை அளவிடும் தரவுகள் 46 குறிகாட்டிகள் மட்டுமே எனவும், அது இதுவரை 105 குறிகாட்டிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், தரவு அடிப்படையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை தற்போது 10ஆவது இடத்தைப் பெற்றுள்ளதாகவும் இதன்போது தெரியவந்துள்ளது.

குறித்த சந்தர்ப்பத்தில் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட, மேலதிக செயலாளர்களான ஏ.விமலவீர, டி.கே.விஜேசிங்க, பிரதமரின் சிரேஷ்ட உதவி செயலாளர் பிரியங்க நாணயக்கார, சனத்தொகை கணக்கெடுப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி அனுரகுமார, கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம், கே.ஏ.ரம்யா காந்தி, அரசு மதிப்பீட்டுத் துறையின் முதன்மை மதிப்பீட்டாளர் பி.பி.டி.எஸ். முத்துக்குமாரண, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.எச். டபிள்யூ.ஏ.குமாரசிறி, நிலையான அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் சமிந்திரி சபரமது, கொள்கை கற்கை நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி துஷினி வீரகோன் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஐஓசி நிறுவனம் மீறி...

எவ்வாறாயினும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே அது தொடர்பில் தெரிவிக்கையில்:

நிதியமைச்சுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு உடன்படிக்கையை மீறி ஐஓசி நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்திருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் முறைமை ஒன்றிற்கிணங்கவே எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன.

அதற்கிணங்க துறைமுகக் கட்டணம், கடனுக்கான வட்டி, சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை, கப்பல் கட்டணம், காப்புறுதிக் கட்டணம், விநியோகஸ்தர்களின் கட்டணம், டொலரின் பெறுமதி மற்றும் இலாபம் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டே பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஐஓசி நிறுவனமும் தமது எரிபொருள் விலைகளைத் தீர்மானிக்கின்றன.

எனினும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் எரிபொருள் விலையை அரசாங்கத்தின் நடுநிலையுடனேயே தீர்மானிக்கின்றது.

அதனால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்பட்டாலும் அரசாங்கத்தின் நடுநிலை இல்லாமல் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எரிபொருள் விலையை அதிகரிக்க முடியாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## 1964ஆம் ஆண்டு 28ஆம் இலக்க காணிகளைக் கைப்பற்றும் (திருத்த) சட்டத்தின் திருத்தங்களின் படி காணிகளைக் கைப்பற்றும் சட்டத்தின் (460ஆம் பந்தி) 7ஆம் உறுப்புரையின் கீழான அறிவித்தல்

**எனது இலக்கம்:** KOT/LND/ACQVI/01/17
**காணி அமைச்சின் இலக்கம்:** LD/05/2004/FR/59

இங்கே கீழே குறிப்பிடப்பட்டுள்ள உப அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசாங்கத்திற்குக் கைப்பற்றிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிக விபர இலக்க 2270/12 மற்றும் 2022.03.08ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரத்தைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | - மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | - கொட்டபொல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - கந்தில்பான/விஹாரஹேன |
| கிராமத்தின் பெயர் | - மத்துகொபே (தற்போது தெனியாய) |
| காணியின் பெயர் | - குருளுகலவத்த அல்லது புன்சி குருளுகல அல்லது கொஸ்குளனஹேன மற்றும் குருளுகல்ல வத்த அல்லது பெலிகல்லென டிவிசன் மற்றும் என்சலவத்த அல்லது கெம்டன்ஹில்வத்த |
| திட்ட இலக்கம் | - அ.க.பி. 169, பத்திர இலக்கம் 118, மேலதிக இலக்கம் 136 |
| துண்டு இலக்கம் | - 1518, 1519 மற்றும் 1520 |
| அளவு | - 447.1355 |

**டபிள்யூ.பீ. சானிக்கா ஐ பெரேரா**
**பிரதேச செயலாளர்,**
**கொட்டபொல.**

**கொட்டபொல பிரதேச செயலகம்,**
**கொட்டபொல.**
2022.03.21

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7 (1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல. கேடிஎஸ்/கேஜீகே/4/2/2014/02/01**
**காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/9/2015/WS/118**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை அரசிற்கு சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷசலிசக் குடியரசின் 2267/16ஆம் திகதிய 2022.02.15 இலக்க அரசாங்க வர்த்தமானியின் III அத்தியாயத்தை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய |
| மாவட்டம் | : கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை |
| கிராம சேவகர் பிரிவு | : மஹகந்த (268) |
| கிராமத்தின் பெயர் | : மஹகந்த |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : டமுபி மஹ 7139 காணித்துண்டின் இலக்கம் 1 |
| துண்டு இலக்கம் | : 01 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார் 0.0038 |

**யு.ஜே.எம்.எஸ்.எஸ்.பீ. ஜயசிங்ஹ**
**பிரதேச செயலாளர்**
**கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.**

2022.03.24ஆம் திகதி
**கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை,**
**பிரதேச செயலாளர் அலுவலகத்தில்.**

# பெறுகை அறிவித்தல்

உடுபத்தாவ பிரதேச சபை வசமான 32-1243 இலக்கம் கொண்ட ஜீப் வண்டியின் தகர வேலையை பூர்த்தி செய்து வண்ணம் பூசுவதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அந்த விலைமனுக்கள் 2022.04.20 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு முன்னர் செயலாளர், உடுபத்தாவ பிரதேச சபைக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து விலைக்கேட்புப் பெட்டிக்கு இடவேண்டும். (கேள்விமனு ஆவணங்கள் வழங்கப்படுவது 2022.04.04 ஆம் திகதி தொடக்கம் 2022.04.19 ஆம் திகதி வரை இடம்பெறும்.) இது தொடர்பில் மேலதிக விபரங்களை எமது நிறுவனத்திற்கு வந்து அல்லது கீழ் குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தொலைபேசி இலக்கம்: 037-4947090 (அலுவலகம்) 074 1889391**

**செயலாளர்**
**உடுபத்தாவ பிரதேச சபை**




## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7 (1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல. கேடிஎஸ்/கேஜீகே/4/2/2015/02/02**
**காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/9/2016/WS/513**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை அரசிற்கு சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷசலிசக் குடியரசின் 2267/16ஆம் திகதிய 2022.02.15 இலக்க அரசாங்க வர்த்தமானியின் III அத்தியாயத்தை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய |
| மாவட்டம் | : கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை |
| கிராம சேவகர் பிரிவு | : வெவதென்ன (274) |
| கிராமத்தின் பெயர் | : வெவதென்ன |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : கடத்திரல் வரைபட இல. 320385 வரைபடத்தின் வலய இலக்கம் 06ல் 24ஆம் படிவத்தில் காணித்துண்டின் இலக்கம் 432 |
| துண்டு இலக்கம் | : 01 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார் 0.0885 |

**யு.ஜே.எம்.எஸ்.எஸ்.பீ. ஜயசிங்ஹ**
**பிரதேச செயலாளர்**
**கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.**

2022.03.24ஆம் திகதி
**கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை,**
**பிரதேச செயலாளர் அலுவலகத்தில்.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**கடற்றொழில் அமைச்சு**

## கட்டிடங்கள் மற்றும் வளவின் துப்புரவு சேவையை மேற்கொள்வதற்கான விலைமனுக் கோரல் - 2022/ 2023

கடற்றொழில் அமைச்சின் கட்டிடங்கள் மற்றும் அமைச்சுக்கு சொந்தமான வளவில் ஓர் ஆண்டு காலத்திற்காக துப்புரவு சேவையை மேற்கொள்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்கின்ற விலைமனுதாரர்களிடம் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் மூலம் 2022.03.28 ஆம் திகதி தொடக்கம் 2022.04.22 ஆம் திகதி பி.ப. 2.00 வரை முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. a. குறித்த நிறுவன கட்டிடங்களின் துப்புரவு மற்றும் பராமரிப்பு சேவையை மேற்கொள்வதன் ஒப்பந்ததாரராக அரசின் பதிவை பெற்றிருத்தல்.
   b. பதிவை பெற்ற பின் அந்த பணிகள் தொடர்பில் அரச துறை அல்லது கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான நிறுவனங்களில் 02 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
   c. கடற்றொழில் அமைச்சு மூலம் பெற்றுக்கொண்ட படிவங்களில் மாத்திரமே விலைமனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. விலைமனு ஆவணத்தை பெற வேண்டியது.
   a. கீழுள்ள முகவரியில் இருந்து 2022.03.28 ஆம் திகதி தொடக்கம் 2022.04.21 ஆம் திகதிக்கு இடையே வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 03.00 வரையான காலத்திலாகும்.
   b. விலைமனுக்களை பெறுவதற்கு முன் மீளளிக்கப்படாத ரூபா 1000/- ஆவணக் கட்டணத்தை கடற்றொழில் அமைச்சின் கொழும்பு 10, மாளிகாவத்தை, புதிய பொதுச் செயலாளர் அலுவலகத்தில் அமைந்துள்ள இரண்டாவது மாடியின் நிதிப் பிரிவின் சிறாப்பருக்கு ரொக்கப்பணமாக செலுத்தி பற்றுச்சீட்டு ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.
   c. அவ்வாறு பெறுகின்ற பற்றுச்சீட்டு மற்றும் விலைமனுதாரர் மூலம் தமது முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் விலைமனு ஆவணத்தை கோருகின்ற கடிதத்துடன் கணக்காளரிடம் (வழங்கல்) சமர்ப்பித்து மேலுள்ள காலத்தில் விலைமனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை 2022.04.22 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் கிடைக்குமாறு கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் அமைந்திருக்கும் இரண்டாவது மாடியின் நிதிப் பிரிவு கணக்காளர் (வழங்கல்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவது அல்லது ஒப்படைத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் திறக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு வருகை தருவதற்கு அனுமதி அளிக்கப்படும். 2022.04.22 ஆம் திகதி பி.ப. 2.00 க்கு விலைமனுக் கோரல் முடிவுற்ற உடன் கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்கள் திறக்கப்படும்.
5. இது தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவையெனின் 011 – 2544365 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து கணக்காளரிடம் (வழங்கல்) பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாளர்**
**கடற்றொழில் அமைச்சு,**
**புதிய பொதுச் செயலாளர் அலுவலகம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு 10.**




## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல.** WGSWD&EIP/ACQ/KB/35
**காணி அமைச்சின் இல.** 4-3/10/2016/LRB/196

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக் காணித் துண்டுகள் தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள நட்டஈட்டு உரித்து விசாரணைகள் 2022ஆம் வருடம் 03 மாதம் 22ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும் மேலதிக விரபங்களுக்கு இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2022.03.10ஆம் திகதி 2270/33ஆம் இலக்க அதிவிசேட வர்த்மானியைப் பார்க்க.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | மாகாணம் | : மேல் மாகாணம் |
| 2. | மாவட்டம் | : கொழும்பு |
| 3. | பிரதேச செயலாளர் பிரிவு | : கெஸ்பேவை |
| 4. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இல. 535, பெப்பிலியான மேற்கு |
| 5. | கிராமம் | : பெப்பிலியான |
| 6. | வரைபட இல. | : ஆரம்ப வரைபட இல. கோ:9741 |
| 7. | துண்டு இல. | : துண்டு இல. 1 தொடக்கம் துண்டு இல. 6 வரை (06 காணித் துண்டுகள்) |
| 8. | முழு விஸ்தீரணம் | : 0.0344 ஹெக்டயார் |

**எச். திலக்கவர்தன,**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர்,**
**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,**
**கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு.**

**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,**
**இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 3 ஸ்ரீ ஜயவர்தனபுரமாவத்தை,**
**வெலிக்கடை, இராஜகிரிய.**

2022.03.18

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாகொல, மாகொல தெற்கு, சப்புகஸ்கந்த வீதி, இல. 10/பீ/4இல் வசிக்கும் **ஹேரத் முதியன்சேலாகே சரித்த தேவிந்த** (தே.அ.அ. இல. 753001328V மற்றும் கடவுச் சீட்டு இல. N8390497) ஆகிய நான் கம்பஹ பகிரங்க நொத்தாரிசு திரு. **ஆர். ஏ. பீ. எம். பெரேரா** வினால் உறுதி செய்யப்பட்ட இல. 423 மற்றும் 2019 டிசம்பர் 27ம் திகதிய விசேட அற்றோணி மூலம் கொழும்பு -03 5ஆம் ஒழுங்கை, இல. 96 வசிக்கும் **ஹேரத் முதியன்சேலாகே ஓமாலி சமுத்ரா** (தே.அ.அ. இல. 967173010V மற்றும் கடவுச் சீட்டு இல. N7783070) இற்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவம் 2022.03.22ம் திகதி முதல் இரத்துச் செய்யப்படுவதாகவும் அவரால் இனிமேல் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**ஹேரத் முதியன்சேலாகே சரித்த தேவிந்த**

## கம்பனி பெயர் மாற்றத்தின் பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| கம்பனியின் பழைய பெயர் | : தம்முல்ல மெட்டல் கிரஷர்ஸ் (பிரைவட்) லிமிடெட் |
| கம்பனியின் பதிவிலக்கம் | : PV 00239012 - 2021-05-02ஆம் திகதி |
| கம்பனியின் பதிவு முகவரி | : இல. 118, அளுத்கம வீதி, வலவெல |
| கம்பனியின் புதிய பெயர் | : கொம்முல்ல மெட்டல் கிரஷர்ஸ் (பிரைவட்) - 2021-12-30ஆம் திகதி |

2022-03-28

**செயலாளர்கள் - பிரிமியர் கன்சால்டன்ஸ் (பிவீடி) எல்டிடி,**
**இல. 85A, பழைய கெஸ்பேவ வீதி, ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ.**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| கம்பனியின் பழைய பெயர் | : வெல்னஸ் சொலூஷன்ஸ் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிடெட் |
| கம்பனியின் பதிவிலக்கம் | : PV 00218077 - 2021-05-02ஆம் திகதி |
| கம்பனியின் பதிவு முகவரி | : இல. 8A/6, தர்ஷன பிளேஸ், காலி வீதி, வலான, பாணந்துறை. |
| கம்பனியின் புதிய பெயர் | : ஹலோ டொக்டர் (பிரைவட்) - 2022-01-11ஆம் திகதி |

2022-03-28.

**செயலாளர்கள் - பிரிமியர் கன்சால்டன்ஸ் (பிவீடி) எல்டிடி,**
**இல. 85A, பழைய கெஸ்பேவ வீதி, ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ.**

# பெறுகை அறிவித்தல்
## மாவட்ட பொது வைத்தியசாலை பொலன்னறுவை

பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின வாட்டுகள் மற்றும் அலகுகளுக்கு மருத்துவ வாயு குழாய் அமைப்பை ஸ்தாபிப்பதற்கு மற்றும் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பழுது பார்ப்பதற்காக ஒப்பந்தக்காரர்களை நியமிப்பதுடன் சம்பந்தப்பட்டதாக 2022.04.21 பி.ப. 2.00 வரை கேள்விகள் கோரப்படுகின்றன.

01. மருத்துவ வாயு குழாய் அமைப்பை ஸ்தாபித்தல்

| இலக்கம் | ஒப்பந்த்தின்/ வேலையின் பெயர் | கோவை இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டணம் | கேள்விப் பிணைக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் வார்ட் மற்றும் அலகிற்காக மருத்துவ வாயு குழாய் அமைப்பை ஸ்தாபித்தல் | DGHP/ACC/ F8/20-30/2022 | 3,500.00 | 200,000.00 |

02. கட்டிட நிர்மாணம் மற்றும் பழுது பார்த்தல்

| இலக்கம் | ஒப்பந்தத்தின்/ வேலையின் பெயர் | கோவை இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டணம் | ICTAD பதிவு | கேள்விப் பிணைக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | ஆண் தாதி விடுதியை பழுது பார்த்தல் | DGHP/ACC/ F8/20-04/2022 | 3,500.00 | C5 அல்லது C6 | 225,000.00 |

01. தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் கட்டிட நிர்மாணம் மற்றும் பழுது பார்த்தலுக்காக விலைமனுக்களை கோரும்போது ரூபா 50 மில்லியனுக்கு குறைந்த நிர்மாணத்திற்கு பிரதேச முன்னுரிமையாக 05% மற்றும் CIDA முன்னுரிமை (Regional Preference) அரச நிதி சுற்றுநிருபம் 4/2016(11) இற்கு அமைவாக வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.
02. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளும் போது கேள்வி ஆவணக் கட்டணமாக இவ் வைத்தியசாலையின் கணக்காளருக்கு காசு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு அல்லது இலங்கை வங்கியின் கதுருவெல கிளையின் கணக்கு இல. 7040277. Director - District General Hospital Polonnaruwa என்ற கணக்கிற்கு காசு வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுடன் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் வேண்டுதல் கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்விப் பத்திரங்களைக் கொள்வனவு செய்யும்போது கட்டிட நிர்மாணம் மற்றும் பழுது பார்த்தல் தவிர்த்து கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கும் உருப்படியுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பெறுமதி ரூபா 05 மில்லியனுக்கு மேற்படி கேள்விதாரர்களுக்கு அல்லது சார்பான நகல் பிரதிநிதியொருவர் உப பிரதிநிதி அல்லது பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிடப்படுவதாக பதிவு செய்வதற்கான சான்றிதழ் பொது ஒப்பந்த பதிவாளர் கொழும்பு இடம் பெற்றுக் கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விகள் தனி உருப்படியாக சமர்ப்பித்துள்ளதுடன் தனி உருப்படியாக கேள்விகள் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படும் கேள்விகளை சமர்ப்பிக்கும் போது பதிலீடாக விலைமனுக்களை சமர்ப்பித்தல் கூடாது அத்துடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
05. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
06. ஆர்வம் காட்டுகின்ற மற்றும் தகைமையுள்ள கேள்விதாரர்/ பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிடப்படுபவரால் கீழ்க்காணுபவற்றை சமர்ப்பித்து கொள்வனவு செய்யப்படும் முழுமையான கேள்வி தொகுதியொன்றின் மூலம் மாத்திரம் பொறியிடப்பட்ட கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    I. பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, பொலன்னறுவைக்கு குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூல விண்ணப்பம்.
    II. மேலே குறிப்பிடப்படுமாறு மீளளிக்கப்படாத கட்டணம், காசாக பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசலையின் கணக்காளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு
07. பொலொன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் தொ.பே. இல. 027-2225780 அல்லது 027-2222261 (நீடிப்பு இல. 362) இடம் கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், பெறுகை ஆவணங்களை 2022.04.20ம் திகதி வரை கடமை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையாக காலத்திற்குள் மாத்திரம் பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் ‘பெறுகை மற்றும் செலவுகள் முகாமைத்துவ அலகு’ இடம் பெற்றுக் கொள்ளலாம்.
08. பெறுகை ஆவணங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் உருப்படியின் பெயரை தெளிவாகக் குறிப்படுதல் வேண்டும். அத்துடன் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்படும் பொறியிடப்பட்ட கேள்விகள் ‘தலைவர், பிரதேச பெறுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, பொலன்னறுவை’ என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது பொலன்னறுவ மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள இல. 01 என குறிப்பிடப்படும் பெறுகைப் பெட்டியில் உள்ளிட்டு 2022.04.21 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைவதுடன் (அன்றே பி.ப. 2.00 இற்கு) பொலன்னறுவை மாவட்ட வைத்தியசாலையின் இரண்டாம் மாடியில் உள்ள மைத்திரிபால சிரிசேன கேட்போர் கூடத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் அவை திறக்கப்படும்.
09. கேள்வி திறக்கப்படும் வேளையில் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதியொருவர் சமுகமளிப்பின் அது பற்றி உறுதி செய்யும் கடிதமொன்றை குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. இப் பெறுகை பற்றிய வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**பொலன்னறுவை.**
2022.03.23



## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**

விற்பனைக்கு

CP QF-8717 Bajaj Threewheel, 2006, கூடிய விலைக் கேள்விக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810. 022642

**வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியொன்றின் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் குறைப்பு தொடர்பான பொது அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 59(2)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

**கம்பனியின் பெயர்:** கே என்ட் டி கார்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிடட்

**கம்பனி இலக்கம்:** PV 104061

**அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம்:** 50,000,040/ரூபா

**குறைக்கப்பட்டதன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம்:** 5,000.040/ரூபா

**Corporate D' Solutio (Private) Limited**
**கம்பனிச் செயலாளர்கள்**
**இல. 126, 3/3, 3ஆம் மாடி,**
**YMBA கட்டிடம்,**
**கொழும்பு -01.**
25.03.2022

# வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

# தொழில் வாய்ப்புகள்

## தொழில்நுட்ப அதிகாரி பதவி தரம் III

வ/ப லங்கா மின்சார தனியார் கம்பனியானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையிலான கடலோர வழியில் அதனது ஏழு கிளைகளினூடாக 500,000 பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகம் செய்கின்ற அமைப்பாகும். 1500 ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனத்தில் செயற்பாட்டிற்காக மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கு எந்தப் பிரதேசத்திலும் சேவை செய்யக்கூடிய தகுதிவாய்ந்த நபர்களைத் தேடுகின்றனர்.

| | |
|---|---|
| **கல்வித் தகைமைகள்** | : க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் உட்பட்டதான சித்தி |
| **துறைசார் தகைமைகள்** | : இயைபுடைய துறையில் TVEC யினால் அங்கீகரிக்கப்பட்ட NVQ நிலை 4 கற்கை நெறிச் சான்றிதழ் |
| **மேலதிக தகைமைகள்** | : மென்பொருளில் சேவை செய்யும் அனுபவம் மற்றும் அறிவு மற்றும் / அல்லது "D" வகுப்பு சாரதி உரிமத்துடன் சாரதி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| **வயது** | : 2022-04-04ஆம் திகதியில் 40 வயதிற்குட்பட்டவர்கள் |

துறைசார் பரீட்சையொன்று மற்றும் நேர்முகத் தேர்வு அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

உங்கள் சுயதரவு, சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பிலக்கங்களை 2022 ஏப்ரல் 04ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் நபருக்குக் கிடைக்கும் வகையில் தயவு செய்து அனுப்பவும்.

தபாலுறையின் இடது பக்க மேல் பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர் - மனித வளங்கள் மற்றும் நிருவாகம்**
**வ/ப இலங்கை மின்சார தனியார் நிறுவனம்,**
**3 ஆம் மாடி, ஈ.ஏச். குரே கட்டிடம்.**
**411, காலி வீதி,**
**கொழும்பு-03.**

# இலங்கை புகையிரத சேவைகள்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**கீழ் மாவட்டத்திலுள்ள கரையோர பாதையில் 36 M 47 C பேருவளை முதல் அளுத்கமவுக்கிடையிலுள்ள பாவிக்கமுடியாத பாலச் சீவல்களை (Condemned Bridge Scrap) அப்புறப்படுத்தல் - SRS/F.7801**

01. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களப் பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர் கீழ் மாவட்டத்திலுள்ள கரையோர பாதையில் 36 M 47 C பேருவளை முதல் அளுத்கமவுக்கிடையிலுள்ள ஏறக்குறைய 50 மெ.தொ பாவிக்கமுடியாத பாலச் சீவல்களை (Condemned Bridge Scrap) இரத்மலானை முற்றவெளியிலுள்ள இலகுரக உலோக சீவல்களை அப்புறப்படுத்துவதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளைப் பெற்றுக்கொள்வார்.
02. 2022-04-20ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுறும்.
03. 2100.00 ரூபா (இரண்டாயிரத்து நூறு ரூபா) மட்டும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை புகையிரத சேவைகள் பிரதான நிதி அதிகாரி அலுவலகத்திற்குச் செலுத்துவதன் பேரில் 2022-04-19ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. இலங்கை புகையிரத சேவைகளின் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் வைத்து, விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்த உடனடியாகவே அவை திறக்கப்படும். விலை கூறுநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
05. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ பின்வருபவருக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு, (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகம்,**
**ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

06. விலைமனு ஆவணங்களை புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
07. மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின் புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி: 2438078 /2436818
தொலைநகல்: 2432044
மின்னஞ்சல்: tender2@railway.gov.lk
இணையம்: www.railway.gov.lk

Ref. No. SRS/F.7801

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்)**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

**கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

# பெறுகை அறிவித்தல்

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ளல்

01. சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் டபள் கெப் வாகனமொன்று மற்றும் 07 கார்களை ஒரு வருட காலத்திற்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக இலங்கையின் வாகன உரிமையாளர்கள் மற்றும் வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைக்கோரல் | சமர்ப்பிக்க வேண்டி பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ளல் | ஒரு வாகனத்திற்கு 25,000.00 ரூபாவாகும் வகையில் முற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் வாகனங்களுக்குச் சமனாக | 3,500.00 |

02. இந்த வாகனங்கள் மாதாந்த வாடகை அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.
03. குறித்த கால எல்லையினுள் வாகனங்களின் பராமரிப்பு வேலைகளை குறித்த வழங்குநரே மேற்கொள்ள வேண்டும்.
04. இந்த முன்மொழியப்பட்டுள்ள முறையின் கீழ் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் வாகனங்கள் 2014-01-01ஆம் திகதிக்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட வாகனங்களாகவிருத்தல் வேண்டும்.
05. மேற்படி விலைக்கோரலுக்கு இயைபாக சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைக்கோரல் படிவங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை பிரதான அலுவலகத்தின் போக்குவரத்து முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து 2022-03-28ஆம் திகதி முதல் 2022-04-18ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையான அலுவலக நேரத்தினுள் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா விலைமனுக் கட்டணத்தை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான அலுவலக காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
06. மேற்படி விலைக்கோரலுக்கு இயைபாக விருப்பமான அளவு வாகனங்களை முன்வைக்கலாம் என்பதுடன் சமர்ப்பிக்கும் விலைமனுக்களுடன் ஒவ்வொரு வாகனத்திற்கும் 25,000.00 ரூபா வீதம் முற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் வாகன எண்ணிக்கைக்குச் சமனான பெறுமதியைக் கொண்ட விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரை செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்றைச் (Bank Guarantee) சமர்ப்பித்தல் வேண்டும்.
07. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை பிணை முறி சகிதம் விலைமனுக்களை முறையாக முத்திரை பொறித்து தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரிக்கு 2022 ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது போக்குவரத்துப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்ட விலைமனுக்களாக கவனத்திற் கொள்ளப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
08. இந்த விலைக்கோரல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார். இது தொடர்பான மேலதிக தகவல்களை 0112382181 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது 0112382181 எனும் தொலைநகல் இலக்கத்தின் ஊடாக முகாமையாளர் (போக்குவரத்து) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,**
**சேர் சிற்றம்பம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02, இலங்கை.**

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7 (I)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல. கேடிஎஸ்/கேஜீகே/4/2/2016/02/03**
**காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/9/2016/WS/555**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை அரசிற்கு சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷசலிசக் குடியரசின் 2266/35ஆம் திகதிய 2022.02.09 இலக்க அரசாங்க வர்த்தமானியின் III அத்தியாயத்தை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய |
| மாவட்டம் | : கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை |
| கிராம சேவகர் பிரிவு | : அம்பிடிய உடகம வடக்கு (269) |
| கிராமத்தின் பெயர் | : மீகனுவ |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : கடத்திரல் வரைபட இல. 320390 வரைபடத்தின் வலய இலக்கம் 01ல் 5ஆம் படிவத்தில் காணித்துண்டின் இலக்கம் 238<br>கடத்திரல் வரைபட இல. 320390 வரைபடத்தின் வலய இலக்கம் 01ல் 5ஆம் படிவத்தில் காணித்துண்டின் இலக்கம் 239 |
| துண்டு இலக்கம் | : 02 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார் 0.0308 |

**யு.ஜே.எம்.எஸ்.எஸ்.பீ. ஜயசிங்ஹ**
**பிரதேச செயலாளர்**
**கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.**

2022.03.24ஆம் திகதி
**கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை,**
**பிரதேச செயலாளர் அலுவலகத்தில்.**

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்கோரல்

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலைத்திட்டத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத்தொகை ரு. மில்லியன் | ICTAD தரம் | காப்புறுதிப் பிணைத்தொகை (ரு) | ஒப்பந் தக்காலம் | மீள்செலுத்தப்படாத மனு ஆவண கட்டணம் (வட் வரியுடன்) (ரு) |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | RDA/RBCD/UP/ GOSL/2022/003 | மீகாஹகிவுல தல்தென லோக்கல் ஓயா குறுக்காக அமைக்கப்பட்டுள்ள பாலத்தின் எஞ்சியுள்ள பணிகளை செய்தல் (மீகாஹகிவுல பி.செ.பி) | 12.86 | C6, அல்லது அதற்கு மேல், பாலம் அமைத்தல் | 128,600.00 | 180 நாட்கள் | 3780.00 |
| 02. | RDA/RBCD/CP/ GOSL/2022/004 | மஸ்கெலியா இரதர்போர்டில் மஸ்கெலியா ஓயாவில் அமைக்கப்பட்டுள்ள பாலத்தின் எஞ்சியுள்ள பணிகளை செய்தல் (அம்பகமுவ பி.செ.பி) | 22.20 | C6, அல்லது அதற்கு மேல், பாலம் அமைத்தல் | 222,000.00 | 180 நாட்கள் | 3780.00 |

2. இந்த பணியானது கிராமிய பாலக்கட்டுமானத்தினை உள்ளடக்கியது.
3. மனுக் கோரல் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய செயற்படுத்தப்படும்.
4. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **கிராமிய பாலக்கட்டுமான பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல-50, புகையிரத நிலைய வீதி, அங்குலானை, தொலைபேசி** : 011-2623897 காரியாலயத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதுடன் காரியாலய நேரங்களில் மனு அவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தகள் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயமாகும். **(www.eroc.drc.gov.lk)**
6. **2022.03.28** ஆம் திகதியிலிருந்து **2022.04.07** ஆம் திகதி வரை **மு.ப.9.00** மணியிலிருந்து **பி.ப.15.00** மணி வரையான காலப்பகுதியில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை வெலுத்தி எமுத்து மூல விண்ணப்பத்தினை **கிராமிய பாலக்கட்டுமான பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலக்கம் 50, புகையிரத நிலைய வீதி, அங்குலானை** முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான பூரண மனு விண்ணப்பத்தொகுதியை பெற்றுக்கொள்ள முடியும்.
7. கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் குறிப்பிடப்பட்ட பூரண மனுப் பிரதிகள் இரண்டுடன் **2022.04.08** ஆம் திகதி **14.00** மணி அல்லது அதற்கு முன்னதாக கீழ் காட்டப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் முடிவடைந்த பின்னர் மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. மனு விண்ணப்பங்களை முன்வைப்பதற்கு முன்கூட்டம்

   **(அ) இலக்கம் 01** இற்காக **2022.04.01** ஆம் திகதி **மு.ப.10.30** மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் **பதுளை** பிரதான பொறியியலாளர் காரியாலயத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

   **(ஆ) இலக்கம் 02** இற்காக **2022.04.01** ஆம் திகதி **மு.ப.10.30** மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் **நுவரெலியா** பிரதான பொறியியலாளர் காரியாலயத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

9 மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாலங்களுக்கான ஏல உத்தரவாதம் **2022.08.04** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் எனப் பெறப்பட வேண்டும் மற்றும் மனுக்கள் **2022.07.07** ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.

10. மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள பணிப்பாளர், கிராமிய பாலக் கட்டுமானம், RDA தொலைபேசி இலக்கத்தினூடாக : **011-2623897** மற்றும் director3rbcd@gmail.com எனும் மின்னஞ்சல் மூலமாக பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**வழங்கல் குழு,**
**கிராமிய பாலக்கட்டுமான பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**இல-50, புகையிரத நிலைய வீதி,**
**அங்குலானை.**

# பெறுகை அறிவித்தல்

## பிரதான செயலகம்

## வடமத்திய மாகாணம்

01. வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் உத்தேச கீழே குறிப்பிடப்படும் செயற்றிட்டங்களுக்காக வடமத்திய மாகாண கௌரவ ஆளுநரால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் தலைவர் மற்றும் பிரதம செயலாளரான என்னால் தகைமையான கேள்விதாரர்களிடமிருந்து பெறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| செயற்றிட்டம் | நிதித் தன்மை | மதிப்பிடப் பட்ட வேலை செலவு ரூ.மி. | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணையின் பெறுமதி | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் ரூ. | CIDA பதிவு எல்லை | கேள்விப் பிணை முறி செல்லு படியாக வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| தியபெதும வைத்திய சாலையின் வெளி நோயாளர் பிரிவு அவசர சிகிச்சைப் பிரிவு மருந்துக் களஞ்சியம் மற்றும் நிர்வாக கட்டிடம் நிர்மணித்தல் | PSSP | 41.6 | 270 நாட்கள் | 420,000.00 | 12,500.00 | C4 மற்றும் C5 (கட்டிடங் களுக்கு) | 119 நாட்கள் (2022.04.20 முதல் 2022.08.16 வரை) |

02. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையில் இடம் பெறும் இவ் பெறுகைகளின் முழுச் செலவு மதிப்பீடு ரூபா 50 மில்லியனுக்கு குறைவாகும்போது பிரதேச முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை மாகாண திறைசேரியின் சுற்றுநிருப இல. 2016/13(i) இன் பிரகாரம் பொருந்தும்.
03. தகைமைகளைப் பூர்த்தி செய்து அபகீர்த்தியானோர் பட்டியல் இடப்படாத கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத் தொகையை வடமத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்/பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பொலன்னறுவை இற்கு செலுத்திய பின்பு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் தேவைப்படும் கேள்வி மாதிரிப்பத்திரங்களை வட மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்கள பணிமனையில்/பொலன்னறுவை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் 2022.03.25 முதல் 2022.04.19 வரை அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.
04. கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2022.04.20 முற்பகல் 11.00 இற்கு முன்பு கிடைக்குமாறு 'பிரதேச செயலாள்/தலைவர், கௌரவ ஆளுநர் நியமித்த பெறுகைக்குழு பிரதம செயலாளர் பணிமனை, நான்காம் மாடி, மாகாண சபை நிர்வாக கட்டிடத் தொகுதி ஹரிஸ்சந்திர மாவத்த, அநுராதபுரம்' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம்.
05. சகல கேள்வியுடனும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியிலிருந்து அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியத்தின் மூலம் (Construction Guarantee Fund)) பெற்றுக் கொண்ட அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் காலம் உள்ள நிபந்தனையற்ற 'வடமத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்' பெயரில் பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
06. கேள்விகளை சமர்ப்பிக்கும்போது மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வேறுவேறு இரு உறைகளில் இட்டு முத்திரையிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு முத்திரையிட்டு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் திட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
07. 2022.04.20 முற்பகல் 11.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரம் ஒப்படைக்கப்படும் பிரதிநிதியொருவருக்கு இவ் வேளையில் சமுகமளிக்கலாம்.
08. இப் பெறுகை பற்றிய வடமத்திய மாகாண கௌரவ ஆளுநர் நியமித்த பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**பிரதம செயலாளர்/தலைவர்,**
**கௌரவ ஆளுநர் நியமித்த பெறுகைக் குழு,**
**பிரதம செயலகம், வடமத்திய மாகாணம்.**
2022.03.24

# தெலுங்கு புத்தாண்டு விரதம்



பங்குனி மாத அமாவாசைக்கு மறுநாள் பிரதமையில் தெலுங்கு புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. அன்று அமாவாசை ஒரு நாழிகை இருந்தால்கூட மறுநாள்தான் யுகாதி கொண்டாட வேண்டும். மனித வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் மாறிவரும் என்பதையும் அதைப் பொறுமையோடு எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் இந்த யுகாதி பண்டிகை உணர்த்துகிறது.

காலையில் எழுந்து புனித நீராடி, கௌரி தேவியை நினைத்து, தீபம் ஏற்றி வழிபட்டு விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். புதிய பஞ்சாங்கத்தைப் பூஜையறையில் வைத்து, அதைச் சந்தனம், குங்குமம், மலர்களால் அலங்கரிக்க வேண்டும். தொடர்ந்து ஏழு ருசியுள்ள பச்சடியைச் செய்ய வேண்டும். இதற்கு சத்ருஜி (சத் ஏழு) பச்சடி என்று பெயர். இதில் உப்பு, புளிப்பு, இனிப்பு, கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு ஆகிய ருசிகள் இருக்க வேண்டும்.

விநாயகர், பெருமாள், கௌரி அம்பிகை மற்றும் இஷ்ட தெய்வம், குலதெய்வங்களை முன்வைத்து ஒப்பட்லு என்கிற விசேஷ போளி, புளியோதரை, பால் பாயசம் செய்து ஏழு ராகங்கள் பாடி தெய்வங்களுக்குப் படையல் செய்து, ஆரத்தி செய்வது வழக்கம். அனைவரும் அஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டு பிரசாதம் எடுத்துக்கொண்டு, மங்கள ஆரத்தி செய்வது வழக்கம். யுகாதி பண்டிகை ஒரு ஆண்டாகிய யுகத்தின் தெய்வ அனுகூலத்தையும் உலக மக்களின் வாழ்க்கை நலன்களையும் முன்னதாகவே அறிந்துகொள்ளக்கூடிய காலக்கண்ணாடியாக திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்து விதமான அங்கங்களைக் கொண்ட மங்களகரமான பஞ்சாங்கப் படனமாக மலர்கிறது.

சைவ மஞ்சரி

## இராமாயணம் கேட்டால் வாழ்வு சுபிட்சமாகும்

அரக்கனான ராவணன் சீதையைக் கவர்ந்து சென்று விட்டான். அவளை தன் வசப்படுத்த எத்தனையோ வழிகளில் முயற்சித்தான். அவள் சம்மதிக்கவில்லை. என்ன செய்வதென தெரியாமல் விழித்த நேரத்தில் சிலர், "சீதைக்கு ராமனைப் பிடிக்கிறது என்றால், நீயும் ராமன் மாதிரியே உன் உருவத்தை மாற்றிச் செல்ல வேண்டியது தானே! உன் எண்ணம் நிறைவேறுமே" என்றனர்.

அப்போது ராவணன் சொன்னான். "உங்களுக்கு தோன்றும் யோசனை எனக்கும் தோன்றியிருக்காதா என்ன! ஒருநாள் ராமனாக என்னை மாற்றியதும் நல்லவனாகி விட்டேன். தப்பு செய்ய மனம் வரவில்லை. அது மட்டுமல்ல! அந்த வேஷத்தில் சென்றால் சீதையை வணங்கத் தோன்றுகிறது. அந்தளவுக்கு ராமன் நல்லவனாக இருக்கிறான்!" என்றான். வேஷமிட்டால் கூட ராமர் நல்லெண்ணத்தை கொடுப்பார் என்பதைச் சொல்லும் கதை இது. நல்லவர் வணங்கும் தெய்வமான ராமரை வணங்கி நம் வாழ்வு சிறப்புற வழி அமைப்போம்.

## மானுடவியல்

(தொடர்)

### சிவகோசரியார்



66

தேனும் கலந்திருகிறது. தித்திக்கும்" என்று சொல்லி, உண்பித்து, அவருக்குப் பக்கத்திலே பிரியாமல் நின்றார்.

அப்பொழுது முதனாட் போன நாணனும் காடனும் ஆகிய இருவராலும் தன்புத்திரராகிய திண்ணனாருடைய செய்கைகளை அறிந்த நாகன் ஊணும் உறக்கமுமின்றித் தேவராட்டியையுங் கொண்டுவந்து, திண்ணனாரைப் பற்பல திறத்தினாலே வசிக்கவும், அவர் வசமாகாமையைக் கண்டு, சிந்தை நொந்து,

"இனியாதுசெய்வோம்" என்று சொல்லிக்கொண்டு; அவரை விட்டுத் திரும்பிப் போய்விட்டனர்.

சிவபெருமானோடு ஒற்றுமைப்பட்டு அவ்விறைப்பணியின் வழுவாது நிற்குந் திண்ணனார் பகற்காலத்திலே மிருகங்களைக் கொன்று சுவாமிக்கு இறைச்சியை ஊட்டியும், இராக்காலத்திலே நித்திரை செய்யாமல் சுவாமிக்கு அருகே நின்றும், இப்படித் தொண்டுசெய்து வந்தார்.

சிவகோசரியாரும் தினந்தோறும் வந்து, சந்நிதானத்திலே இறைச்சி கிடத்தலைக் கண்டு, இரங்கிச் சுத்திசெய்து, சைவாகமவீதிப்படி அருச்சித்துக்கொண்டு, "இந்த அநுசிதம் நிகழாமல் அருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்து வந்தார்.

திருக்காளத்தியப்பர் அந்தச் சிவகோசரியாருடைய மனத் துயரத்தை நீக்கும்பொருட்டு ஐந்தாநாள் இராத்திரியில் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி,

"அன்பனே! அவனை வேடுவன் என்று நீ நினையாதே. அவனுடைய செய்கைகளைச் சொல்வோம்.; கேள். அவனுடைய உருவமுழுவதும் நம்மேல் வைக்கப்பட்ட அன்புருவமே. அவனுடைய அறிவுமுழுதும் நம்மை அறியும் அறிவே, அவனுடைய செய்கைகள் எல்லாம் நமக்கு இதமாகிய செய்கைகளே.

**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

## ஆலமகீ ஏகாதசி

பங்குனி மாதத்தில் வளர்பிறையில் வரும் ஏகாதசிக்கு ஆலமகீ ஏகாதசி என்று பெயர். ஆலமகீ ஏகாதசி தினத்தில் விரதம் இருந்து திருமாலை வழிபட கோ (பசு) தானம் செய்த பலன் கிடைக்கும். இவ்விரதத்தை மேற்கொண்டால் நினைத்த காரியங்கள் நிறைவேறும் என்பதும் நம்பிக்கை.

**விஜயா ஏகாதசி**

பங்குனி மாதத்தில் தேய்பிறையில் வரும் ஏகாதசிக்கு விஜயா ஏகாதசி என்று பெயர். விஜயா என்றால் வெற்றி என்பது பொருளாகும். தங்களுடைய முயற்சிகளில் வெற்றி பெற விரும்புவோர் இவ்விரதமுறையை பின்பற்ற நல்ல பலன் கிடைக்கும். ராமச்சந்திர மூர்த்தி இவ்விரத்தை மேற்கொண்டே இராவணனை வெற்றி கொண்டு, சீதா தேவியை மீட்டதாக புராணங்கள் கூறுகின்றன.

சிவபெருமானால் அம்மையே என்று அழைக்கப்பட்ட புனிதவதி என்னும் காரைக்கால் அம்மையாரின் குருபூஜை பங்குனி சுவாதியில் மேற்கொள்ளப்படுகிறது.

பங்குனி மாத சிறப்புகள் பற்றி அறிந்து கொண்டீர்களா? பங்குனியில் அவதரித்ததால்தான் வில்வித்தை வீரனான அர்ஜூனன் பால்குணன் என்ற பெயரினைப் பெற்றான். வசந்த காலமான பங்குனி எல்லோர் வாழ்விலும் வசந்தத்தை வீசட்டும்.

## வேலை வணங்குவதே வேலை



செவ்வாய்க் கிழமை விரதம் இருந்து முருகனை வழிபாடு செய்ய உகந்த நாள் என்று முன்னோர்கள் சொல்லுவார்கள். அதற்கான காரணத்தை அறிந்து கொள்ளலாம்.

வருவாய் அதிகரிக்க வேண்டுமானால் செவ்வாய்க்கிழமை விரதம் இருக்க வேண்டும் என்று முன்னோர்கள் சொல்வார்கள்.

பொருளாதார நிறைவை வழங்குவது அங்காரகன்தான். அந்த அங்காரகனுக்குரிய தெய்வமாக விளங்குவது முருகப்பெருமான் மற்றும் சக்தி தேவி.

முருகப்பெருமான், சக்தி தேவி, அம்பிகைக்கு உகந்த நாளான செவ்வாய்கிழமையில் இந்த தெய்வங்களை வணங்கினால் கவலைகள் அகலும்.

செந்நிற ஆடை அணிந்து வழிபாட்டில் பங்கேற்பது; அன்றைதினம் தங்குதடை இல்லாத வாழக்கையும், தன்னிகரில்லாத அளவு புகழும், மங்கல வாய்ப்பு களையும், மாபெரும் சக்தியையும் பொங்கிவரும் உள்ளத்தில் தன்னம்பிக்கையையும், செந்நிற கனிவைத்து தீபாராதனை செய்ய வேண்டும்.

கார்த்திகை நட்சத்திரம் அல்லது விசாக நட்சத்திரம் அல்லது விசாக நட்சத்திரம் அமைந்த செவ்வாய்க் கிழமை விரதத்திற்கு பலன் அதிகம் உண்டு. வேலை வணங்குவதே வேலை எனச் சொல்லி வீட்டில் வேல் வழிபாடும் செய்யலாம். வீட்டு பூஜையறையின் நடுவில் வேல் வைத்து இருபுறமும் இரு விளக்குகள் வைத்து ஒரு விளக்கில் மூன்று திரிகளும், மற்றொரு விளக்கில் மூன்று திரிகளும் ஆக ஆறு தீபமிட்டு ஆறுமுக வழி செய்து வந்தால், சீரும் சிறப்பும் வந்து சேரும்.

இந்த விரதத்தை மேற்கொள்ளும் போது, முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் உள்ள படம் வழிபட வேண்டும். முன்னதாக விநாயகர் படத்தையும் வைத்து வழிபட வேண்டும்.

அன்னதான பிரியர் முருகன் என்பதால், செவ்வாய்க்கிழமை அன்னதானம் வழங்கினால் முருகனின் முழு அருளுக்கு பாத்திரமாகலாம்.

செவ்வாய்க்கிழமை அன்று ஒரு பொழுது விரதம் இருந்து வந்தால் ஒன்பது வாரத்தில் உங்களுக்கு நல்லது நடக்கும். வியாபாரம் செய்பவர்கள் கண்டிப்பாக செவ்வாய் வழிபாட்டை செய்து வந்தால் வியாபாரம் பெரிய அளவில் விருத்தி செய்யலாம். நல்ல தைரியத்தை கொடுத்து நாம் எடுத்து வைக்கும் எல்லா வியாபாரமும் வெற்றியை தரும்.

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

***18946) தன்னைத் ' தமிழ் விரகர் ' என்று கூறிக்கொண்டவர் யார்?*** திருஞானசம்பந்தர்.

***18947) அம்பிகையின் மந்திரத்தை என்ன பெயரிட்டு அழைக்கின்றனர்?*** ஸ்ரீவித்யை..

***18948) லலிதாம்பிகையைச் சுற்றி வீற்றிருப்பவர்கள் யார்?*** எட்டு வாக்தேவதைகள்.

***18949) பகவத்கீதையின் வேறு பெயர்கள்...*** ஹரி கீதை, வியாச கீதை.

***18950) புனித தீர்த்தங்களில் நீராடுவதை என்னவென்று அழைப்பார்கள்?*** கிரியா ஸ்நானம் என்பர்.

***18951) வைராக்யம் என்பதன் பொருள் என்ன?*** ஆசையற்ற மனநிலை.

***18952) வசிஷ்டர் ராமனுக்கு உபதேசித்த அறிவுரை அடங்கிய நூல் என்ன?*** யோக வசிஷ்டம் ( ராமகீதை ).

***18953) காசியில் குமரகுருபரர் அடக்கிய விலங்கு ...*** சிங்கம்.

***18954) சாஸ்திரப்படி உலகிலுள்ள உயிர்களின் எண்ணிக்கை எத்தனை?*** 84 லட்சம்.

***18955) ஆலயங்களில் இறைவனுக்கு செய்யப்படும் உபசாரம் என்ன?*** சோடசோபசாரம் என்னும் உபசாரம்,

***18956) இது எத்தனை விதமாகச் செய்யப்படுகின்றன?*** பதினாறு

***18957) அந்த பதினாறு விதமான உபசாரங்களும் எவை?*** தவிசு அளித்தல், கைகழுவ நீர் தருதல், கால் கழுவ நீர் தருதல், மூக்குடி நீர் தருதல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரி நூல் தருதல், தேய்வைபூசல், மலர் சாத்தல், மஞ்சள் அரிசி தூவுதல், நறும்புகை காட்டல், விளக்கிடல், கற்பூரம் ஏற்றல், அமுதம் ஏந்தல், அடைக்காய்தருதல், மந்திரமலரால் அர்ச்சித்தல் முதலியன.

***18958) மங்களப் பொருட்கள் எவை?*** சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி (அங்குசம் ), முரசு, விளக்கு கொடி, இனைக்கயல் ( இன்னொரு வகை), இடபம், சீவற்சம், சங்கு, சுவத்திகம், சாமரம், கண்ணாடி விளக்கு முதலியன.

***18959) அறுபத்து மூவரில் பெண் அடியார்கள் யாவர்?*** காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார்.

## நாதப் பிரம்ம யோகம் - 12



புராணக்கதைகளில் தேவரிஷி நாரதர் பூவுலகத்தில் எப்படி ஆன்மீக வளர்ச்சி இருக்கிறது? அதை வளர்ப்பது எப்படி என்ற எண்ணத்துடன் கடவுளை அடையும் வழி எது? ஏன் கடவுளை அடைவது கஷ்டமான காரியமாக இருக்கிறது போன்ற கேள்விகளுடன் வைகுண்டத்திற்குச் சென்றார். நாரதரை நோக்கி மக்கள் எப்படி இலகுவாக தபஸினைச் செய்வது என்று கேட்டார்கள். நாரதர் அதற்கு இறைவனிடம் இதற்குரிய சரியான வழியினைக் கேட்டறிந்து சொல்வதாக கூறினார்.

வைகுண்டத்திலிருந்து நாரதர் திரும்பும் போது மகாவிஷ்ணுவிடம் பகவானே சாதாரண மக்களிற்கு உங்களுடைய சான்னித்தியத்தை அறிந்து கொள்வது கஷ்டமாக இருக்கிறது, உங்களை அறிந்து கொள்வதற்கான இலகுவான தெய்வீகத்தை உணர்ந்து அறிவதற்கான வழியினை எமக்கு பின்பற்றுவதற்கும், பயிற்சிப்பதற்குமுரிய வழியினை கூறியருள வேண்டும் என்று வேண்டினார்.

அதற்கு மகாவிஷ்ணு, நாரதரே, நான் வைகுண்டத்தில் வசிப்பதில்லை, நான் யோகிகளின் இதயத்தில் வசிக்கிறேன். நான் தெய்வீக இசையில் வசிக்கிறேன் என்று பதில் கூறினார். இது நாரதசம்ஹிதையில் வருகிறது.

ஆகவே ஒருவன் இறைவனை உணர பஜனை, கீர்த்தனையுடன் கூடிய இசை இலகுவான வழி. நாரத சம்ஹிதையின் இந்த அத்தியாயம் இசை ஒரு தெய்வீக தளமாக எப்படி சாதனைக்கு பயன்படுத்த முடியும் என்று விரிவாகக் கூறுகிறது. புராதன இந்தியாவின் பக்தி இசை என்பது சமூகத்தினதும், சமய வாழ்க்கையினதும் ஒரு மறுக்க முடியாத அங்கம். சாஸ்திரீய நடனமும் இசையின் ஒரு அங்கமாகத்தான் இருந்தது.

இசையும் நடனமும் ஆரோக்கியமான பொழுதுபோக்கு மாத்திரம் அல்ல, அது தவிர்ந்து முக்கியமாக பஜனை, கீர்த்தனை போன்றவற்றினூடாக சமூக விழிப்பும் நடைபெறும் ஊடகமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொருவருடைய தனிப்பட்ட, சமூக வாழ்க்கை புத்தாக்க உணர்வுடனும், மெய்மறந்த நிலையில் அமைதியை அனுபவிக்கவும் அந்தக் காலத்தில் இசை பயன்படுத்தப்பட்டது.

இன்றைய இரைச்சல் நிறைந்த, பிரச்சினைகள் நிறைந்த உலக வாழ்க்கையில் கூட இசையின் சந்தம் ஒரு உற்சாகமூட்டும் ஒருஅரியஊடகமாகத் திகழ்கிறது. இசை இதயத்தை மெல்லிய தாக்குகிறது. இது திருப்தி, உற்சாகம், சந்தோஷம் ஆகியவற்றை ஏற்படுத்திபுத்தாக்க உணர்வினை ஏற்படுத்துகிறது. திருமணம்,சமய, சமூக நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும், இறப்பிலும் அதற்குத் தகுந்த உணர்ச்சிகளைஉருவாக்குவதில் இசைபெரும் பங்கு வகிக்கிறது. இது ஒவ்வொருவருக்கும் மிகச்சிறந்த சூழலை உருவாக்கித் தருகிறது.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்



கொழும்பு 11, கதிரேசன் வீதியிலுள்ள ஸ்ரீ கதிரேசன் ஆலய அறநெறி பாடசாலை

# சர்வதேச செய்திகள்

## ஈரானின் அணு ஒப்பந்தத்தை புதுப்பிக்க ஐரோப்பா திட்டம்



ஐரோப்பிய ஒன்றியம் ஈரானுடனான அணுவாயுத ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக்கொள்ளவிருப்பதாகக் கூறியுள்ளது.

இன்னும் சில நாட்களில் அது நடைபெறக்கூடும் என ஒன்றியம் தெரிவித்தது. ஈரான் அணுவாயுத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மாற்றாக அதன் மீதான சில தடை உத்தரவுகள் நீக்கப்படக்கூடும்.

ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதற்கான பணிகள் இறுதிக்கட்டத்தில் இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் கூறியது. ஒப்பந்தத்தின் பெரும்பகுதி பற்றிய இணக்கம் எட்டப்பட்டுவிட்டதாக அது குறிப்பிட்டது.

ஈரானுக்கும் உலக நாடுகளுக்கும் இடையிலான 2015 அணுவாயுத ஒப்பந்தத்திலிருந்து முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் 2018ஆம் ஆண்டு விலகினார்.

அதனைத் தொடர்ந்து நாடுகள் ஒப்பந்தத்தை மீண்டும் நிலைநாட்ட முயற்சிகளை மேற்கொண்டுவந்தன. ஈரான் அந்தக் காலக்கட்டத்தில் ஒப்பந்தத்தின்கீழ் செய்துகொள்ளப்பட்ட இணக்கங்களை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

ஒப்பந்தத்தை மீண்டும் நிலைநாட்டாவிட்டால் பிராந்தியப் போர் மூளும் அபாயம் ஏற்படக்கூடும் அல்லது ஈரான் மீது மேலும் கடுமையான தடைகள் விதிக்கப்படக்கூடும் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

உக்ரைனியப் பூசல் காரணமாக அதிகரித்துள்ள எரிபொருள் விலை மேலும் உயரவும் வாய்ப்பிருப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

## ரஷ்யா மீதான தடைகளை நீக்க பிரிட்டன் நிபந்தனை



உக்ரைனிலிருந்து ரஷ்யா, தனது படைகளை மீட்டுக்கொண்டு அத்துமீறலை நிறுத்தினால் ரஷ்யத் தனிநபர்கள் மீதும் நிறுவனங்கள் மீதும் விதிக்கப்பட்டுள்ள தடைகள் மீட்டுக்கொள்ளப்படலாம் என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

டெலிகிராப் நாளேட்டுக்கு வழங்கிய நேர்காணலில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் லிஸ் டிரஸ் இவ்வாறு கூறினார்.

ரஷ்யா, தான் கையெழுத்திட்டுள்ள பல்வேறு உடன்பாடுகளை மீறி நடந்துவருகிறது. ஆகவே தடை விதிப்பது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகள் தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

முழுமையான சண்டை நிறுத்தம் ஏற்பட்டுப் படைகள் மீட்டுக்கொள்ளப்பட்டால் மட்டுமே அந்தத் தடைகள் விலக்கிக் கொள்ளப்படும். அடுத்த கட்ட அத்துமீறல் இருக்காது என்ற உத்தரவாதமும் வழங்கப்பட வேண்டுமென டிரஸ் குறிப்பிட்டார்.

பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இதுவரை 1,000க்கும் அதிகமான ரஷ்ய தனிநபர்கள் மற்றும் வர்த்தகங்கள் மீது தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீன விமான விபத்து: எவரும் தப்பவில்லை



தெற்கு சீனாவில் கடந்த வாரம் விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்த 132 பேரும் உயிரிழந்திருப்பதை சீனா தற்போது உறுதி செய்துள்ளது.

குன்மிங்கில் இருந்து குவான்சு நகரை நோக்கிப் பயணித்த சைனா ஈஸ்டர்ன் விமானம், குவாங்சி காட்டுப் பகுதியில் திடீரென்று செங்குத்தாக விழுந்து நொறுங்கியது.

மரபணு சோதனை மூலம் 120 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டதாக மீட்புக் குழு தெரிவித்துள்ளது. விமானத்தின் இரண்டாவது கறுப்புப் பெட்டி நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விமானத் தரவுப் பதிவு என்று நம்பப்படும் அந்த கறுப்புப் பெட்டி விமான விபத்துக்கான காரணத்தை கண்டறிவதில் தீர்க்கமானதாக உள்ளது. கடந்த புதன்கிழமை கண்டுபிடிக்கப்பட்ட முதல் கறுப்புப் பெட்டி ஆய்வுக்காக பீஜிங் அனுப்பப்பட்டுள்ளது. இது விமானி அறையின் குரல் பதிவாகும். உயிர் தப்பியோர் பற்றி சிறிய நம்பிக்கை இருந்தபோதும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் புதிய தகவல்களுக்காக காத்துள்ளனர். எனினும் தொலைதூர மலைப் பகுதியில் கடும் சிரமத்திற்கு மத்தியிலேயே மீட்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த விமான விபத்து சீனாவில் கடந்த மூன்று தசாப்தங்களில் இடம்பெற்ற மிக மோசமான விமான விபத்தாக இருப்பதோடு தேசிய அளவில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## புட்டினுக்கு எதிரான பைடனின் கடும் வார்த்தையால் பரபரப்பு



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கக் கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். போலந்தின் வார்சோ நகரில் ஆற்றிய உரையின்போதே அவர் இந்த கடுமையான கருத்தை வெளியிட்டிருந்தார்.

எனினும் பின்னர் இதற்கு விளக்கம் அளித்த வெள்ளை மாளிகை, பைடன் ரஷ்யாவில் ஆட்சி மாற்றத்திற்கு அழைப்பு விடுக்கவில்லை என்று குறிப்பிட்டது.

“கடவுளின் பொருட்டு, இந்த மனிதன் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கக் கூடாது” என்று பைடன் இதன்போது குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்தை நிராகரித்திருக்கும் ரஷ்யா, இது பற்றி பேச அமெரிக்காவுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது. “இது பைடன் தீர்மானிக்கும் ஒன்றல்ல. ரஷ்ய ஜனாதிபதியை ரஷ்யர்கள் தான் தேர்வு செய்கிறார்கள்” என்று ரஷ்ய அரச பேச்சாளர் ட்மிட்ரி பெஸ்கொவ் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இந்நிலையில் வெள்ளை மாளிகை அளித்த விளக்கத்தில், “புட்டினுக்கு தனது அதிகாரத்தை அண்டை நாடுகள் அல்லது அரசுகளுக்கு எதிராக பயன்படுத்த முடியாது” என்று குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக போலந்தில் உக்ரைன் அகதிகளை சந்தித்த பைடன், புட்டினை “கசாப்புக்கடைக்காரர்” என்று கூறி இருந்தார். இதனை அடுத்து பைடனின் மனநிலை பற்றி ரஷ்யா கேள்வி எழுப்பி இருந்தது.

## மேற்கு உக்ரைன் நகரில் ரஷ்யா கடும் தாக்குதல்



மேற்கு உக்ரைனின் லிவிவ் நகர் மீது கடந்த சனிக்கிழமை கடும் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக உக்ரைன் அரச அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எண்ணெய் சேமிப்பு நிலையம் மற்றும் தொழிற்சாலை ஒன்றை தாக்கிய ரொக்கெட் குண்டுகளால் ஐந்து பேர் காயமடைந்ததாக லிவிவ் பிராந்திய ஆளுநர் மக்சிம் கொசிட்ஸ்கியி குறிப்பிட்டுள்ளார்.

லிவிவ் நகர் ரஷ்யாவின் ஷெல் தாக்குதல்களில் இருந்து தப்பிய பகுதியாகவே இருந்து வந்தது. இங்கு பெரும் எண்ணிக்கையான அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில் லிவிவ் நகரில் இருந்து சுமார் 250 மைல்களுக்கு அப்பாலுள்ள அண்டை நாடான போலந்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விஜயம் மேற்கொண்டநிலையிலேயேரஷ்யாவின் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. “போலந்தில் அமெரிக்க ஜனாதிபதி இருக்கும் நிலையில் இன்றைய கடுமையான தாக்கதல்கள் அவரை வரவேற்பதாக உள்ளது” என்று லிவிவ் நகர மேயர் அன்ட்ரி சடோவி குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனின் கிழக்கு, தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் ரஷ்யாவின் கடும் தாக்குதல்கள் நீடித்து வரும் நிலையில் லிவிவ் நகரே தப்பி வரும் அகதிகளுக்கான மையமாக மாறி உள்ளது. இந்த நகர் ஊடாகவே பெரும்பாலான மக்கள் உக்ரைனை விட்டு வெளியேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் இந்தத் தாக்குதல் பற்றி ரஷ்ய தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

## நேட்டோவிடம் ஆயுத உதவி கேட்டு உக்ரைன் மன்றாட்டம்

உக்ரைனுக்கு விமானங்கள், டாங்கிகள் மற்றும் ஏவுகணை அமைப்புகளை தரும்படி அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி மேற்கத்திய நாடுகளை கோட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு உணர்ச்சிமிக்க வீடியோ உரையை ஆற்றிய செலென்ஸ்கி, ஐரோப்பாவில் சுதந்திரத்தை பாதுகாக்கும் கனரக ஆயுதங்களுக்கு பதில், கையிருப்பில் குப்பைகளே உள்ளன என்றார்.

ரஷ்ய விமானங்களை இயந்திர துப்பாக்கிகளால் சுட்டுவீழ்த்த முடியாது என்று செலென்ஸ்கி குற்றம்சாட்டினார்.

“நேட்டோ என்ன செய்கிறது? அதனை ரஷ்யாவா நடத்துகிறது? அவர்கள் எதற்காக காத்திருக்கிறார்கள்? இதற்கு 31 நாளாகிவிட்டது. நேட்டோவிடம் இருப்பதில் ஒரு வீதத்தை மாத்திரம் தான் நாம் கேட்கிறோம். அதற்கு மேல் எதுவும் வேண்டாம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே மாற்றாக ஆயுதம் தருவதாக இருந்தால் தம்மிடம் இருக்கும் சோவியட் தயாரிப்பு எஸ்–30 வான் பாதுகாப்பு ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கத் தயாராக இருப்பதாக ஸ்லோவாக்கிய நாட்டு பிரதமர் எடுவார்ட் ஹேகர் பி.பி.சி தொலைக்காட்சி சேவைக்கு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே உக்ரைனிய ஆகாயவெளியை மூடுமாறு ஜனாதிபதி செலென்ஸ்கி விடுத்த கோரிக்கையை நேட்டோ ஏற்கவில்லை. அப்படிச் செய்தால் ரஷ்யாவுடனான போர் மேலும் மோசமடையும் என்று நேட்டோ குறிப்பிட்டது.



## யெமன் ஹூத்திக்கள் மூன்று நாள் போர் நிறுத்த அறிவிப்பு



யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் மூன்று நாள் போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்திருப்பதோடு சவூதி கூட்டுப்படை யெமன் மீதான நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வந்தால் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை எதிர்பார்க்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சவூதி அரேபியாவின் பல பகுதிகளை இலக்கு வைத்து ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் இடம்பெற்ற நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன்போது ஜித்தாவில் போர்மியுலா வன் கார் பந்தயம் இடம்பெறும் பகுதிக்கு அருகில் இருக்கும் எண்ணெய் நிலை ஒன்றும் தாக்கப்பட்டுள்ளது.

சவூதி கூட்டுப்படை யெமனின் சனா மற்றும் ஹொதைதாவில் நடத்திய வான் தாக்குதல்களில் குறைந்தது ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அடுத்த மூன்று நாட்களுக்கு ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணை தாக்கதல்கள் மற்றும் அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் இடைநிறுத்துவதாக ஹூத்தி அரசியல் தலைவர் மஹ்தி அல் மிஷாத் அறிவித்துள்ளார். “நம்பிக்கையை கட்டியெழுப்புவது மற்றும் பேச்சுவார்த்தை அரங்கில் இருந்து செயற்படுத்தும் அரங்கிற்கு அனைவரையும் கொண்டு செல்வதற்கான உண்மையான அழைப்பு மற்றும் நடைமுறை செயற்பாடாக இது உள்ளது” என்று அல் மிஷாத் தெரிவித்துள்ளார்.

எனினும் இது தொடர்பில் சவூதி தரப்பில் இருந்து உடன் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

## அண்டார்ட்டிக்காவின் பனிப்பாறை உருகல்



கிழக்கு அண்டார்ட்டிக்காவின் கடுமையான வெப்பநிலை காரணமாக அங்கு முதல் முறையாகப் பனிப்பாறை உருகிச் சரிந்துள்ளது.

1,200 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட கெங்கர் பனி அடுக்கு என்னும் பனிப்பாறை இம்மாதம் 15ஆம் திகதி உருகிச் சரிந்தது. அதன் அளவு ஹொங்கொங் நகரத்தின் அளவுக்குச் சமமாகும்.

பனி அடுக்கு என்பது நிலத்தில் இறுக்கமாக இணைக்கப்பட்ட பனிக்கட்டிகள். அவை உருவாக ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகும். கடல் மட்டம் உயராமல் இருக்க அவை உதவும்.

இம்மாதம் கிழக்கு அண்டார்ட்டிக்காவில் வெப்பநிலை பூஜ்யத்துக்குக்கீழ் 12 டிகிரி செல்சியசாக இருந்தது என விஞ்ஞானிகள் கூறினர். வழக்கமாக அங்கு வெப்பநிலை பூஜ்யத்துக்குக் கீழ் 51 டிகிரி செல்சியசாக இருக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் அங்கும் தற்போது வெப்பநிலை வழமைக்கு திரும்பி உள்ளதாக கூறப்பட்டது.

## ஆபிரிக்க முகமூடி பிரான்ஸில் ஏலம்



19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மத்திய ஆபிரிக்காவின் முகமூடி ஒன்று பிரான்ஸில் 4.2 மில்லியன் யூரோவுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. இந்த முகமூடியை திரும்பத் தரும்படி கபோன் அரசு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்த நிலையிலேயே கடந்த சனிக்கிழமை இந்த ஏலம் இடம்பெற்றது. மிக அரிதான மரப்பலகையால் செதுக்கப்பட்ட “நிகில்” என்ற இந்த முகமூடி கபோனின் பங் இன மக்கள் தமது சடங்குகளில் பயன்படுத்தி வந்ததாகும். தெற்கு பிரான்ஸ் நகரான மொன்டபில்லியல் நகரில் இடம்பெற்ற ஏலத்தில் 300,000 தொடக்கம் 400,000 யூரோவுக்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அது எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக விலை போனது. 2006 ஆம் ஆண்டு பாரிஸில் இடம்பெற்ற ஏலம் ஒன்றில் இது போன்ற ஒரு முகமூடி 2.09 மில்லியன் யூரோவுக்கு ஏலம் போனமை குறிப்பிடத்தக்கது.




# அரசாங்கத்திலிருந்து வெளியேறும் தேவை இ.தொ.காவுக்கு இல்லை

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

அரசுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் இடையில் நல்லுறவு இருப்பதால், அரசிலிருந்து வெளியேறவேண்டிய எந்தத் தேவையும் இல்லை என, இ.தொ.காவின் நிதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.நுவரெலியா நானுஓயா பிரதேச சபை மண்டபத்தில் (27) இடம்பெற்ற நிகழ்வில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அங்கு கருத்து தெரிவித்த மருதபாண்டி ரமேஷ்வரன்,

அரசின் பங்காளிக்கட்சியாக இருந்தாலும் தனியான கொள்கையுடனே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்படுகிறது. நாம், பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம், அவை நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான ஓர் நகர்வாகத்தான்,சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கவில்லை. இதைவைத்து,

இ.தொ.கா. அதிருப்தியில் உள்ளதென எதிரணிகள் பிரசாரம் செய்கின்றன. அரசாங்கத்திற்கும் எமக்குமிடையே சிறந்த நல்லுறவு இருக்கின்றது. எவ்வித பிளவும், பிரச்சினையும் இல்லை. அரசுக்குள் இருந்தவாறு போராடி, மக்கள் உரிமைகளை எப்படி பெறவேண்டும் என்பது எமக்கு தெரியும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை 30 ஆம் திகதி கூடும். இதன்போது தலைவர் பதவிக்கு நியமனங்கள் இடம்பெறும் என்றார். இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினரின் நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களும் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல், நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்கள், இ.தொ.காவின் இளைஞர் அணி பொது செயலாளர் அர்ஜூன் ஜெயராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வரண்ட வலயங்களிலும் உருளைக்கிழங்கு செய்கை, வெள்ளோட்ட முயற்சிகள் வெற்றி

(தம்புள்ள தினகரன் நிருபர்)

நாட்டின் ஈரவலயப் பிரதேசங்களில் மாத்திரம் மட்டுப் படுத்தப்பட்டிருந்த உருளைக் கிழங்கு செய்கை, தற்போது வரண்ட வலயப் பிரதேசங்களிலும் உற்பத்தி செய்யப்படலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.இதற்கென கலேவெல, யடிகல்பொத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிச் செய்கை வெற்றியளித்திருப்பதாக விவசாயப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் முதலீட்டின் கீழ், தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளின் ஒத்துழைப்புடன் இம்மாதிரி உருளைக் கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

உற்பத்தி திட்டம் வெற்றியளித்திருப்பதால் அடுத்து வரும் போகங்களில், மாத்தளை மாவட்டத்தில் வரண்ட வலயப் பிரதேசங்களில் உருளைக் கிழங்கு செய்கையை விஸ்தரிப்பதற்கு விவசாய உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விஷேடமாக தம்புள்ள விவசாய வலயத்திற்குரிய கலேவெல கமநல பிரதேசத்தில் யட்டிகல்பொத்த கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி உருளைக் கிழங்கு அறுவடைச் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆர்.எம்.செனவிரத்ன என்பவரின் விவசாயப் பண்ணையில் மேற்கொள்ளப்பட்டுள்ள உருளைக் கிழங்கு மாதிரி செய்கையில், அமோக விளைச்சல் கிடைக்கப் பெற்றிருப்பதாக விவசாய அபிவிருத்தி அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேசிய உருளைக் கிழங்கு வகைகளின் "க்ரெநோலா" என்ற இனத்தைச் சேர்ந்த விதைகள் மற்றும் தேசிய உருளைக் கிழங்கு இனமான "ஸெஷெ" வர்க்கத்தைச் சேர்ந்த விதைகளும் இம்முறை நடப்பட்டன.

இருப்பினும் க்ரெநோலா வர்க்கம் மிகவும் உயர்ந்த விளைச்சளைத் தந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஏக்கரொன்றுக்கு 05 மெட்ரிக் தொன்னுக்கும் அதிக விளைச்சல் கிடைத்துள்ளன.

# மலையக நகரங்களில் எரிவாயு விநியோகம்; தட்டுப்பாடுகள் படிப்படியாக நீங்கும் நிலை

(ஹற்றன் விஷேட நிருபர்)

மலையகத்தில் நேற்று (27) எரிவாயுவை விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இதைப் பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் நின்றதையும் காண முடிந்தது.

கொட்டகலை பகுதியில் சுமார் 40 எரிவாயு சிலிண்டர்கள் வீதம் விநியோகிக்கப்பட்டன. இவை போதுமானதாக இருக்கவில்லை என வர்த்தகர்கள் தெரிவித்தனர். இதனால், பலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.மலையகப்பகுதிகளில் கடந்த ஒரு சில வாரங்களாக எரிவாயுக்கு தட்டுப்பாடு நிலவின. இதனால் பல விற்பனை நிலையங்கள் மூடப்பட்டன. மேலும் பல உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பனவும் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இடைக்கிடையே மட்டுப்படுத்தப்பட்ட எரிவாயு விநியோகம் இடம்பெற்றும்,மக்களின் தேவையை பூர்த்திசெய்யக் கூடியதாக அவை இருக்கவில்லை. இதனால், ஒரு சில இடங்களில் எரிவாயுவை பெற்றுக்கொள்ள போராட்டங்களும் இடம்பெற்றன.

எரிபொருள் தட்டுப்பாடு ஒரு சில தினங்களில் வழமைக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எரிவாயு விநியோக வாகன ஊழியர்கள் மீது தாக்குதல்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கேஸ் விநியோகத்துக்காக கேஸ் நி ரப்பப்பட்ட சிலிண்டர்களுடன் வந்த வாகனம், சாரதி மற்றும் உதவியாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் பலாங்கொடை நகரின்

கேஸ் (எரிவாயு) விநியோக நிலையத்துக்கு முன்பாக நடைபெற்றது.

கேஸ் நிரப்பப்பட்டிருந்த வாகனம், சிலிண்டர்களுடன் விநியோக நிலையத்தின் முன்பு நிறுத்தப்பட்ட போது, அங்கு நீண்ட கியூ வரிசையில் மக்கள் நின்றுள்ளனர். அனைவருக்கும் அதனை விநியோகிக்கப் போதுமானதாக சிலிண்டர்கள் இருக்கவில்லை. இதையடுத்து வாகனத்தின் சாரதி வாகனத்தை திருப்பி எடுத்துச் செல்ல முயற்சித்தார்.

எனினும், அங்கு திரண்டிருந்த மக்கள் கோபத்துடன் விநியோகத்தர்கள் மற்றும் வாகனத்தின் மீது தாக்குதல் நடாத்த ஆரம்பித்தனர். அவ்விடத்துக்கு வருகை தந்த பலாங்கொடைப் பொலீஸார் நிலைமையை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர்.

இதனையடுத்து, கியூ வரிசையில் நின்றவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன், கேஸ் விநியோக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அங்கிருந்த அனைவருக்கும் விநியோகிக்கும் அளவுக்கு கேஸ் போதுமானதாக இருக்காமையால் ஏனையோர் ஏமாற்றத்துடன் சென்றனர்.

# பொன்னாடை போர்த்தி கௌரவம்

(தலவாக்கலை குறூப் நிருபர்)

தலவாக்கலை லிந்துலை நகர சபையின் புதிய தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் சந்தன பிரதீப் குணதிலக்க பொறுப்பேற்றுள்ளார்.

இவருக்கு ஆசி வேண்டி விஷேட பூஜை நிகழ்வுகள் தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது,தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலய பரிபாலன சபையினர் தலவாக்கலை லிந்துலை நகரசபைத் தலைவர் சந்தன பிரதீப் குணதிலக்கவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.



# நாட்டுக்கு நலம் வேண்டியும், தலைவர்களுக்கு நல்லாசி கோரியும் பெண்கள் அமைப்பு பிரார்த்தனை

(அக்குறணை குறூப் நிருபர்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் அமைப்பு மற்றும் காணாமலாக்கப்படடோர் களது மகளிர் அமைப்பு என்பன இணைந்து நாட்டுக்கு நல்லாசி வேண்டிய பிராத்னை நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இம்மாதம் (30) இல் இடம்பெறும் இந்நிகழ்வில், சகல பெண்களும் ஈடுபடவேண்டுமென இந்த அமைப்புக்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன. அன்றைய தினம் மாலை 6 மணிக்கு நாட்டிலுள்ள சகல தரப்பினரும் ஒரே நேரத்தில் விளக்கேற்றி நாட்டின் பொருளாதார சிக்கல்கள் நீங்கவும், நிர்வாகிகளுக்கு அதுபற்றிய தெளிவு கிடைக்கவும் குறைந்தது 5 நிமிட மாவது பிராத்தனையில் ஈடுபடுமாறு மேற்படி அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. கண்டி ரிவடேல் ஹோட்டலில் ஒழுங்கு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின் போது அவர்கள் இதுபற்றித் தெரிவித்தனர். அமைப்பின் அங்கத்தவரான திருமதி ஜெனி பரமேஸ்வரன் அங்கு தெரிவித்ததாவது.

என்றும் இல்லாதளவு மலையக பெருந்தோட்ட மக்கள் பாதிப்படைந்துள்ளனர். எனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களது அமைப்பு மற்றும் காணாமலாக்கப்பட்டோர்களது உறவினர்களது பெண்கள் அமைப்பு என்பன ஒழுங்கு செய்துள்ள பிராத்தனையை கட்டாயம் மலையக தமிழ் பெண்கள் மார்ச் (30) அனுஷ்டிக்க வேண்டும்.

இன்றைய பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு மலையக பெருந்தோட்ட தமிழ் பெண்கள் இந்த பிராத்தனையில் ஈடுபட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

குறைந்நது ஐந்து பேர்கொண்ட குழுக்களாகவாவது இணைந்து, தத்தமது வீடுகளில், இப்பிராத்தனையை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. முடியுமானவர்கள் தமது சமய ஸ்தலங்களுக்குச் சென்று, சரியாக மாலை ஆறு மணிக்கு பிராத்தனையை மேற்கொள்வது சிறந்தது. மார்ச் மாதம் என்பது பெண்களுக்கான மாதம். அதே நேரம் நாட்டில் எத்தகைய பிரச்சினைகள் வந்தாலும் அது இறுதியாக வீடுகளுக்குச் செல்லும். வீட்டில் இப் பிரச்சினைகளை எதிர்கொள்வது குடும்பப் பெண்களே. எனவே தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு விடுபட, அரசியல் தலைவர்களுக்கு நல்ல ஞானம் கிடைக்க வேண்டுவது பெண்களது பொறுப்பு என இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ள அமைப்பின் தலைவிகள் தெரிவித்துள்ளனர்.

# கலேவெல கல்வி வலயத்தில் முதலாமிடம்



( தம்புள்ள தினகரன் நிருபர் )

கலேவெல கல்வி வலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் அர்ரஹ்மத் வித்தியாலயம் முதலாமிடம் பெற்றுள்ளது.

கலேவெல வலய கல்விப் பிரிவிற்குட்பட்ட அர்ரஹ்மத் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 10 மாணவர்கள் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுள்ளனர்.இதனால், வலய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று, இப்பாடசாலைக்கு இவர்கள் பெருமை சேர்த்திருப்பதாக வித்தியாலய அதிபர் எஸ்.எச் அமீனுத்தீன் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் சித்தியடைந்த மாணவர்களான ஏ.எப்.அம்ரா 165, எம்.எச்.எப்.லுத்பா 164, எம்.ஆர்.இல்மா 162, எம்.இஸட்.எம்.சதா 162, எம்.எப்.சயான்159, எம்.எச்.மர்யம் 158,என்.ஏ.எம்.அஸ்ஜத்157, எம்.ஐ.எப்.இஸ்மா157,ஆர்.எச்.ஹம்தா152, என்.பி.மரியம்151 ஆகிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

மாணவர்களுடன், வகுப்பாசிரியைகளான என்.எப்.சிப்னா,என்.பி.பர்ஹானா,மற்றும் ஏ.எப்.சிபானா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி



பண்டாரவளை வலயத்திற்குட்பட்ட பலகல எல்ல, தமிழ் வித்தியாலயத்தில் (2021) தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய பல மாணவர்கள் சிந்தியடைந்துள்ளனர். ம.ஶ்ரீயாபிருந்தா (166 புள்ளி), ரா.கபிஷாலனி (165 புள்ளி) க.கிருஷாந்தினி (156 புள்ளி) வி.கிருத்திக்ஷன் (158 புள்ளி) ஆகியோர் வெட்டுப்புள்ளி யைக் கடந்து சித்தி பெற்றுள்ளனர்.பாடசாலை அதிபர் திரு.க.சேதுகாந்,வகுப்பாசிரியர் திருமதி.பெ.புண்ணியகலா ஆகியோருடன் மாணவர்களையும் காணலாம். (லுணுகல நிருபர்)

## ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு

(மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்)

எரிவாயுத் தட்டுப்பாட்டை நீக்கவும், நாட்டு நிலைமைக ளை சுமுகத்துக்கு கொண்டு வருமாறு கோரியும்

எதிர் வரும் (03) தலவாக்கலை நகரில் ஆர்ப்பாட்டம் நடாத்தப்படவுள்ளது. இந்த மக்கள் போராட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று ஹற்றன் நகரில் அஜந்தா விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்கள் பழனி திகாம்பரம்.வேலுசாமி இராதாகிருஸ்ணன், உதயா ஆகியோருடன் கட்சியின் உயர்மட்ட குழு மற்றும் அங்கத்தினர்களும் கலந்து கொண்டனர். நடைபெற உள்ள மாபெரும் மக்கள் போராட்டம் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது.

# தேசிய அரசாங்கம் அமைந்தாலும் த,மு,கூட்டணி ஆதரவளிக்காது

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

" தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்தி தேசிய அரசொன்றை அமைப்பதற்கு அரசு முயற்சித்தாலும், அவ்வாறானதொரு அரசுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவு வழங்காதென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று (27) மாலை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

" தேசிய அரசொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு விடுக்கப்பட்டாலும் நாம் அதில் இணையமாட்டோம். தேசிய அரசாங்கத்தை அமைப்பதால் பாரிய மாற்றம் ஏற்படப்போவதில்லை. இதே ஜனாதிபதிதான் ஜனாதிபதி பதவியில் தொடர்வார். எனவே, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் புதியதொரு ஆட்சியே எமது இலக்கு. அந்த இலக்கை அடையவே எமது எதிர்பார்ப்பாக உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் மக்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அதற்காக அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைக்கு, மக்கள் பக்கம் நின்று ஒத்துழைப்பு வழங்குவோம். உதவி ஆசிரியர் பிரச்சினை தொடர்பில் நிதி அமைச்சருடன் பேச்சு நடத்தியுள்ளேன். கடிதமும் கையளிக்கப்பட்டுள்ளது. விரைவில் தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம். அதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சரவை தமிழ் முற்போக்கு கூட்டணி இன்று (28) சந்தித்து பேச்சு நடத்தும். இந்திய தூதுவரிடம் கையளிக்கப்பட்டுள்ள பாரத, பிரதமருக்கான ஆவணம் மற்றும் மலையக மக்களுக்கான திட்டங்கள் பற்றி இதன்போது கலந்துரையாடப்படும் என்றார். .



# கிழக்கின் குரல்

## கடமை நேரங்களை துஷ்பிரயோகம் செய்யும் ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்



(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளில், கடமை நேரத்தில் வைத்தியசாலைகளில் இல்லாத உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

மாவட்ட மற்றும் பிரதேச வைத்தியசாலைகளில் கடமை நேரத்தில் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இருப்பதில்லையென பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாகவும் தெரிவித்தார்.

இம் முறைப்பாட்டுக்கமைய சுகாதார அதிகாரிகள் குழுவினால் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார் .

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது இரண்டு வைத்தியசாலைகளில் கடமை நேரத்தில் இல்லாத உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, இடமாற்றம் மற்றும் பதவி குறைப்பு கடிதமும் அவ்விடத்திலேயே வழங்கப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார் .

வைத்தியசாலையில் கடமை நேரத்தில் இல்லாத உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் தொடர்பாக பொதுமக்கள் வைத்தியசாலைகளில் காட்சிப்படுத்தப் பட்டுள்ள விரைவுத் தகவல் குறியீடு (கியூ. ஆர்) ஊடாகவும், எழுத்து மூலம் அல்லது வாய்மொழி மூலமாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிமணைக்கு உடனடியாக அறிவிக்குமாறு கேட்டுள்ளார்.

## மீனவர்களின் கரைவலையில் சிக்கிய முதலை



(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை சீனக்குடா கொட்பே பிரதேசத்தில் மீனவர்களின் வலையில் உயிருடன் முதலை ஒன்று சிக்கியதாக மீனவர்கள் தெரிவித்தனர் .

சீனக்குடா கொட்பே பிரதேசத்தில் சனிக்கிழமை (26) மீனவர்களினால் இழுக்கப்பட்ட கரை வலையிலேயே இவ்வாறு 8 அடிக்கும் அதிக நீளமான முதலை ஒன்று சிக்கி கொண்டதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர் .

குறித்த முதலை மீனவர்களின் கரைவலையின் மடிப்பகுதியில் சிக்கி பெரும் சிரமத்திற்கு மத்தியில் குறித்த மீனவர்களினால், முதலை உயிருடன் பிடிக்கப் பட்டு திருகோணமலை வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவித்ததாக தெரிவித்தனர். அங்கு வருகை தந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் முதலை எடுத்துச் செல்லப்பட்டது.

கடற்கரை பிரதேசத்தில் அன்றாடம் தொடர்ச்சியாக மீன் பிடியில் ஈடுபட்டு வரும் நிலையில், இரண்டு தடவைகள் முதலைகள் கரை வலையில் சிக்குவதாகவும், இதனால் தமது வலைகள் பெரிதும் சேதமடைவதாக மீனவர்கள் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முஜாரத் எழுதிய நூல் வெளியீடு



கிண்ணியா நிருபர்

கவிஞர் ஏ.கே.முஜாரத் எழுதிய 'கடுவன்பூனை' கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு சனிக்கிழமை (26) கிண்ணியா பொது நூலக முன்னாள் பிரதம நூலகர் எம்.டி. சபருள்ளாகான் தலைமையில் அல் அதான் வித்தியாலயத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.ஏ.கலிபத்துல்லா கலந்து கொண்டார். விசேட அதிதியாக கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம். மஹ்றி கலந்து கொண்டார். அதேவேளை, சட்டத்தரணியும் கவிஞருமான எம்.சி. சபருள்ளா,கவிஞர் றியாஸ் குராணா,மேல் நீதிமன்ற பதிவாளரும் பன்முக ஆளுமையுமான எஸ்.எம்.நியாஸ் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சாதனை படைத்த ஊடகவியலாளர்களின் பிள்ளைகள் பாராட்டி கௌரவிப்பு



( மாளிகைக்காடு குறூப் , ஒலுவில் விசேட நிருபர்கள்)

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் வருடாந்த ஒன்று கூடல் பொத்துவில் அறுகம்பே புளூவேவ் நட்சத்திர ஹோட்டலில் சனிக்கிழமை ( 26 ) போரத்தின் தலைவர் கலாபுசணம் எம்.ஏ.பகுர்தீன் தலைமையில் இடம் பெற்றது.

போரத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில், இவ்வருடத்தில் போரத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் செயற்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டதுடன் , போரத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 9 " ஏ " சித்திபெற்ற என். கே. ஜுமானா ஹஸீன் , எம்.ஏ.எம். அப்துர் றஹ்மான் , தென்கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு கலைப்பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்ட அமீர் பாத்திமா இனாபா மற்றும் புத்த சாசன, சமய ,கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் பாடலாக்கப் போட்டியில் வெற்றி பெற்ற போரத்தின் உறுப்பினரும் அதிபருமான கவிஞர் பி.முஹாஜரின் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்விற்கு வைத்திய கலாநிதி டாக்டர் கே.எல்.எம். நக்பர் பிரதம அதிதியாகவும், சமாதான ஊடக அமைப்பின் தலைவர் எம்.எம்.ஜெஸ்மின் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

அண்மையில் காலஞ்சென்ற ஊடகவியலாளர் அமரர் ரெட்ணம் நடராஜன் அவர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

### சமாதான நல்லிணக்க செயற்பாடுகளில்

## பெண் தலைவர்களை வலுப்படுத்தல் அம்பாறையில் நேற்று கூட்டம்

(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

சமாதான நல்லிணக்கச் செயற்பாடுகளில் பெண் தலைவர்களை வலுப்படுத்தல் (WAGE) திட்டத்தின் செயற்பாடுகளில் ஒன்றான, பல்தரப்பு செயற்பாட்டுக் குழுவினரின் கூட்டம் நேற்று 27.03.2022 அம்பாறை மொண்டி ஹொட்டலில் நடைபெற்றது.

சேர்ச் ஃபோர் கொமன் கிரவுன்ட் (Search for Common Ground) நிறுவனத்தின் அனுசரணையுடன் அக்கரைப்பற்றில் அமைந்துள்ள பாதிக்கப்பட்ட பெண்கள் நிறுவனத்தினால் (AWF), மேற்படி சமாதான நல்லிணக்கச் செயற்பாடுகளில் பெண் தலைவர்களை வலுப்படுத்தல் திட்டம் (WAGE ) நடைமுறைப் படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மூன்று அமர்வுகளாக இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபைகளில் உறுப்பினர்களாகவுள்ள பெண் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், துறைசார் தலைவர்கள் என பலரும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் சித்தி



எஸ்.ஏ அத்லா என்ற மாணவி இம்முறை (2021) தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் 171 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

முஹம்மது ரபியுதீன் அப்துல் சர்ஜான் மற்றும் சப்ரீனா ஆகியோரின் புதல்வியான இவர், அக்கரைப்பற்று அல்முனவ்வரா கனிஷ்ட பாடசாலையின் மாணவி யாவார்.

அம்பாறை மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி இம்முறை 147 என்பது குறிப்பிடத்தக்கது.

## விசேட தேவையுடைய மாணவனுக்கு பாராட்டு

கிண்ணியா மத்திய நிருபர்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் விசேட தேவை உடையோர்களுக்கான வெட்டுப் புள்ளியை விட அதிகமாக பெற்று, புலமைப் பரிசில் நிதிக்கு தகுதி பெற்ற கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய மாணவன் எம்.முர்சீத் கௌரவிக்கப்பட்டார்.



கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தின் விசேட கல்விப் பிரிவினால் இதற்கான நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (25) ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலை அதிபர் ஆர். சதாத் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், இந்த மாணவன் வலயக் கல்வி பணிப்பாளரால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் பெண்கள் உதவி மன்றத் தலைவி எஸ்.நளீமாவினால் இந்த மாணவனுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகையும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் ஆசிரிய ஆலோசகருமான ஏ. எம். ஹிதாயத்துல்லா, விசேட கல்விப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் ஏ. ஆர். கஸ்ஸாலி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## 'சுபிட்சத்தின் நோக்கு' திட்டத்தின் கீழ் கோப் பிறஸ் விற்பனை நிலையங்கள்

### கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் அஸ்மி

(பாலமுனை விசேட நிருபர்)





கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்து, கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், உற்பத்தியில் ஈடுபடுத்தவும் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல். எம்.அஸ்மி தெரிவித்தார்.

“சுபிட்சத்தின் நோக்கு” அரசாங்கத்தின் தேசிய கொள்கை வேலைத்திட்டத்திற்கிணங்க, கிழக்கு மாகாணத்தில் ”கோப் பிறஸ்” பல்பொருள் விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இதற்கமைவாக அக்கரைப்பற்று பிரதேசத்திற்கான ”கோப் பிறஸ்” பல்பொருள் விற்பனை நிலையம் அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் வியாழக்கிழமை (24) திறந்து வைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஓய்வு நிலை அதிபர் எம்.பி.ஏ.ஹமீட் தலைமையில் இடம்பெற்ற, இந் நிகழ்வில், பிரதம அதிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் 16 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவின் தனித்துவத்தோடு கோப் பிறஸ் பல்பொருள் விற்பனை நிலையங்களை அமைத்து வருகின்றோம். இதற்காக மத்திய அரசு 8 மில்லியன் ரூபா நிதியினை வழங்கியுள்ளது. கூப்பன் கடை என்ற காலம் இனி இல்லை, பாரம்பரிய கூட்டுறவும் இல்லை. அதுபோல கூட்டுறவு மீதான களங்கம், சந்தேகம் என்பன களையப்பட வேண்டும் என்றார்.

## சமூக மோதலை முன்கூட்டியே அறிந்து தடுப்பதற்கான பயிற்சி

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



சமூக மோதல் ஏற்படுவதற்கான சமிக்ஞைகளை முன்கூட்டியே அறிந்துகொண்டு அவற்றைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டால், உயிர் உடைமை அழிவுகளை ஏற்படுத்தும் வன்முறைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என முகாமைத்துவ ஆலோசகர் ஜே. பெனடிக்ற் தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட சமூக மோதலுக்கான முன்னெச்சரிக்கை மற்றும் தயார்நிலை பற்றிய பயிற்சிநெறி மட்டக்களப்பு நொச்சிமுனை தனியார் விடுதியில் சனிக்கிழமை (26) இடம்பெற்றது.

சர்வமதப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் இராசையா மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இப் பயிற்சி நெறியில், மாவட்டத்திலுள்ள சர்வமத செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,எமது நாட்டில் பல்வேறு முரண்பாடுகளுக்கு நாங்கள் முகம் கொடுத்து வந்துள்ளோம். அவற்றைச் சரியாகப் பகுப்பாய்வு செய்து தீர்வு காணாது எல்லாவற்றையும் வன்முறைகளால் இழந்து பின்னர் சமாதானத்தை தேடுகின்றவர்களாக நாம் இருக்கின்றோம்.

சமகாலச் சூழலில் ஒவ்வொருவரும் குறிப்பாக சமாதான செயற்பாட்டாளர்கள் மோதல்கள் எவ்வாறு வன்முறையாக உருமாற்றம் பெற்று சமூகங்களுக்கிடையில் பேரழிவுகளையும் தீராப் பகைமையும், அமைதியின்மையையும் ஏற்படுத்துகின்றன என்பது பற்றிய தெளிவைப் பெற்றிருக்க வேண்டும். நாட்டில் பல்லின சமூகம் பரஸ்பரம் அடுத்தவருக்காக குரல் கொடுக்கின்ற நிலைமை வரும்பொழுது சகவாழ்வும் சௌஜன்யமும் சமாதானமும் ஏற்படும் என்றார்.

## அம்பாறையில் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரிப்பு



(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாக சுட்டிக்காட்டும் மக்கள், அதனைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை அண்மைக்காலத்தில் வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.



அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலமுனை முதலாம், மூன்றாம் பிரிவு பிரதேச குடியிருப்பு பிரதேசங்களில் நேற்றும், நேற்று முன்தினமும் நள்ளிரவு வேளையில் புகுந்த காட்டு யானைகள் மூன்றுக்கு மேற்பட்ட வீடுகள் மற்றும் உடமைகள், வீட்டுத்தோட்ட பயிர்கள் என்பவற்றை துவம்சம் செய்துள்ளதுடன், உடமைகளுக்கும் சேதங்களை ஏற்படுத்திச் சென்றுள்ளதாக தெரிவிக்கின்றனர். நெல்அறுவடை நிறைவடைந்தும் பொது மக்கள் வாழும் குடியிருப்பு பிரதேசங்களுக்குள் காட்டு யானைகள் உட்புகுந்து உடமைகளையும் வீட்டுத்தோட்ட பயிர்களையும் சேதப்படுத்தியும், துவம்சம் செய்து வருவதுடன், பொது மக்கள் இரவு வேளைகளில் நிம்மதியாக உறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.




# கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள்

## விவசாய நிலங்கள், நீர்ப்பாசன கால்வாய்களுக்கு பெரும் பாதிப்பு



பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல்அகழ்வுகள் அதிகரித்துள்ளன.

மணல் அகழ்வுகளுக்கான எந்த வித அனுமதிகளும் இன்றி கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் நாளாந்தம் 85 தொடக்கம் 90 இற்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் சட்டவிரோதமாக மணல் எடுத்துச் செல்லப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதனால் விவசாய நிலங்கள், நீர்ப்பாசனக் கட்டுமானங்கள், கிராமிய வீதிகள் பாதிக்கப்பட்டு வருவதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் அகழ்வுகளுக்கான எந்தவித அனுமதிகளும் இன்றி முரசுமோட்டை, மருதங்குளம், உப்பாறு, ஊரியான், பழைய கோரக்கன் கட்டு ஐயன், கோவிலடி, பெரியகுளம் ஆகிய பகுதிகளிலிருந்து நாளாந்தம் இரவு, பகலாக 8590 இற்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் பொலிஸாரின் துணையுடன் சட்டவிரோதமாக மணல் எடுத்துச் செல்லப்படுவதாக தெரியவருகின்றது. குறிப்பிட்ட சில பகுதிகளில் இராணுவ காவலரண்கள் அமைக்கப்பட்டு மணல் அகழ்வுகள் தடுக்கப்பட்டுள்ள போதும் முரசுமோட்டை, மருதன் குளம், உப்பாறு, ஐயன் கோவிலடி ஆகிய பகுதிகளிலிருந்து தினமும் இரவு பகலாக பொலிஸாரின் முழுமையான ஆதரவுடன் டிப்பர் வாகனங்களில் மணல் கொண்டு செல்லப்படுகின்றன. இவ்வாறு மணல் கொண்டு செல்லப்படும் சந்தர்ப்பங்களில் சிவில் உடையில் பொலிஸார் பாதுகாப்பாக டிப்பர் வாகனங்களை ஏ35 வீதி வரை கொண்டு வந்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தொடரும் மணல் கொள்ளையால் பெருமளவான விவசாயநிலங்கள், நீர்ப்பாசன கால்வாய்கள், நீர் விநியோக வாய்க்கால்கள் என்பன கடும் சேதத்துக்குள்ளாகி வருகின்றன.

## குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா



வரலாற்று சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

கூட்டுத்திருப்பலியுடன் திருச்சொரூபவனியை யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. ஜெபரட்ணம் அடிகள் தலைமை தாங்கி நடத்தினார். திருவிழாவின் கொடியேற்றம் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றது. குருநகர், பாசையூர், நாவாந்துறை, கொழும்புத்துறை ஆகிய இடங்களிலிருந்து கடல்வழி மூலமாக வருகை தந்த பக்தர்கள் புனித அந்தோனியாரின் திருவிழாவில் பங்கேற்றனர்.

## தட்டுவன் கொட்டி கிராமம்

# அடிப்படை வசதிகளின்மையால் 117 குடும்பங்கள் பாதிப்பு



(பரந்தன் குறூப் நிருபர்)

கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தட்டுவன் கொட்டி பிரதேசத்தில் 117 குடும்பங்கள் அடிப்படை வசதிகள், போக்குவரத்து வசதிகள் இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தட்டுவன்கொட்டி கிராமத்தில் தற்போது 117 குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் இவர்களது பிரதான தொழிலாக மீன்பிடி, விவசாயம் என்பன காணப்படுகின்றன. இக்கிராமத்தில் பாடசாலை தரம் 11 வரையான வகுப்புகள் மாத்திரம் காணப்படுவதால் ஏனைய மாணவர்கள் உயர் கல்விக்காக பரந்தன் மற்றும் கிளிநொச்சி நகரங்களிலுள்ள பாடசாலைகளுக்கு செல்கின்றனர்.

எனினும் முறையான போக்குவரத்து வசதிகளின்மையால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அதுமட்டுமின்றி, அத்தியாவசிய தேவைகளுக்கு 20 கிலோமீற்றர் கடந்து கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களுக்கே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் 2014ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தினால் மருத்துவத் தேவைக்கான போக்குவரத்துக்களுக்கு முச்சக்கர வண்டி ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

ஆயினும் தற்போது அவை பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் இதனை திருத்தி பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மின்சாரத் தடையை பயன்படுத்தி பொலிஸ் நிலையத்தில் திருட்டு

(பரந்தன் குறூாப் நிருபர்)



முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பறங்கியாற்றில் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட இரு உழவு இயந்திரங்கள் மின்சாரத் தடையைப் பயன்படுத்தி நள்ளிரவு நேரத்தில் நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்தில் இருந்து மாயமாகியுள்ளது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட பறங்கியாற்றில் கடந்த வெள்ளிக்கிழமை (25.03.2022) பகல் 11 மணியளவில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு சாரதிகளை நட்டாங்கண்டல் பொலிஸார் கைது செய்தனர். இதன்போது மணல் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்ட இரு உழவு இயந்திரங்களையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். எனினும் உழவு இயந்திரங்கள் இரண்டும் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் மின்தடை நேரத்தில் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை தொடர்பு கொண்டு கேட்டபோது தவறு ஒன்று இடம்பெற்றுள்ளதாக பதிலளித்துள்ளார்.

## மின்சார துண்டிப்பு சந்தர்ப்பத்தில் இளைஞன் கடத்தல்

யாழ். விசேட நிருபர்

புத்தூர் மேற்கு, நவக்கரியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளதாக உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

புத்தூர் மேற்கு, நவகரிக்கிரியைச் சேர்ந்த அருந்தவராசா சயந்தன் என்ற 30 வயது இளைஞரே நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளதாக அவரது உறவினர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.


நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரத்தில் இச் சம்பவம் நடந்துள்ளதாக கூறப்படுகின்றது.

வீட்டு வளாகத்தில் இருந்து எவரோ பாய்ந்து வெளியே செல்வதை அவதானித்த இளைஞர் அதை பார்ப்பதற்காக வீட்டுக்கு வெளியே சென்று பார்த்த போதே வீட்டின் முன்புறம் உள்ள தோட்ட வெளியில் நின்றிருந்த மூவரை இளைஞரன் துரத்திச் சென்றதாக கூறப்படுகின்றது. அதன்பின்னர் இளைஞர் வீடு திரும்பவில்லை. உறவினர்கள் தேடியபோது அவரது கைபேசி வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கடந்த 12ஆம் திகதி இளைஞரின் வீட்டுக்கு வந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதில் வெட்டுக்காயத்துக்கு உள்ளான இளைஞரின் தந்தை தற்போதும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவர் நேற்று பிணையில் வெளியே வந்துள்ளதாக இளைஞரின் உறவினர்கள் தெரிவித்தனர். இச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சந்தேகத்தின் அடிப்படையில் சிலரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விசாரணைகளின் பின்னரே மேலதிக தகவல்களை தெரிவிக்க முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## வெங்காய வெடியை உட்கொண்ட 6 வயது யானை குட்டி



ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் பப்பாசி தோட்டத்திற்குள் நுழைந்த யானைக்குட்டி ஒன்று மீண்டும் காட்டிற்கு செல்ல முடியாத நிலையில் தவித்து வருகின்றது.

தோட்டத்திற்குள் நுழைந்த 6 வயது மதிக்கத்தக்க யானைக் குட்டி உணவருந்த முடியாத நிலையில், அங்கும் இங்கு திரிந்துகொண்டிருப்பதை காணமுடிந்தது.

இதேவேளை யானையினை பார்வையிட சென்ற மக்களை துரத்தி அச்சமடைய வைத்துள்ளது. இதனை தொடர்ந்து பிரதேசவாசிகள் வவுனியா மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் தெரிவித்திருந்தனர்.

வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் வடமாகாண கால்நடை மருத்துவர் கிரிதரனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற வடமாகாண மருத்துவர் கிரிதரன் தலைமையிலான குழுவினர் வெங்காய வெடியினை உட்கொண்டமையாலேயே யானை குட்டிக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்ததோடு, யானைக்குட்டிக்கான சிகிச்சையை மேற்கொண்டிருந்தார்.



சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் தவத்திரு மோகனதாஸ் சுவாமிகளின் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளை பாராட்டி நேற்றுமுன்தினம் (26.3.2022) கொழும்பிலுள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலில் அமெரிக்க உலகத்தமிழ் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பட்டம் வழங்கும் விழாவில் சமூகசேவைக்கான வாழ்நாள் சேவையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

படம் கரவெட்டி தினகரன் நிருபர்

## அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் ஓராண்டு நினைவேந்தல்

(தலைமன்னார் விஷேட நிருபர் )



முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் ஓராண்டு நினைவேந்தலை முன்னிட்டடு மன்னாரில் நினைவு பேருரையை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் அமரர் கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் பேருரை எதிர்வரும் 02.04.2022 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மட்டக்களப்பு திருமலை ஓய்வுநிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## 'சசி' வர்க்க உருளைக்கிழங்கு செய்கை அறுவடை விழா



சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ் மாவட்டத்தில் நவீன முறையில் மேற்கொள்ளப்பட்ட " சசி" வர்க்க உருளைக்கிழங்குச் செய்கை அறுவடை விழா கடந்த வெள்ளிக்கிழமை புன்னாலைக்கட்டுவன் ஈவினை மத்திக் கிராமத்தில் இடம்பெற்றது. சொட்டு நீர்ப்பாசனம்,உயர் பாத்தி மேடை,பொலித்தீன் மூடுபடை ஆகிய தொழில்நுட்பத்தின் கீழ் கடந்த ஜனவரி மாதம் விதைக்கப்பட்ட சசி வர்க்க உருளைக்கிழங்கு செய்கை அறுவடை விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் இணைப்புச் செயலாளரும் விளையாட்டுத்துறை அமைச்சின் வடமாகாண இணைப்பாளருமான குலேந்திரன் சிவராம் கலந்து சிறப்பித்திருந்தார்.

பிச் தரப்படுத்தல் AA- (LKA)

# மக்கள் வங்கி

## நிதிக் கூற்றுக்கள்

### வருமானக் கூற்று

டிசெம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

| | வங்கி | | | வங்கி தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | வளர்ச்சி % | 2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | வளர்ச்சி % |
| **மொத்த வருமானம்** | **207,249,820** | **190,981,708** | 8.5 | **236,795,041** | **223,898,429** | 5.8 |
| வட்டி வருமானம் | 197,330,011 | 179,717,526 | 9.8 | 222,362,450 | 207,011,058 | 7.4 |
| வட்டிச் செலவினங்கள் | (114,869,171) | (118,783,744) | (3.3) | (125,487,671) | (132,580,099) | (5.3) |
| **தேறிய வட்டி வருமானம்** | **82,460,840** | **60,933,782** | 35.3 | **96,874,779** | **74,430,959** | 30.2 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 8,268,168 | 6,723,826 | 23.0 | 9,645,136 | 7,816,265 | 23.4 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | (597,786) | (482,522) | 23.9 | (597,786) | (482,522) | 23.9 |
| **தேறிய கட்டணம் மற்றம் தரகு வருமானம்** | **7,670,382** | **6,241,304** | 22.9 | **9,047,350** | **7,333,743** | 23.4 |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/நட்டம் | (1,345,029) | 2,589,121 | (151.9) | (1,207,608) | 2,785,261 | (143.4) |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | 2,996,670 | 1,951,235 | 53.6 | 5,995,063 | 6,285,845 | (4.6) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **91,782,863** | **71,715,442** | 28.0 | **110,709,584** | **90,835,808** | 21.9 |
| பெறுமதி குறைப்பு கட்டணங்கள் | (14,472,820) | (11,567,174) | 25.1 | (14,485,458) | (17,566,149) | (17.5) |
| வாடிக்கையாளர் கடன்கள் மற்றும் வருமதிகள் | (13,282,540) | (11,828,426) | | (12,863,972) | (17,024,298) | |
| ஏனைய நிதி சொத்துக்கள் | (1,190,280) | 261,252 | | (1,190,280) | 261,252 | |
| ஏனையவை | - | - | | (431,206) | (803,103) | |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **77,310,043** | **60,148,268** | 28.5 | **96,224,126** | **73,269,659** | 31.3 |
| தனிப்பட்ட செலவினங்கள் | (22,771,935) | (19,722,367) | 15.5 | (27,743,883) | (23,693,466) | 17.1 |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | (5,054,904) | (4,191,560) | 20.6 | (5,711,558) | (4,840,424) | 18.0 |
| ஏனைய செலவினங்கள் | (12,234,674) | (11,156,175) | 9.7 | (17,059,613) | (15,418,341) | 10.6 |
| **நிதிச்சேவை மீதான சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரிக்கு முன் செயற்பாட்டு இலாபம்** | **37,248,530** | **25,078,166** | 48.5 | **45,709,072** | **29,317,428** | 55.9 |
| சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி (நிதிச்சேவை) | (6,861,930) | (3,851,486) | 78.2 | (8,473,708) | (4,670,725) | 81.4 |
| **நிதிச் சேவை மீதான சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரிக்கு பின் செயற்பாட்டு இலாபம்** | 30,386,600 | 21,226,680 | 43.2 | 37,235,364 | 24,646,703 | 51.1 |
| இணை நிறுவனங்களில் இலாபம் நட்டங்களின் பங்கு | - | - | - | 10,893 | 878 | 1140.7 |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **30,386,600** | **21,226,680** | 43.2 | **37,246,257** | **24,647,581** | 51.1 |
| வருமான வரிச் செலவினங்கள் | (6,666,457) | (7,051,737) | (5.5) | (9,158,609) | (8,557,095) | 7.0 |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **23,720,143** | **14,174,943** | 67.3 | **28,087,648** | **16,090,486** | 74.6 |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:** | | | | | | |
| வங்கியின் உரிமையாளர்களுக்கு | 23,720,143 | 14,174,943 | 67.3 | 26,350,975 | 15,229,858 | 73.0 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | - | - | | 1,736,673 | 860,628 | 101.8 |
| **இலாபத்தின் மீதான பங்கு ஒன்றிற்கான வருவாய்** | **23,720,143** | **14,174,943** | 67.3 | **28,087,648** | **16,090,486** | 74.6 |
| சாதாரண பங்கிற்கான அடிப்படை இலாபம் | 23,720 | 14,175 | 67.3 | 26,351 | 15,230 | 73.0 |
| சாதாரண பங்கிற்கான குன்றிய இலாபம் | 97 | 58 | 67.3 | 108 | 62 | 73.0 |

### அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

டிசெம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

| | வங்கி | | வங்கி தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **23,720,143** | **14,174,943** | **28,087,648** | **16,090,486** |
| **ஏனைய பூரண வருமானம் வருமானக்கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாதவை** | | | | |
| ஏனைய பூரண வருமானத்தின் ஊடான உரிமை முதல் கருவிகளின் நியாய விலையில் தேறிய இலாபம்/நட்டம் | (316,074) | (67,773) | (312,977) | (12,379) |
| வரையறுக்கப்பட்ட காப்புத்திட்டங்கள் மீதான தேறிய உண்மை வருமானம் மற்றும் நட்டம் | 12,959,137 | (12,151,314) | 12,943,725 | (12,050,743) |
| வரையறுக்கப்பட்ட காப்புத் திட்டங்கள் மீதான பிற்போடப்பட்ட வரி விளைவு | (3,110,193) | 3,402,368 | (3,106,359) | 3,374,264 |
| காணி கட்டிட மீள் மதிப்பீட்டு மிகையில் மூலமான வருமானம் | 3,672,851 | 6,523,641 | 3,822,851 | 6,573,641 |
| காணி கட்டிட மீள்மதிப்பீடு மீதான பற்போடப்பட்ட வரி விளைவு | (881,484) | (1,826,619) | (917,484) | (1,840,619) |
| வருமான வரி மாற்றத்திலான ஆரம்ப மீதி மீதான பிற்போடப்பட்ட வரி விளைவு | 245,293 | - | 245,293 | - |
| **ஏனைய பூரண வருமானம் வருமானக்கூற்றில் மீள்வகைப்படுத்தப்படுபவை** | | | | |
| விற்பனைக்குக் கிடைக்கக் கூடிய நிதியியல் சொத்துக்களை மீள்அளவீடு செய்வதன் மூலமான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் | 713 | (12,418) | (92,557) | (6,616) |
| மேற்கூறப்பட்டவை மீதான பிற்போடப்பட்ட வரி விளைவு | - | - | 30,075 | - |
| வெளிநாட்டு இயக்கங்கள் மீதான நிதி அறிக்கைகள் மாற்றீடுகள் மூலதன தேறிய இலாபம்/நட்டம் | - | - | 174,124 | 45,668 |
| **காலப்பகுதிக்கான வரி நீங்கலான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | 12,570,243 | (4,132,115) | 12,786,691 | (3,916,784) |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | **36,290,386** | **10,042,828** | **40,874,339** | **12,173,702** |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:** | | | | |
| வங்கியின் பங்கு உரிமையாளர்களுக்கு | 36,290,386 | 10,042,828 | 39,105,903 | 11,287,454 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | - | - | 1,768,436 | 886,248 |
| | **36,290,386** | **10,042,828** | **40,874,339** | **12,173,702** |

### காசுப்பாய்ச்சல் கூற்று

டிசெம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

| | வங்கி | | வங்கி தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | **30,386,600** | **21,226,680** | **37,246,257** | **24,647,581** |
| சீராக்கங்கள்: | | | | |
| வரிக்கு முன்னரான இலாபத்தில் அடங்கியுள்ள காசல்லா விடயங்கள் | 21,016,209 | 17,615,543 | 23,549,038 | 25,158,730 |
| தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றங்கள் | 8,218,642 | 70,895,348 | 10,273,834 | 64,805,293 |
| தொழிற்பாட்டு பொறுப்புக்களின் மாற்றங்கள் | 146,020,006 | (31,274,574) | 155,041,174 | (34,755,204) |
| வாடிக்கையாளர்களின் கடன் மற்றும் முற்பணங்களின் மாற்றம் | (214,590,585) | (336,996,380) | (228,511,999) | (332,496,596) |
| வங்கி மற்றும் வாடிக்கையாளர்களின் சேமிப்பு மற்றும் கடன் பத்திரங்களின் மாற்றம் | 236,433,156 | 343,713,519 | 233,480,702 | 346,290,942 |
| துணை மற்றும் இணை கம்பனிகள் மூலமான பங்கு இலாபம் | (1,802,759) | (888,451) | (174,065) | (173,024) |
| துணைநிலைப் படுகடன்கள் மீதான வட்டிச் செலவு | 5,103,325 | 3,689,299 | 6,966,957 | 5,722,717 |
| வரையறுக்கப்பட்ட காப்புத் திட்டங்களுக்கு செலுத்திய பங்களிப்பு | 955,663 | 2,585,372 | 1,081,522 | 2,707,923 |
| வரி பொறுப்புக்களின் மாற்றம் | (7,185,466) | (4,410,290) | (9,544,600) | (7,628,425) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | 224,554,791 | 86,156,066 | 229,408,820 | 94,279,937 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் கொள்வனவுகள் | (1,527,988) | (975,114) | (3,253,303) | (1,863,915) |
| ஆதனம், பொறிகள், உபகரணங்களின் விற்பனை மூலம் பெறுகைகள் | 79,213 | 46,552 | 143,299 | 61,850 |
| நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு | (232,273,659) | (76,792,745) | (236,240,351) | (75,781,540) |
| அருவ சொத்துக்களின் தேறிய கொள்வனவு | (2,013,497) | (196,222) | (2,025,351) | (207,914) |
| துணை மற்றும் இணை கம்பனிகளிலான முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 1,802,759 | 888,451 | 174,065 | 173,024 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு (பயன்படுத்தப்பட்ட)** | (233,933,172) | (77,029,078) | (239,945,748) | (77,618,495) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| துணை கடனில் இருந்து பெறப்பட்ட வருமானம் | 5,000,000 | 20,000,000 | 15,000,000 | 20,000,000 |
| துணை கடனுக்கை செலுத்தப்படும் வட்டி | - | - | - | (4,483,521) |
| துணைநிலை படுகடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவு | (4,799,341) | (2,846,093) | (13,274,526) | (4,884,252) |
| அருவ சொத்துக்களின் தேறிய கொள்வனவு | (2,548,281) | (2,499,141) | (2,904,035) | (2,910,428) |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு செலுத்திய பங்கிலாபம் | - | - | (150,000) | (55,000) |
| உரிமை முதல்கருவிகள் உடமையாளர்களுக்கான விசேட தீர்வை பங்கிலாப கொடுப்பனவு | (2,196,888) | (3,023,670) | (2,196,888) | (3,023,670) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | (4,544,510) | 11,631,096 | (3,525,450) | 4,643,129 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | (13,922,891) | 20,758,084 | (14,062,377) | 21,304,570 |
| காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | 71,461,242 | 50,703,158 | 72,899,208 | 51,594,638 |
| **காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச்சமனானவைகள்** | **57,538,351** | **71,461,242** | **58,836,831** | **72,899,208** |

### வைப்புகள் பகுப்பாய்வு

| | வங்கி | | வங்கி தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2021.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2021.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது |
| **உற்பத்தி ரீதியாக – உள்நாட்டு நாணயம்** | | | | |
| கேள்வி வைப்புக்கள் (நடப்பு கணக்குகள்) | 80,566,734 | 73,516,730 | 79,424,380 | 72,417,368 |
| சேமிப்பு வைப்புக்கள் | 739,759,440 | 652,478,461 | 746,159,304 | 659,615,718 |
| நிலையான வைப்புக்கள் | 1,031,570,632 | 908,538,457 | 1,121,774,448 | 999,944,241 |
| ஏனைய வைப்புக்கள் | 3,879,765 | 3,341,966 | 5,560,569 | 5,992,871 |
| **உப தொகை** | **1,855,776,571** | **1,637,875,614** | **1,952,918,701** | **1,737,970,198** |
| **உற்பத்தி ரீதியாக – வெளிநாட்டு நாணயம்** | | | | |
| கேள்வி வைப்புக்கள் (நடப்பு கணக்குகள்) | 1,450,837 | 1,618,808 | 1,450,837 | 1,618,808 |
| சேமிப்பு வைப்புக்கள் | 25,761,128 | 23,516,130 | 25,761,128 | 23,516,130 |
| நிலையான வைப்புக்கள் | 188,502,877 | 172,071,874 | 188,502,877 | 172,071,874 |
| ஏனைய வைப்புக்கள் | 41,199 | 17,030 | 41,199 | 17,030 |
| **உப தொகை** | **215,756,041** | **197,223,842** | **215,756,041** | **197,223,842** |
| **மொத்த தொகை** | **2,071,532,612** | **1,835,099,456** | **2,168,674,742** | **1,935,194,040** |

### நிதி நிலைமைக் கூற்று

திகதிக்கு

| | வங்கி | | | வங்கி தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2021.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | வளர்ச்சி % | 2021.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | 2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது | வளர்ச்சி % |
| **சொத்துக்கள்** | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 57,538,351 | 71,461,242 | (19.5) | 58,836,831 | 72,899,208 | (19.3) |
5. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகுதி பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் வீதி நிர்மாணத் துறையில் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள தரம் மற்றும் விசேடத்துவத்திற்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பிரதான ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஒப்பந்தத்தை பெற தகுதி பெறுவதற்கான தகைமைகளில் உள்ளடங்குபவை:
   - மேற்படி அட்டவணையின் பிரகாரம் கடந்த 05 வருட காலத்தில் (2016/17 - 2020/21) மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் சராசரி அளவு
   - மேற்படி அட்டவணையின் பிரகாரம் கடந்த 05 வருட காலத்தில் (2017 - 2021) இதனையொத்த தன்மையுடையதும் மற்றும் சிக்கலானதுமான கட்டட நிர்மாண வேலைகளில் (திட்டமானது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாடிகளைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்) ஆகக் குறைந்தது 01 வேலையை நிறைவு செய்துள்ள அனுபவம். (இந்தத் தேவைக்கு இணங்கள், மேற்படி வேலைகள் குறைந்தபட்சம் 70% பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)
   - மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தேவைப்படும் ஆகக் குறைந்த பெறுமதியான திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகள்
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கொழும்பு-2, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, 3ம் மாடி பிரதி பொது முகாமையாளர் (ES &C) அவர்களிடம் எந்த வேலை நாளிலும் மு.ப. 9.00 - பி.ப. 4.00 வரை மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கொழும்பு-2, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, 3ம் மாடி பிரதி பொது முகாமையாளர் (ES &C) அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொலைபேசி: 0112389510)
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள 40,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2022-03-28ஆம் திகதி முதல் 2022-04-20ஆம் திகதி வரை மு.ப. 9.00 - பி.ப. 2.30 மணி வரை கொழும்பு 2 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 3ம் மாடி பிரதிப் பொது முகாமையாளர் (ES&C) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாக செலுத்தப்படல் வேண்டும்.
9. கேள்விப்படிவங்கள் 2022-04-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பத்தரமுல்ல, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, ''செத்சிறிபாய'', 2ஆம் தளம், கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட்கள் தொழில்மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் தலைமை கணக்காளர் அலுவலகத்திற்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாக திறக்கப்படும்.
10. கேள்விப்படிவங்கள் திறக்கப்படும் நாள்முதல் 119 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
11. சகல கேள்விகளுடனும் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்விப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியானது கேள்விப்படிவங்கள் திறக்கப்படும் நாள் முதல் 147 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
12. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2022-04-04ஆம் திகதி பத்தரமுல்ல, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, ''செத்சிறிபாய'', 2ஆம் தளம், கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட்கள் தொழில்மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட்கள் தொழில்மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு,**
**2ஆம் தளம், ''செத்சிறிபாய'',**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பத்தரமுல்ல**

**திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு**

**தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மருதானை தொழில்நுட்பக் கல்லூரியின் மேம்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் வேலைகளுக்காக தரை ஓடுகள், சுவர் ஓடுகள் வழங்கல் மற்றும் குளியலறை இணைப்புக்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான விலைமனு

1. பின்வரும் அட்டவணையின் பிரகாரம் மருதானையிலுள்ள தொழில்நுட்பவியல் கல்லூரியின் மேம்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் வேலைகளுக்காக தரை ஓடுகள் மற்றும் சுவர் ஓடுகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, 557 ஆம் இலக்கத்திலுள்ள தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| விலைமனு இலக்கம் | வழங்கல் வேலையின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | ஆவணக் கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 01. | மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரியில் மேம்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் வேலைகளுக்காக தரை ஓடுகள் மற்றும் சுவர் ஓடுகளை வழங்கல் (DTET/09/01/38/R-05/2022-I) | 375,000.00 | 5,000.00 | 2022.08.04 ஆம் திகதி வரையும் |
| 02. | மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரியின் 4 ஆம் மாடியில் மேம்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் வேலைகளுக்காக குளியலறை இணைப்புக்கள் மற்றும் துணைப்பாகங்களின் வழங்கல் (DTET/09/01/38/R-05/2022-II) | 17,000.00 | 1,000.00 | 2022.07.07 ஆம் திகதி வரையும் |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்கான சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   அ. விலைமனுவில் தேவைப்படுத்தப்பட்டுள்ள கட்டிட நிர்மாண பொருட்கள் அல்லது குறிப்பிடப்பட்ட பொருட்களை வழங்குவதற்காக செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபாரப் பதிவு செய்தல்.
   ஆ. கட்டிட நிர்மாண பொருட்களை வழங்குவதற்காக அனுபவத்துடனான புகழ்வாய்ந்த உள்ளூர் கம்பனியொன்றாக விலைமனுதாரர் இருத்தல்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, 557 ஆம் இலக்கத்திலுள்ள தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பிரிவு, பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாமென்பதுடன் தொடர்பு இலக்கமானது 011-2348894 என்பதாகும்.
5. 2022.03.28 ஆம் திகதியிலிருந்து 2022.04.20 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, 557 ஆம் இலக்கத்திலுள்ள தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்கள 2 ஆம் மாடியின் கணக்கியல் பிரிவிலுள்ள சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, 557 ஆம் இலக்கத்திலுள்ள தொழில்நுட்பகல்வி மற்றும் பயிற்சித் திணைக்கள உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பிரிவின் பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

**I ஆம் பிரிவு - விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகள்:**

6. 2022.04.21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரிடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். ஒப்பந்தப் பெயரானது விலைமனுவின் இடது பக்க மேல் மூலையில் குறிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளிப்பதற்கு விருப்பமுள்ள விலைமனுதாரர்களின் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, தொழில்நுட்பகல்வி மற்றும் பயிற்சித் திணைக்கள பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் 2022.04.06 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
8. எந்தவொரு கேள்வியும் இல்லாமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் எந்தவொரு விலைமனுவையும் முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதற்கான உரிமையை திணைக்கள பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.
9. விலைமனுக்கள் தொழில்நுட்பகல்வி மற்றும் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது நிபந்தனையற்றதும் உத்தரவாதத்துடனான வங்கி உத்தரவாதமாகவும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயலாற்றும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டுமென்பதுடன் 2022.08.04 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தொழில்நுட்பகல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,**
**557, ஒல்கட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

# மேல் மாகாண சபை

## மாகாண பொறியியல் பணியகம்

## நிர்மாண வேலைகள், பொருள் மற்றும் சேவை வழங்குநர்கள், ஆலோசனை சேவை வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2022/ 2023

மேல் மாகாண பொறியியல் பணியகத்தின் பிரதான அலுவலகம் மற்றும் பிராந்திய பொறியியல் அலுவலகங்களினால் செயற்படுத்தப்படவுள்ள நிர்மாண செயற்றிட்டங்களுக்காக ‘‘நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள், சேவை வழங்குநர்கள், ஆலோசனை சேவை வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்கள்’’ என்பவர்களைப் பதிவு செய்து கொள்ள உத்தேசிக்கின்ற நிர்மாண நிறுவனங்கள் மற்றும் நபர்கள், ஆலோசனை சேவைகள் வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022/2023ஆம் வருடங்களுக்காக பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

இதற்கமைய பின்வரும் ஒவ்வொரு வகுதிக்காகவும் 2022/2023ஆம் வருடங்களுக்காக பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

A - வகுதி - நிர்மாண ‘‘வேலை’’க்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

B - வகுதி - பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்கள், ஆலோசனை சேவை வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

B - வகுதியின் பின்வரும் உப வகுதியின் கீழ் வகுதிப்படுத்தப்பட்டுள்ளன.

BA - தொழில்நுட்ப ஆலோசனைச் சேவை வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்கள்

BB - சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்கள்

BC - சேவை வழங்குநர்கள்

BA - **தொழில்நுட்ப ஆலோசனைச் சேவை வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்கள்**

| | | |
|---|---|---|
| BA 1 | கட்டமைப்பு பொறியியல் சேவைகள் | கட்டிட வடிவமைப்பு சேவைகள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 2 | கட்டிடக் கலை சேவைகள் | நிறுவன ரீதியான கட்டிடங்கள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 3 | கட்டிடக் கலை சேவைகள் (உள்ளகம்) | உள்ளக வீட்டு அலங்காரங்கள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 4 | கட்டிடக் கலை சேவைகள் / நிலச் சீராக்கம் | நிலச் சீராக்கம் மற்றும் பராமரிப்பு சேவைகள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 5 | அனுமதிபெற்ற நில அளவையாளர் சேவைகள் | நில அளவைக்கான தகைமை மற்றும் அனுபவம் சகிதம் |
| BA 6 | அளவு மதிப்பீட்டுச் சேவைகள் | கட்டிட அளவு மதிப்பீட்டுச் சேவைகள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 7 | மின் பொறியியல் சேவைகள் | கட்டிட மின்சார பொறியியல் சேவைகள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 8 | பொறிமுறை பொறியியல் சேவைகள் | கட்டிடங்களுக்கு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 9 | பொறிமுறை பொறியியல் சேவைகள் | கட்டிட சேவைகள் (மின் உயர்த்தி முறைமைகள், வளிச்சீராக்க முறைமை மற்றும் தீப் பாதுகாப்பு முறைமை) |
| BA 10 | பொறிமுறை பொறியியல் சேவைகள் | மோட்டார் வாகன தொழில்நுட்பம் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 11 | பட்டய மின் பொறியியலாளர்கள் | மின்சார நிறுவல்களை உறுதிப்படுத்துவதற்காக இமிச வுடன் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் |
| BA 12 | புவியியல் தொழில்நுட்ப விசாரணை சேவைகள் | விசேடமாக தரைப்பரப்பை மேம்படுத்துதல், அத்திவாரத்தை திட்டமிடுதல் மற்றும் மண் பரிசோதனை நிபுணத்துவ சேவைகள் |
| BA 13 | பிரதான திட்ட வரைபடத்தைத் தயாரித்தல் (Master Plan) / ஆலோசனைச் சேவைகள் (Consultants) | மேல் மாகாண சபையின் நிறுவனத்திற்காக பிரதான திட்ட வரைபடத்தைத் தயாரித்தல் (Master Plan) மற்றும் ஆலோசனைச் சேவைகள் |

BB - **சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிறுவனங்கள்**

| | |
|---|---|
| BB 1 | கதவுகள் / யன்னல்கள் / மற்றும் பகுதி பிரித்தல் (பார்டிஷன்) வேலைகளுக்கான அனுமினிய வடிவமைப்பை திட்டமிடுதல் |
| BB 2 | கட்டமைக்கப்பட்ட உருக்கு தயாரிப்பாளர்கள் (உருக்கு மதில்கள், உருக்குக் கட்டிட சட்டகங்கள் போன்றன) |
| BB 3 | உள்ளக மற்றும் திறந்தவெளி தோட்டச் செய்கைகள், புல் பற்றைகளை பதித்தல் மற்றும் நில அலங்கார சேவைகள் |
| BB 4 | கட்டடங்களின் சுவர்களுக்கான உலோக மறைப்புகளை நிறுவுதல் (Wall Cladding) |
| BB 5 | துருப்பிடிக்காத உருக்குக் கட்டமைப்பாளர்கள் (Stainless steel fabricators) |
| BB 6 | தரைக் கம்பளங்கள் வழங்குதல் மற்றும் பொருத்துதல் |
| BB 7 | டிஜிட்டல் அச்சு வேலைகள் மற்றும் பதாகை வரைதல் மற்றும் பெயர்ப் பலகைகள் போன்றன |
| BB 8 | சிறிய வேலைகளுக்கான மரங்களை வழங்குதல் |
| BB 9 | கட்டிட ஆக்கக்கூறுகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (கூரை திருத்தவேலைகள், நிறப்பூச்சு பூசுதல், சாந்து பூசுதல், நிலச் சீராக்கம், மேசன் வேலைகள், மழை நீர்க் குழாய்கள், கதவுகள், யன்னல்கள்) |
| BB 10 | கலிகள் மற்றும் வடிகால் வழிகள் உட்பட நீர்க் குழாய், நீர் வழங்கல் மற்றும் மழை நீர் முறைமைகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| BB 11 | குறைந்த அழுத்த மின் முறைமைகள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| BB 12 | Spilt வகையான வளிச் சீராக்கிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| BB 13 | வடிகாலமைப்பு மற்றும் நீர்ப் பம்பிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| BB 14 | பலகையினாலான தரைகளை அமைத்து மட்டப்படுத்துதல், மெருகூட்டுதல் மற்றும் சீலன்ட் (Sealants) இடுதல் மற்றும் சீமெந்து தட்டு இடுதல் |
| BB 15 | கலி சேவைகள் (கழிவுநீர் தாங்கி, ஊறல் குழிகளை சுத்தப்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) |
| BB 16 | மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |

BC - சேவை வழங்குநர்கள்

| | |
|---|---|
| BC 1 | நீர் முத்திரை இரசாயனங்களை வழங்குநர்கள் / நிறுவுநர்கள் / நீர்க் கசிவு ஒப்பந்தக்காரர்கள் (Water Proofing) |
| BC 2 | பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகள் / கரையான் கட்டுப்பாட்டுச் சேவைகள் |
| BC 3 | அலுவலக தளபாடங்களை திட்டமிடல், வழங்குதல் மற்றும் பொருத்துதல் |
| BC 4 | திரைச் சீலைகள் மற்றும் மழை மறைப்புகளை திட்டமிடல், வழங்குதல் மற்றும் பொருத்துதல் |
| BC 5 | தீப் பாதுகாப்பு மற்றும் நிவாரண முறைமைகளை திட்டமிடல், வழங்குதல் மற்றும் பொருத்துதல் |
| BC 6 | கொங்கிறீட் திருத்தவேலைகள், கொங்கிறீட் நிர்மாணங்களின் பழுதுகள் மற்றும் மூட்டுகள் அல்லது உட்செலுத்தல் முறையைப் பயன்படுத்தி புதுப்பித்தல், துருப்பிடித்தவற்றைப் புதுப்பித்தல் உட்பட்டவை |
| BC 7 | கணனி கிரபிக் / மென்பொருளைப் பயன்படுத்தி கட்டிட முப்பரிமாணங்களை (3D) வடிவமைத்தல் |
| BC 8 | பாதுகாப்பு சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் |
| BC 9 | இன்டர்லொக் கற்கள் வழங்கும் நிறுவனங்கள் |
| BC 10 | வாகனத்திற்கான முழுமையான திருத்தவேலைகள் / வாகனங்களுக்கு நிறப்பூச்சு பூசுதல் |
| BC 11 | வாகன திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள் |
| BC 12 | கணனி மற்றும் துணைப்பாகம் சார்ந்த சேவைகள் வழங்குதல் |
| BC 13 | தொலைபேசி மற்றும் தரவு முறைமை சார்ந்த சேவைகள் வழங்குதல் |

**1.0 தகுதி மூலப்பிரமாணங்கள்**

A - வகுதி - நிர்மாண ‘‘வேலை’’க்கானவை

1.1. கட்டிட நிர்மாணத் துறையின் ICTAD (தற்போதைய நாமம் CIDA) செல்லுபடியாகும் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.2 மேல் மாகாணத்தினுள் வியாபாரப் பதிவு முகவரியொன்று இருத்தல் வேண்டும்.

1.3 அபகீர்த்தியாளர் பட்டியில் உள்வாங்கப்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள நிர்மாணங்களின் தரத்தைப் பேணுவதற்கு முடியாமற் போன அறிக்கைகள் இருத்தல் கூடாது.

B - வகுதி - வழங்குநர்கள், ஆலோசனை சேவை வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களுக்கானவை

1.4 நாளது தரவேற்றம் செய்யப்பட்ட வியாபாரப் பதிவு இருத்தல் வேண்டும்.

1.5 இயைபுடைய தொழில்சார் மற்றும் நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு பரிந்துரைக் கடிதங்களைச் சமர்ப்பிக்க முடியுமாயிருத்தல்

1.6 வாடிக்கையாளர்களின் பட்டியல் மற்றும் செயலாற்றுகை சான்றிதழ்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1.7 இதற்குப் புறம்பாக BA வகுதிக்கு உரித்தான தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவம் அல்லது பதிவு சகிதமான நபர்கள் அல்லது நிறுவனங்களாகவிருத்தல் வேண்டும். (அதாவது கட்டிடக் கலை நிறுவனங்கள், பொறியியல் நிறுவனங்கள் மற்றும் அளவு மதிப்பீட்டு நிறுவனங்கள் போன்றன)

**2.0 பொதுத் தகைமைகள் மற்றும் தேர்வு முறைகள்**

2.1 ஒவ்வொரு வகுதியின் கீழும் பதிவு செய்து கொள்வதற்கான தகைமையைப் பெறுவதற்கு, விண்ணப்பதாரர் மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும். அல்லாவிடில் மேல் மாகாணத்தினுள் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். வியாபாரப் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க முடியாதவிடத்து கிராம சேவையாளரினால் நிரந்தர வதிவு முகவரி/ வியாபார முகவரியை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.2 சகல விண்ணப்பதாரர்களும் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட அனுபவமுடையவர்களாகவிருத்தல் வேண்டும். உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.3 விண்ணப்பப் படிவத்தைப் பரீட்சித்துப் பார்த்ததன் பின் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்) அவர்களினால் பெயரிடப்பட்ட குழுவினால் வியாபார இடத்தைப் பரீட்சித்துப் பார்த்து / மதிபீடு செய்ததன் பின் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

2.4 விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்) தன்னகத்தே கொண்டுள்ளார்.

2.5 2022-04-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்கள் தேவையான மேலதிக விபரங்கள் மற்றும் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்தல் என்பற்றை 2022-03-28ஆம் திகதி முதல் 2022-04-28ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பொறியியல் பணியகத்தின் கட்டிடப் பிரிவிற்கு வருகை தந்து பரீட்சித்துப் பார்க்கலாம் அல்லது 011-2092504 / 011-2092506 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு விசாரித்தறியலாம்.

பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரர்கள் மேல் மாகாண பொறியியல் பணியகத்தின் தலைமை கணக்காளருக்கு ஒவ்வொரு வகுதிக்காகவும் மீளளிக்கப்படாத 1500.00 ரூபா வீதமான கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-03-28ஆம் திகதி முதல் 2022-04-28ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி வரையான காலத்தினுள் விண்ணப்பப்படிவத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சான்றுபடுத்தும் ஆவணங்கள் சகிதம் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ‘‘வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2022/2023’’ எனக் குறிப்பிட்டு 2022-04-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ‘‘பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்), மேல் மாகாண பொறியியல் பணியகம், 5வது மாடி, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்),**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5வது மாடி, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 011-2092504**

---

வாகன ஒழுங்குறுதகை, பேருந்துப் போக்குவரத்துச், சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

# தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்

# ஆலோசனைச் சேவைகளுக்கான கோரல்

1997ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க தேசிய போக்குவரத்து வைத்திய நிலையச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்துச் சேவைகள், ரெயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகனத் தொழில் இராஜாங்க அமைச்சின் கட்டுப்பாட்டில் செயற்படும் இந்த நிறுவனம் ஒவ்வொரு வாகனத்தின் பின்னாலும் ஓர் ஆரோக்கியமான சாரதி இருக்க வேண்டும் என்பதை அதன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

பின்வரும் துறைகளில் ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆர்வமும் அனுபவமும் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கொள்முதல் குழுத் தலைவர் விலைகூறல் மனுக்களைக் கோருகின்றார்.

01. போக்குவரத்து வைத்தியத் துறையில் முன்னோடி என்ற வகையில், நாட்டின் சகல மாவட்டங்களிலும் நாம் 25 கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ளோம். மக்களுக்கான எமது சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் முகமாக, தேவை அதிகமாகவுள்ள சிலாபம் பிரதேசத்தில் கிளை அலுவலகம் ஒன்றை அமைக்க எண்ணியுள்ளோம். அதற்கான சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றைத் தயாரிக்க எமக்கு ஆலோசனை தேவைப்படுகின்றது.

02. நிறுவனத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை தொடர்பாகவும் ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் சம்பளம் மற்றும் ஏனைய அனுகூலங்களை அதிகரிப்பது தொடர்பாகவும் பிரேரணைகளைத் தயாரிப்பதற்கும் எமக்கு ஆலோசனை தேவைப்படுகின்றது.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை என்னும் முகவரியிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையக் கொள்முதல் பிரிவின் (நிர்வாக மற்றும் நிதி) பணிப்பாளரிடம் (தொ: 0112 089 232) பெற்றுக்கொள்ளலாம்.

1. விலைகூறல் மனுக்கள் தேசிய விலைகூறல் நடைமுறைக்கு அமைவாகப் பெற்றுக்கொள்ளப்படும்.

2. உத்தேச மனுதாரர்கள் போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்காளருக்கு எழுத்துமூல வேண்டுகோளை விடுப்பதுடன் மீளப்பெற முடியாத ரூ.500/- என்ற கட்டணத்தையும் செலுத்திய பின்னர் விபரமான விலைகூறல் ஆவணங்களை **2022 மார்ச் 28 முதல் 2022 ஏப்பிரல் 12** வரை வேலை நாட்களில் மு.ப. 10.00 மணிக்கும் பி.ப. 2.00 மணிக்கும் இடையே கொள்வனவு செய்யலாம்.

சீல் வைக்கப்பட்ட விலைகூறல் மனுக்கள் 2022 ஏப்பிரல் 21ஆம் திகதிக்கு முன்னர் இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடையிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கொள்முதல் குழுத் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது நிலையத்தின் கணக்கியல் பிரிவில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “ஆலோசனைச் சேவைக்கான கோரல் (……….பிரிவு)” என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்**
**இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை.**
**தொலைபேசி: 0112812796 / 0112852868 / 0112820393**

---

# கேள்வி கோரல்

**சுகாதார அமைச்சு**

## போதனா வைத்தியசாலை/தாதியர் கல்லூரி/உணவு தொழில்நுட்ப ஆய்வு கூடம்/மெத்சிரிசெவன/பேராசிரியர் அலகு - அநுராதபுரம்

**சிறிய ஜன்னல் வடிவ (Window type) பிளவு வடிவ (split type) வளிச்சீராக்கி இயந்திரங்களை மத்திய வளிச்சீராக்கி இயந்திரம் (Central A/C Systems) மற்றும் குளிர் அறை (Cool Rooms) சேவை மற்றும் பராமரித்தல் வேலைகளுக்கு கேள்வி கோரல் - 2022/2023**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை அநுராதபுரம் தாதியர் கல்லூரி, பேராசிரியர் அலகு, மெத்சிரி செவன மற்றும் உணவு தொழில்நுட்ப ஆய்வுகூடத்தின் 2022/2023 ஆண்டு காலத்திற்காக, சிறிய ஜன்னல் படிவ (Window Type) பிளவு வடிவ (Split Type) வளிச்சீராக்கி இயந்திரம், மத்திய வளிச்சீராக்கி இயந்திரம் (Centreal A/C Systems) மற்றும் குளிர் அறை (Cool Rooms) சேவை மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கு தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி ஆவணங்கள் விநியோகிப்பதற்காக கீழ்க்காணும் தேவைப்பாடுகளை சமர்ப்பிக்குமாறு கேள்விதாரர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. வேண்டுதல் கடிதம்.
2. வியாபார பதிவுச் சான்றிதழ்
3. நிர்மாண அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) EM-4 அல்லது மேற்பட்ட தரத்திற்காக பதிவு செய்திருத்தல் மற்றும் 2022 ஆண்டிற்கு பதிவு செய்திருத்தல் அல்லது
4. ஒப்பந்தக்காரர் 10 வருடத்திற்கு குறையாத காலம் சிறிய ஜன்னல் வடிவிலான (Window type) பிளந்த வடிவிலான (split type) வளிச்சீராக்கி இயந்திரம், மத்திய வளிச்சீராக்கி இயந்திரம் (Central A/C System) மற்றும் குளிர் அறை (Cool Rooms) சேவை மற்றும் பராமரித்தல் வேலைகளை திருப்திகரமாக நிறைவேற்றலை நடத்திச் செல்லல் பற்றிய அனுபவம் இருத்தல்

(தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

மேற்படி சகல தகைமைகளை உறுதி செய்த பிரதிகளை கேள்வி ஆவணங்களுடன் இணைந்து சமர்ப்பித்தல் வேண்டும்.

இவ்வைத்தியசாலையின் காசாளர் அலுவலகத்திற்கு மீளளிக்கப்படாத ரூ.3000.00 தொகையைச் செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொளள்ள வேண்டியதுடன் 2022.03.28 முதல் 2022.04.22 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப.2.45 வரை கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

கேள்விக்கு முன்னரான கூட்டம் 2022.04.19 மு.ப.10.30இற்கு வைத்தியசாலையின் கெட்போர் கூடத்தில் நடைபெறும். இதற்கு சமுகமளித்தல் கட்டாயமாகும்.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் காசாளர் பணிமனைக்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட மீளளிக்கப்படும் ரூ.100,000.00 கேள்விப் பிணையுடன் இரு பிரதிகளுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை, தலைவர், பிரதேச பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு 2022.04.22 ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் அநுராதபுரம் போதனா வைதத்தியசாலை/தாதியர் கல்லூரி/உணவு தொழில்நுட்ப ஆய்வுகூடம் வளிச்சீராக்கி இயந்திரம் சேவை மற்றும் பராமரித்தல் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கேள்வி ஆவணங்கள் 2022/2023 என்று குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்வி ஆவணங்களை திறத்தல் 2022.04.22 மு.ப.10.30 இற்கு கேள்வி ஆவணங்கள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் இடம்பெறும் அந்த நேரத்தில் வருகை தருமாறு கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் இக் கேள்விகோரல் பற்றிய வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர் பிரதேச பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை அநுராதபுரம்.**

நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல்,
கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும்
சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகார சபை

# கேள்வி அறிவித்தல்

**பேலியகொட புதிய மெனிங் சந்தைக் கட்டிடத்தொகுதியின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலையை வியாபார நடவடிக்கைகளுக்காக 05 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் கேள்வி கோரி வழங்குதல்**

01. நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான பேலியகொட புதிய மெனிங் சந்தைக் கட்டிடத்தொகுதியின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலையை 05 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கும் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேள்விச் சபை (கீழ் நிலை) தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். சிற்றுண்டிச்சாலை இடப்பரப்பு விபரம் பின்வருமாறாகும்.

| பரப்பளவு (சதுர அடி) | குறைந்தபட்ச கேள்வித் தொகை (ரூபா) | மாதாந்த வாடகை (ரூபா) | பிணை முறி |
|---|---|---|---|
| 11580 | 15,100,000.00 | 290,000.00 | 350,000.00 |

02. இந்த சிற்றுண்டிச்சாலை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கேள்வித் தொகையாக எதிர்பார்க்கப்படும் ஆகக் குறைந்த தொகை மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரரால் அந்த அடிப்படை விலையை விட அதிக தொகைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருத்தமான செயற்பாட்டாளர் தெரிவுகள் மேற்கொள்ளப்படுவதானது அவ்வாறு கேள்வித் தொகை அடிப்படை பெறுமதியை விட அதிக தொகையைச் செலுத்துவதற்கு முன்வருபவருக்கேயாகும். இந்தத் தொகை மீளளிக்கப்பட மாட்டாது. இதற்குப் புறம்பாக மாதாந்த வாடகை செலுத்துதல் வேண்டும். இந்த மாதாந்த வாடகைத் தொகை ஒவ்வொரு 3 வருடத்திற்கு ஒருமுறை திருத்தம் செய்யப்படும்.
03. இதில் ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவையும் அதற்குரித்தான வரிகள் சகிதம் (2,160.00 ரூபா) செலுத்தி இயைபுடைய கேள்விப் படிவங்களை 2022 மார்ச் மாதம் 28ஆம் திகதி முதல் 2022 ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம். நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் பிரிவில் இலவசமாக கேள்வி விண்ணப்பங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. கேள்விப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரரினால் 105 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் 350,000.00 ரூபா பெறுமதியான பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் பிணை முறித் தொகையை தலைமை அலுவலகத்தின் நிதிப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணபத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். இந்தப் பிணைத் தொகை இல்லாத எந்தவொரு விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பொருத்தமான செயற்பாட்டாளரை தெரிவு செய்ததன் பின் மற்றும் அவரால் உரிய வகையில் பணம் செலுத்தியதன் பின் அந்த விண்ணப்பதாரர்களால் வைப்புச் செய்யப்பட்ட பிணைத் தொகை எவ்வித வட்டியும் இன்றி அவர்களுக்கு விடுவிக்கப்படும்.
05. கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் 2022 ஏப்ரல் மாதம் 31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும். அந்த நேரம் முடிவடைந்த உடனடுத்து பத்தரமுல்ல, "செத்சிறிபாய" கட்டம் -1, 6ஆம் மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவில் கேள்விப்படிவங்கள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் அவ்வேளையில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவம் மற்றும் அடிப்படை விலைக்குக் குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, 'செத்சிறிபாய', நகர அபிவிருத்தி அதிகார சபை, 7ஆம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 0113049008)

**தலைவர்,**
**வருமானக் கேள்விச் சபை (கீழ் நிலை),**
**6வது மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**''செத்சிறிபாய", பத்தரமுல்ல.**

---

சுற்றாடல் அமைச்சு
மத்திய சுற்றாடல் அதிகாரச் சபை

**மாகாண ஆய்வகங்களுக்கு டயோனைசேஷன் செயன்முறைகளை வழங்கல், நேரில் வந்து ஒப்படைத்தல், ஸ்தாபித்தல் மற்றும் செயற்படுத்தல்.**

**ஒப்பந்த இலக்கம் : CEA/AD/PRO/CA/29/2021**
**CEA/AD/PRO/PROJECT/02/2022**

1. பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை இலக்கம் 104 இல் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகாரச் சபை திணைக்களத்தின் வழங்கல் சபைத் தலைவரால் டயோனைசேஷன் செயன்முறைகளை வழங்கல், நேரில் வந்து ஒப்படைத்தல், ஸ்தாபித்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு தகைமைகளையுடைய மனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி நடைமுறையின் கீழ் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. மனுப்பட்டியலில் வகைப்படுத்தப்பட்டுள்ள முழு பக்கேஜ்ஜிற்கும் மனுதாரர்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டும். பகுதியளவில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் பதிலளிக்கப்படாதவை எனக்கருதி நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்கோரலானது, இலங்கை அரசின் வழங்கல் வழிக்காட்டலின் ஊடாக நிர்வகிக்கப்படும் தேசிய போட்டி நடைமுறையின் (NCB) மூலம் நடாத்தப்படுவதோடு மனுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையும் திறன்களையும் கொண்ட மனுதாரர்கள் விலைமனுக்களை முன்வைக்கலாம்.
4. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மேலதிக விபரங்களை **2022.03.28** ஆம் திகதி முதல் **2022.04.12** ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை இலக்கம் 104இல் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகாரச் சபையின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். சாதாரண வேலை நாட்களில் மனுப்பத்திரங்களை இலவசமாக பார்வையிடலாம். (தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 011-2873447, 0112872278 நீடிப்பு - 205)
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2022.03.28 ஆம் திகதி மற்றும் 2022.04.12 ஆம் திகதி வரை தலைவர், மத்திய சுற்றாடல் அதிகாரச் சபை, இலக்கம் 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை** என்ற முகவரியில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.3500.00** ஐ செலுத்தி எழுத்துமூல ஆவணமொன்றை முன்வைப்பதன் ஊடாக ஆங்கில மொழியிலான முழுமையான மனுப்பத்திர தொகுதியை கொள்வனவு செய்திட முடியும். கொடுப்பனவை மத்திய சுற்றாடல் அதிகாரச் சபையின் காசாளருக்கு பணமாக செலுத்தப்பட வேண்டும்.
6. பூரணப்படுத்திய விலைமனுக்கள் இரண்டு பிரதிகளைக் கொண்டிருக்க வேண்டியதோடு, **"முதல் பிரதி"** மற்றும் **"பிரதி"** எனக்குறிப்பிட்டு வெவ்வேறு கடித உறைகளிலிட்டு அவ்விரண்டையும் மேலுமொரு கடித உறையிலிட்டு முத்திரையிடப்பட்டு அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் மேல் பகுதயில் ஒப்பந்த இலக்கம் மற்றும் வழங்கலின் பெயரைக் குறிப்பிட வேண்டியதோடு **2022.04.19** ஆம் திகதி **பி.ப 2.00** மணிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். விலைமனுக்களை பத்தரமுல்லை மத்திய சுற்றாடல் அதிகாரச் சபையில் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்த பெட்டியிலும் இடலாம். பிந்திக்கிடைக்கும் மனுக்கள் மற்றும் இலத்திரனியல் வாயிலாக அனுப்பும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாததோடு அவை நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த பின்னர் மனுதாரர்கள் மற்றும் அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.
7. இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வணிக வங்கியினால் வெளியிடப்பட்ட **"பாதுகாப்பு பிணையொன்று"** சகல விலைமனுக்களுடனும் முன்வைக்கப்பட வேண்டும். பாதுகாப்பு பிணையின் பெறுமதி **ரூ.100,000.00** ஆக காணப்படல் வேண்டும். இப்பாதுகாப்பு பிணை **2022.08.31** ஆம் திகதி வரையில் செல்லுபடியாக வேண்டும். மனுப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திலல்லாத மற்றும் பாதுகாப்பு பிணைகளற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. விலைமனுக்கள் **2022.07.31** ஆம் திகதி வரையில் செல்லுபடியாக வேண்டும்.
9. மனுதாரரின் விண்ணப்பத்தை தயாரித்தல் மற்றும் ஒப்படைப்பதற்கான செலவினை சேவை வழங்குனர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்.
10. **2022.04.04** ஆம் திகதி **மு.ப.11.00** மணிக்கு விலைமனுக்கோரலுக்கான முந்திய கூட்டம் இடம்பெறும்.
11. எந்தவொரு விலைமனுவினையும் முழுமையாக அல்லது பகுதியாக ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிப்பதற்கான முழு அதிகாரமும் திணைக்கள வழங்கல் சபைக்கு உள்ளதோடு திணைக்கள வழங்கல் சபையின் முடிவே இறுதி முடிவாகும்.

**தலைவர்,**
**திணைக்கள வழங்கல் சபை,**
**மத்திய சுற்றாடல் அதிகாரச் சபை,**
**இலக்கம் 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.**
**28.03.2022**

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிலியந்தலை, போகுந்தர, சந்தகிரண மாவத்தை, இலக்கம் 99/1 கொண்ட இடத்தில் வசிக்கும் **ஜயகொடிகே தொன் தில்ருக்ஷி கோகிலானி** (தே.அ.அ. இலக்கம் 748475141V) என்ற நான் பகிரங்க நொத்தாரிசு சாந்தனி செனவிரத்ன அவர்களால் எழுதி உறுதி செய்யப்பட்ட இலக்கம் 227 மற்றும் ஆண்டு 2013.11.01 ஆம் திகதி கொண்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் பிலியந்தலை, போகுந்தர, சந்தகிரண மாவத்தை, இலக்கம் 99/1 கொண்ட இடத்தில் வசிக்கும் **அம்பகஹ ஹேவகே தொன் பாரத்த ரங்க** (தே.அ.அ. இலக்கம் 770170397V) இடம் வழங்கப்பட்ட அதிகாரம் 2022 ஆண்டின் மார்ச் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் ரத்துச் செய்யப்பட்டது என்றும் அன்றைய திகதிக்கு பின் அவர் மூலம் செய்யப்படுகின்ற எந்த ஒரு செயலுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என்றும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம் மற்றும் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன்.

**ஜயகொடிகே தொன் தில்ருக்ஷி கோகிலானி**

---

**Repeat Your ad For Better Offers**

---

இலங்கை புகையிரத சேவைகள்

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை புகையிரத சேவைகளிற்கு, RAIL BENDERS - MECHANICAL (02 WAY) AND PORTABLE SLEEPER DRILLING MACHINES களை வழங்குவதற்கான பெறுகை

**பெறுகை இலக்கம் : SRS/F. 7795**

இலங்கை புகையிரத சேவைகளிற்கு Rail Benders Mechanical (02 way) and portable sleeper Drilling Machines களை வழங்குவதற்காக, உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், இலங்கை புகையிரத சேவைகளின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் (மேஜர்) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரும் முறைமையின் அடிப்படையில் கோரப்படுகின்றது.

விலைமனுதாரர்கள் தம் விலைமனுக்களை, நேரடியாக அல்லது இலங்கையில் தர அங்கீகாரம் பெற்றுள்ள பதிவு செய்யப்பெற்ற முகவர் மூலம் மற்றும் அற்றோணி அதிகாரம் பெற்ற முகவர் மூலம் சமர்ப்பிக்கலாம்.

| Item No. | Description | Qty |
|---|---|---|
| 01 | Rain Benders Mechanical (02 way) | 50 Nos. |
| 02 | Portable Sleeper Drilling Machines | 25 Nos. |

02. விலைமனுக்கள் 2022.05.10 பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும். (இலங்கை நேரம்)
03. பிரதி பொது முகாமையாளரின் (பெறுகை) அலுவலகத்தில் அல்லது வெளிநாட்டு இலங்கை தூதுவரங்களில் (இலங்கை நேரம்) பி.ப. 3.00 மணி வரையும் 2022.05.09ஆம் திகதியன்று மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 8,000/- ரூபாவை அல்லது இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளகூடிய படிவங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தல் திறக்கப்படும்.
05. விலைமனுதாரர் ரூபா 300,000.00 தொகைக்கான விலைமனுப் பிணையமொன்றை வழங்கல் வேண்டும். அல்லது அவர்களின் விலைமனுவின் பகுதியொன்றாக இலகுவில் மாற்றக்கூடிய நாணயத்திற்குச் சமமான தொகையொன்று.
06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு, (மேஜர்)**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை)**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10.**

**இற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.**

07. விலைமனுப் படிவங்களை இலவசமாக பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) இன் அலுவலகத்தில் பரிசீலிக்கலாம்.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்**

**தொலைபேசி இல : 2438078/ 2436818**
**தொலைநகல் இல : 2432044**
**மின்னஞ்சல் : tender2@railway.gov.lk**
**இணையம் : www.railway.gov.lk**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு, (மேஜர்)**
**இலங்கை புகையிரத சேவைகள்**

**குறிப்பீட்டு இல: SRS/F. 7795**

---

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460)**
**1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7 (1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**எனது குறிப்பு இல. கேடிஎஸ்/கேஜீகே/4/2(2)/2017/02/05**
**காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/12/2018/டப்எஸ்/252**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை அரசிற்கு சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷசலிசக் குடியரசின் 2266/35ஆம் திகதிய 2022.02.09 இலக்க அரசாங்க வர்த்தமானியின் III அத்தியாயத்தை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய |
| மாவட்டம் | : கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை |
| கிராம சேவகர் பிரிவு | : அம்பிடிய உடகம வடக்கு (269) |
| கிராமத்தின் பெயர் | : மீகனுவ |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : கடத்திரல் வரைபட இல. 320390 வரைபடத்தின் வலய இலக்கம் 01ல் 06ஆம் படிவத்தில் காணித்துண்டின் இலக்கம் 244 |
| துண்டு இலக்கம் | : 01 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார் 0.0467 |

**யு.ஜே.எம்.எஸ்.எஸ்.பீ. ஜயசிங்ஹ**
**பிரதேச செயலாளர்**
**கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.**

2022.03.24ஆம் திகதி
**கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை,**
**பிரதேச செயலாளர் அலுவலகத்தில்.**

---

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 மார்ச் 30ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 48,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122G016 | LKA18222I308 | LKA36423C311 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 18,000 | 12,000 | 18,000 | 48,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2022 மார்ச் 30 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2022 ஏப்ரல் 01 |
| வழங்கப்படும் திகதி | : 2022 ஏப்ரல் 01 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2022 மார்ச் 23, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள் |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

# பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக விலைமனு கோரல்

இல. 150, கிருல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களத்திற்கு உரித்தான பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | வாகன இலக்கம் | வாகன வகை | வாகனத்தின் விபரங்கள் | விலைமனுக் காப்பீட்டு தொகை ரூ. | பரீட்சித்துப் பார்க்க இயலுமான இடங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 32-4252 | Daihatsu Rocky ஜீப் | விற்பனை செய்வதற்கு | 40,000.00 | பிரதேச நில அளவை அலுவலகம் மினிபே, பல்லேவத்த, ஹசலக |
| 02 | 36-6660 | IMT டிராக்டர் | விற்பனை செய்வதற்கு | 35,000.00 | அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவை |
| 03 | 36-6659 | IMT டிராக்டர் | விற்பனை செய்வதற்கு | 35,000.00 | அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவை |
| 04 | 31-1791 | Mitsubishi ஜீப் | விற்பனை செய்வதற்கு | 40,000.00 | மாகாண அளவையாளர் அலுவலகம், கன்னொருவ பேராதனை |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களை 2022.03.28ஆம் திகதி தொடக்கம் 2022.04.22ஆம் திகதி வரை அரச கடமைகளை மேற்கொள்ளும் நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையான காலப்பகுதியில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரின் நேரடியான கண்காணிப்பின் கீழ் பரீட்சித்துப் பார்க்க முடியும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் கொள்வனவளர்களுக்கு 2022.03.28ஆம் திகதி தொடக்கம் 2022.04.22ஆம் திகதி வரை வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.30 மணி வரையான காலப்பகுதியில் மீளச் செலுத்தப்படாத கட்டணமாக ரூ. 1500.00 தொகையினை நில அளவைத் திணைக்களத்திள் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிப்பது விலைமனு கோருவதற்கான விண்ணப்பப்படிவத்தை நில அளவைத் திணைக்களத்தின் பெறுகைகள் மற்றும் விநியோகப் பிரிவின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலம் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வாகனத்திற்காகவும் வெவ்வேறாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தாமதமாகிக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் 2022.04.25ஆம் திகதி மு.ப. 11.35 மணிக்கு நில அளவைத் திணைக்களத்தின் பெறுகைகள் மற்றும் விநியோகப் பிரிவில் விலைமனுக்கள் திறந்து வைக்கப்படுவதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற முகவர் ஒருவர் மேற்படி நிகழ்வில் பங்குபற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்காக தொலைபேசி இலக்கம் 0112 368106 இனூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**நில அளவையாளர் நாயகம்,**
**இலங்கை நில அளவைத் திணைக்களம்,**
**இலக்கம் 150, கிருல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு -05.**

2022.03.28

பெண்கள் உலகக் கிண்ணம்:

# தென்னாபிரிக்கா-இங்கிலாந்து அரையிறுதி போட்டியில் மோதல்

பெண்கள் உலகக் கிண்ண போட்டியில் இந்திய அணியை கடைசி பந்தில் வீழ்த்திய தென்னாபிரிக்க அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

கிறிஸ்சேர்ச்சில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய பெண்கள் அணி 50 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 274 ஓட்டங்களை பெற்றது.

ஆரம்ப வீராங்கனைகளான ஸ்மிரிதி மந்தனா 71 ஓட்டங்களையும் சபாலி வெர்மா 53 ஓட்டங்களையும் பெற்று வலுச் சேர்த்தனர். மத்திய வரிசையில் அணித் தலைவி மிதாலி ராஜ் 84 பந்துகளில் 68 ஓட்டங்களை குவித்தார்.



பதிலெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி வெற்றி இலக்கை எட்ட கடைசி ஓவர் வரை போராட வேண்டி ஏற்பட்டது. கடைசி ஓவருக்கு வெற்றிபெற தென்னாபிரிக்க அணி 7 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்ட சூழலில் ஒரு நோ போல் பந்துடன் ஒவ்வொரு பந்துக்கும் ஒவ்வொரு ஓட்டமாகப் பெற்று தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.

இதன்போது ஆரம்ப வீராங்கனை லோரா வொல்வார்ட் 79 பந்துகளில் 80 ஓட்டங்களை பெற்றார்.

முன்னதாக வெலிங்டனில் கடந்த சனிக்கிழமை நடந்த போட்டியில் பங்களாதேஷ் அணியை 100 ஓட்டங்களால் இலகுவாக வென்ற நடப்புச் சம்பியன் இங்கிலாந்து அரையிறுதிக்கு முன்னேற்றம் கண்டது.

இதில் இங்கிலாந்து அணி தனது 50 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 234 ஓட்டங்களை பெற்ற நிலையில் பங்களாதேஷ் அணி 48 ஓவர்களுக்கும் 134 ஓட்டங்களுக்கே சுருண்டது.

இதன்படி வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகள் மோதவுள்ளன. 2017 தொடரிலும் இந்த இரு அணிகளும் அரையிறுதியில் மோதியமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக வெளிங்டனில் வரும் புதன்கிழமை நடைபெறும் முதல் அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் மோதவுள்ளன.







44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :..........

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை :..........

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை :..........

வாக்களித்தவர் பெயர் :..........

முகவரி :..........

மொபைல் இல. :..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 02-04-2022 இல. 01





## அர்ஜென்டினா இலகு வெற்றி

உலகக் கிண்ண கால்பந்து தகுதிச் சுற்றில் சோபித்த அர்ஜென்டின அணி 3–0 என, வெனிசுலாவை வீழ்த்தியது.

கட்டார் தலைநகர் டோகாவில், பிஃபா உலகக் கிண்ண கால்பந்து தொடர் இந்த ஆண்டு கடைசியில் (நவ. 21 – டிச. 18) நடக்கவுள்ளது. இதில் மொத்தம் 32 அணிகள் பங்கேற்கின்றன.

இதற்கான, தென் அமெரிக்க அணிகள் பங்கேற்கும் தகுதிச் சுற்றில் 10 அணிகள் விளையாடுகின்றன. இதில் பிரேசில், அர்ஜென்டினா, ஈக்வடோர், உருகுவே என, 4 அணிகள் ஏற்கனவே உலகக் கிண்ணத்திற்கான இடத்தை உறுதி



செய்தன. அர்ஜென்டினாவில் நடந்த தகுதிச்சுற்றுப் போட்டியில் ஆர்ஜென்டினா, வெனிசுலா அணிகள் மோதின.

இதில் அபாரமாக ஆடிய அர்ஜென்டின அணி 3–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அர்ஜென்டினா சார்பில் கான்சலேஸ் (34வது நிமிடம்), டி மரியா (79வது), மெஸ்சி (82வது) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். ஆர்ஜன்டினா இதுவரை விளையாடிய 16 போட்டியில், 11 வெற்றி, 5 சமநிலை என, 38 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. முதலிடத்தில் பிரேசில் (42 புள்ளி) உள்ளது.

## ஐ.பி.எல் ஆரம்பப் போட்டியில் கொல்கத்தா அணிக்கு வெற்றி



சென்னை அணிக்கு எதிரான ஐ.பி.எல் தொடரின் ஆரம்பப் போட்டியில் கொல்கத்தா அணி 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. இந்தியாவில் 15ஆவது ஐ.பி.எல் தொடர் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த முதல் லீக் போட்டியில் 'நடப்பு சாம்பியன்' சென்னை மற்றும் கொல்கத்தா அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட சென்னை அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 131 ஓட்டங்களை பெற்றது. தோனி 38 பந்துகளில் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களை பெற்றார்.

எனினும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 18.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 133 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. ஆரம்ப வீரர் அஜிங்கியா ரகானே 34 பந்துகளில் 44 ஓட்டங்களை பெற்றார்.

இதன்போது சென்னை அணி சார்பில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய ட்வாயன் பிராவே ஐ.பி.எல் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய லசித் மாலிங்கவின் சாதனையை சமன் செய்தார்.

மலிங்கா 122 போட்டியில் 170 விக்கெட்டும், பிராவோ 152 போட்டியில் 170 விக்கெட்டும் வீழ்த்தி உள்ளனர்.

## ஸ்டீவ் ஸ்மித் விலகல்



பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள், டி–20 தொடரில் இருந்து காயம் காரணமாக ஸ்டீவ் ஸ்மித் விலகியுள்ளார்.

பாகிஸ்தான் சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, மூன்று ஒருநாள் (மார்ச் 29, 31, ஏப். 2), ஒரே ஒரு டி–20 (ஏப். 5) போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இத்தொடரில் இருந்து அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் காயத்தால் விலகினார். அண்மையில் முடிந்த டெஸ்ட் தொடரின் போது இவரது இடது முழங்கையில் காயம் ஏற்பட்டது. இவருக்கு பதிலாக சுழற்பந்து வீச்சாளர் மிட்சல் ஸ்வெப்சன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே முன்னணி வீரர்களான டேவிட் வோனர், மெக்ஸ்வெல், ஹேசல்வுட், மிட்சல் ஸ்டார்க், பட் கம்மின் சிற்கு ஓய்வு அளிக்கப்பட்டிருந்தது. வேகப்பந்துவீச்சாளர் கேன் ரிச்சர்ட்சன் காயத்தால் பங்கேற்கவில்லை. தற்போது ஸ்மித் விலகியது, அவுஸ்திரேலியாவுக்கு பின்னடைவாக அமையும்.

## இங்கிலாந்துடனான டெஸ்ட தொடரில் மேற்கிந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு

இங்கிலாந்துடனான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி வாய்ப்பை நெருங்கியுள்ளது.

சென் ஜோன்ஸ் அரங்கில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியில் கடந்த சனிக்கிழமை மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின்போதும் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடும் இங்கிலாந்து அணி 103 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து தடுமாறுகிறது.

அபாரமாக பந்து வீசிய கைல் மெயர்ஸ் 13 ஓவர்களில் வெறுமனே 9 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இதில் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 204 ஓட்டங்களுக்கு சுருண்டதோடு மேற்கிந்திய தீவுகள் அணி



முதல் இன்னிங்ஸில் 297 ஓட்டங்களை பெற்றது. விக்கெட் காப்பாளர் ஜோசுடா சில்வா ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களை பெற்றார்.

மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 10 ஓட்டங்களால் முன்னிலை பெற்றபோதும் வெறும் இரண்டு விக்கெட்டுகள் மாத்திரமே எஞ்சி இருக்கும் நிலையில் மேற்கிந்திய தீவுகளுக்கு சவாலான இலக்கொன்றை நிர்ணயிப்பது கடினமாக உள்ளது.

கிறிஸ் வோக்ஸ் 9 ஓட்டங்களுடனும் ஜன் லீச் ஒரு ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர்.

ஏற்கனவே நடைந்த முதல் இரு டெஸ்ட் போட்டிகளும் சமநிலையில் முடிந்ததால் இந்த டெஸ்டில் வெற்றி பெறும் அணி தொடரை கைப்பற்றும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.